# தமிழ் மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

# தரம் 8




தமிழ் மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா.
இணையத்தளம்: www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk



அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CP/HZ/CARFAX T.M.V. HATTON
724
LIBRARY

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 8

(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர் வழிகாட்டி

தரம் - 8

HAJ CARFAX T.M.V. LIBRARY

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

முதலாம் பதிப்பு : 2017

தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித்துறை,

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

இலங்கை.

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
சிசாரா பிரின்ட்வே பிரைவட் லிமிட்டட்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

பிரபஞ்ச அறிவு வளர்ச்சியைக் கவனத்திற்கொண்டு பாடத்திட்டத்தை மாற்றி அமைப்பதானது காலத்தின் தேவையாகும். அவ்வாறு இடம்பெற்ற புதிய பாடத்திட்ட மறுசீரமைப்புக்கிணங்க புதிதாக எழுதப்பட்ட பாடநூல்களை மாணவர் பயன்பாட்டிற்கு உட்படுத்தும் செயற்பாடு 2015 ஆம் ஆண்டு ஆரம்பமானது. அந்த வருடம் தரம் 6, தரம் 10 வகுப்புகளுக்காகப் புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இச்செயற்பாட்டின் மற்றுமொரு கட்டமாக 2017 ஆம் ஆண்டுமுதல் தரம் 2 இற்கும் 8 இற்கும் புதிய பாடநூல்களை அச்சிட்டு வழங்குவதற்குக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்திற்கிணங்க எழுதப்பட்ட பாடநூல்களுக்கு இசைவாக மாணவர்களுக்குக் கல்வியை வழங்கும்போது ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறைக்கும் பொருட்டு தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆசிரியர் வழிகாட்டிகள் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆக்கப்பட்ட இந்நூலை அச்சிட்டு உங்கள் கைகளில் வழங்குவதன் மூலம் நாம் எதிர்பார்ப்பது எதிர்கால உலகிற்கு பொருந்தக்கூடிய சிறந்த பிரசைகளை உருவாக்குவதற்காக நீங்கள் படும் சிரமத்திற்கு உதவியொன்றை வழங்குவது மட்டுமே. இவ்வாசிரியர் வழிகாட்டியை மட்டும் வெறுமனே செயற்படுத்துவதற்குப் பதிலாகப் படைப்பாற்றல் மிக்க ஆசிரியர் வகிபாகத்தை வழங்கி எதிர்பார்க்கும் மாணவர் அடைவு மட்டத்தை நோக்கி உங்கள் மாணவர்களை வழிநடத்துவதற்கு வழிகாட்டுவது மாத்திரமே இந்நூல் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. வெற்றிகரமான ஆசிரியரொருவராக உங்களிடம் எதிர்பார்க்கின்ற கற்பித்தல் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இந்நூல் உங்களுக்கு உதவுமென எண்ணுகின்றேன்.

டபிள்யூ.டி. பத்மினி நாளிகா
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய,
பத்தரமுல்ல.
2016.06.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை யெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்துகொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும்கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**சங்கைக்குரிய, கலாநிதி மாபுல்கொட சுமனரதனதேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை**

பேராசிரியர், கலாநிதி வ.மகேஸ்வரன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.
பேராசிரியர், கலாநிதி க.விசாகரூபன்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திரு.க. இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி ரமீஸ் அப்துல்லா,
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
திருமதி. ரூபி வலன்ரினா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.
கலாநிதி சி.யூ.ஸ்ரீதர்
சிரேஷ்ட விரிவுரையாளர், சப்ரகமுவ பல்கலைக்கழகம்.
திரு. லெனின் மதிவானம்
பிரதி ஆணையாளர் கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய.
செல்வி. வி. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்**

திரு. மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி.நா.சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு**

திரு. மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.
திரு. ந.அருளானந்தம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம் மாத்தளை.
திரு. த.யுவராஜன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.
திரு. ந.யோகலிங்கம்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், இரத்தினபுரி.
திருமதி. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம், கண்டி.
திரு. சி.ரமேஸ்
யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
திரு. ந.குகபரன்
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

**மொழிப் பதிப்பு**

திரு. மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித்துறை,

**கணினிப் பதிப்பு**

திருமதி ந.நந்தினி
தேசிய கல்வி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் எனும் பாடம், வாரமொன்றுக்கு ஐந்து பாடவேளைகளாக 06 - 11ஆந் தரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இத் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் பொருளுணர்ந்து வாசிப்பதற்கும், எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்பிழை, வாக்கியப்பிழை, பொருட்பிழை, மரபுப்பிழை இன்றி எழுதவும் பேசவும் மொழியைப் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும்.

06 - 11 ஆந் தரங்களுக்காகத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி, தமிழ்மொழியும் இலக்கியமும் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்களைக் கொண்டமைந்துள்ளது. ஒவ்வொரு தேர்ச்சி மட்டங்களும் உள்ளடங்கும்வகையில் பாட முன்னாயத்தம் தயார்படுத்து வதற்கான செயற்பாடுகள் தரப்படுகின்றன. இவற்றை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய பாடங்களுக்கும், மாணவர்களின் வகுப்பறைச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வகையில் பாடத்திட்டத்தினை ஒழுங்குபடுத்திக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது, பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக்கொள்ளலாம். தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடம் செயன்முறைச் செயற்பாடுகளையும் அடிப்படையாகக்கொண்டு கற்றல் - கற்பித்தலை முன்கொண்டு செல்வதற்கு எதிர்பாக்கப்படுகின்றது. பொருத்தமாகத் திட்டமிட்டு, சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களுடைய திறனை மேலும் வலுப்படுத்த முடியும்.

கற்றல் - கற்பித்தல், மாணவர் மையமாகக் கொண்டு வகுப்பறையில் இடம்பெறுவதனால், அதற்கேற்ப இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதன்படி கற்றற் பேறுகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஒரு அலகைக் கற்பித்த பின்னர் எதனைத் தெரிந்திருக்க வேண்டும், அல்லது எதனை மதிக்க வேண்டும் அத்தகைய பேறுகளை எந்தளவுக்கு அடைய வேண்டுமென்பதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, மாணவர்களின் குறிப்பான செயல் அவதானிக்கப்பட வேண்டும், அவர்களது செயற்பாடு அளவிடப்பட வேண்டும், அத்தகைய செயற்பாடு மாணவர்களினாலே மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதில் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் சிறப்பான முறையில் கற்பிப்பதற்கு பாடத் தலைப்புக்குப் பொருத்தமான தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவர்களுடைய திறன்களை விருத்தி செய்யக்கூடிய கற்பித்தல் சாதனங்களை அவர்களது நுண்ணறிவுக்கேற்ப, தயாரித்து வகுப்பறை முகாமைத்துவத்தில் வெற்றியடைய எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் செம்மையாகக் கற்பிப்பதனூடாக, மாறிவரும் உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்க வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இந்த வழிகாட்டி தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**திரு.மு.தயாநிதி**
**செயற்றிட்டத் தலைவர்**
**தமிழ்மொழி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii - iv |
| 02. | கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | v |
| 02. | முன்னுரை | vi |
| 03. | கலைத்திட்டக் குழு | vii |
| 05. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய ஆலோசனைகள் | viii |
| 06. | தேசிய இலக்குகள் | x |
| 07. | அடிப்படைத் தேர்ச்சிகள் | xi - xii |
| 08. | பாடத்திட்டம் | xiii - xxv |
| 09. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1-107 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 மார்கழி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும்மேற்பவினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.1 எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளுக்கு ஏற்ப,சொற்களைச்செம்மையாக உச்சரிப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடை<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள் | • லகர, ழகர, ளகர எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார்.<br>• ணகர, நகர, னகர எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார்.<br>• டகர, ரகர, றகர எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார்.<br>• கிரந்த எழுத்துக்களை ஒலி வேறுபாடுகளுடன் உச்சரிப்பார். | 02 |
| | 1.2 பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார். | • விழுமியக் கருத்தும் ஓசை நயமும் சொல் நயமும் பொருள் நயமும் கொண்ட செய்யுள்கள்<br>• நாட்டார்பாடல்கள் | • பாடலை / செய்யுளை ஓசையோடு ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளை மனனம் செய்து ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளை உச்சரிப்புத் தெளிவுடன் சொல்லுவார் / ஓதுவார்<br>• பாடலை / செய்யுளை பொருள் விளங்கிச் சொல்லுவார் / ஓதுவார்<br>• பாடலை / செய்யுளை உணர்ச்சி வெளிப்பாட்டுடன் சொல்லுவார் / ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளை முறைப்படி அறிந்து ஓதுவார். | 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.3<br>கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார். | • செய்யுள்கள்<br>• கதைகள்<br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள்<br>• உரையாடல்கள்<br>• மேடைப் பேச்சு<br>• துண்டுப் பிரசுரம்<br>• நாடகங்கள் | • பிரதான கருத்தை இனங்கண்டு கூறுவார்.<br>• ஒரு விடயத்தைச் செம்மையாகக் கேட்டுக் கிரகித்து வெளிப்படுத்துவார்.<br>• துணைக் கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.<br>• கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• பிரதான, துணைக் கருத்துக்களைத் தொகுத்து, சாராம்சத்தைக் கூறுவார்.<br>• குறித்த விடயம் தொடர்பாகத் தமது அபிப்பிரா யத்தை முன்வைப்பார்.<br>• நயந்த பகுதியினை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார். | 02 |
| | 1.4<br>செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | • செய்யுள்கள்<br>• கவிதைப் பகுதிகள்<br>• உரைநடைகள்<br>• கதைப் பாடல்கள்<br>• நாட்டார் பாடல்கள்<br>• சொற்பொழிவுகள்<br>• நாடகங்கள் | • ஒரு விடயத்தை விருப்புடன் கேட்டுக் கிரகித்துக் கொள்வார்.<br>• கேட்ட விடயத்தைக் குறிப்பெடுப்பார்.<br>• விடயத்தினை விளக்குவதற்குத் தரவுகளைச் சேகரிப்பார்.<br>• தகவல்கள், விடயங்கள் பற்றிய சொந்த அபிப் பிராயங்களைக் கூறுவார்.<br>• தகவல்கள், தரவுகள் அடிப்படையில் முடிவுக்கு வருவார்.<br>• தகவல்/அபிப்பிராயம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை எடுத்துக் காட்டுவார். | 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார். | 2.1 தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார் | • உரைநடைகள்<br>- உரையாடல் பகுதி<br>- உரைச்சித்திரம்<br>- விவாதம்<br>- கட்டுரை<br>- சிறுகதை<br>- விவரணச் சித்திரம்<br>- நேர்காணல் | • உரையாடல் மூலம் பொருத்தமான விடயத்தினைத் தெளிவாக வெளிப்படுத்துவார்.<br>• ஒரு கருத்தினை விடயத் தெளிவுடன் முன்வைத்து விளக்குவார்.<br>• தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை மற்றவர்களிடம் எடுத்துக் கூறுவார்.<br>• பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்துக்களைப் பண்புடன் கூறுவார்.<br>• கலந்துரையாடலின்போது ஏனையோர்களுடைய பேச்சை அவதானித்து, தமது கருத்துக்களை முன்வைப்பார்.<br>• எடுத்துக்கொண்ட விடயத்தினைத் தமது சொந்த அனுபவத்தினூடாக விபரிப்பார். | 07 |
| 3.0 பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப் படுத்திப் பேசுவார். | 3.1 பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப, நடித்துப் பேசுவார். | • நாடகங்கள்<br>• சிறு கதைகள்<br>• நாட்டார் பாடல்கள்<br>• தனி நடிப்பு | • பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில், உச்சரிப்புத் தெளிவுடன் உரையாடுவார்.<br>• பொருத்தமான தொனி, முகபாவம், அங்க அசைவுகளுடன் உரையாடி நடித்துக்காட்டுவார்.<br>• ஏனையோருடன் ஒத்திசைவாகச் சேர்ந்து நடிப்பார்.<br>• கருப்பொருள் வெளிப்படும் வகையில் இயல்பாக நடிப்பார்.<br>• நடிக்கும் உத்தியினைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பார். | 06 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.2 பாவனை செய்து பேசுவார். | • அறிவிப்புகள்<br>• நிகழ்ச்சித் தொகுப்புக்கள்<br>• விளம்பரங்கள்<br>• கதைகள்<br>• சுயசரிதை<br>• நேர்முக வர்ணனை | • பாவனை செய்யும் திறனைப் பெற்று வெளிப்படுத்துவார்.<br>• பல்வேறு பாத்திரங்களின் தொனி வெளிப்படப் பாவனை செய்து பேசுவார்.<br>• ஒரே சமயத்தில் ஒருவர் பல்வேறுபட்ட பாத்திரங்களின் தொனியை ஏற்றுப் பேசுவார்.<br>• நிகழ்ச்சிகளைத் தொகுத்து அவையினை விளித்து, தொனி வேறுபாடுகளுடன், சரளமாகப் பேசுவார். | 03 |
| 4.0 தமது எண்ணங்களைகேட்போர் உளங் கொள்ளத் தக்கவகையில்எடுத்துரைப்பார். | 4.1 ஆக்கத்திறன் வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார். | • செய்யுள்கள்<br>• முடிவுபெறாத கதைகள்<br>• சம்பவ விபரிப்பு<br>• அனுபவக் கட்டுரைகள்<br>• சொற்பொழிவுகள் | • வழங்கப்படும் விடயத்தினைத் தொடர்ந்து விரித்துக் கூறுவார்.<br>• கொடுக்கப்பட்ட விடயத்தினைத் தெளிவாகக் கூறுவார்.<br>• வழங்கப்படும் சொல், சொற்றொடர்களை விபரித்துக் கூறுவார்.<br>• விடயங்களைத் தொடர்புபடுத்தித் தெளிவாகக் கூறுவார்.<br>• ஒரு விடயம் பிறருக்கு விளங்கும் வகையில் கூறுவார்.<br>• தாம் பெற்ற அனுபவங்களைப் பிறருக்கு விளக்கிக் கூறுவார். | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 4.2 எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக, பொருட் செறிவோடு, பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- சிறுகதைகள்<br>- கதைகள்<br>- கட்டுரைகள் | • பொருத்தமான தலைப்பினைத் தெரிவு செய்து, தலைப்புக்கேற்ப சட்டகத்தினை அமைத்துப் பேசுவார்.<br>• தலைப்புக்கு ஏற்ற வகையில் பேசுவார்.<br>• சபைக்கு ஏற்றவாறு, பொருள் மாறுபடாமல் பேசுவார்.<br>• முகபாவம், தொனி, நேரக் கட்டுப்பாடு போன்றவற்றை அனுசரித்துப் பேசுவார்.<br>• முக்கியமான கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுத்து, தர்க்கித்துப் பேசுவார்.<br>• பழமொழிகள், உவமைகள் போன்றவற்றைக் கையாண்டு பேசுவார். | 03 |
| 5.0 ஆக்கபூர்வமான செயல் திறன் உடைய வாசகராகச் செயற்படுவார். | 5.1 விடயத்தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | • செய்யுள்கள்<br>- கவிதைகள்<br>• உரைநடைகள்<br>- சிறுகதைகள்<br>- நாடகங்கள் | • வாசிப்புப் பொறிமுறைத் திறன்களை அனுசரித்து வாசித்துக் காட்டுவார்.<br>• தெளிவாக உச்சரித்து, ஒலி வேறுபாடுகளுக்கு ஏற்ப வாசித்துக் காட்டுவார்.<br>• தொனி பேதங்களுடன், உரிய வேகத்தில் வாசித்துக் காட்டுவார்.<br>• சொற்களைப் பொருத்தமுறச் சேர்த்தும் பிரித்தும் வாசிப்பார்.<br>• குறிகளை அனுசரித்து வாசிப்பார்.<br>• ஆக்கங்களின் அமைப்பை அனுசரித்து, ஆழமாக வாசிப்பார்.<br>• பிறருக்கு விளங்கும் வகையில் வாசித்துக் கருத்துக்களை முன் வைப்பார். | 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 6.0 கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | 6.1 மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார். | • செய்யுள்கள் கவிதைகள்<br>• உரைநடைகள் | • பிரதான கருத்து, துணைக் கருத்துக்களைக் கூறுவார்.<br>• வாசித்த பகுதியைச் சுருக்கி, சொந்த மொழிநடையில் கூறுவார்.<br>• அரும்பதங்களை அறிந்து கூறுவார்.<br>• பாத்திரங்களின் இயல்புகளைக் கூறுவார்.<br>• பெற்றுக்கொண்ட படிப்பினைகளை முன்வைப்பார்.<br>• படைப்புக்களின் ஊடாக, ஆசிரியரின் கருத்துக்களை அறிந்து கூறுவார்.<br>• படைப்பின் பின்னணி, மொழிநடை பற்றிக் கூறுவார். | 03 |
| | 6.2 பல்வேறு நோக்கங்களுக் காக வாசிப்பார். | • செய்யுள்கள் (நீதி நூல்கள்)<br>• உரைநடைகள்<br>- கடிதம்<br>- அழைப்பிதழ்<br>- துண்டுப்பிரசுரம் | • தகவல்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்திக் கூறுவார்.<br>• சேகரித்த தகவல்களை வாசித்துக் காட்டுவார்.<br>• நடைமுறைத் தேவைகளுக்கான ஆக்கவடிவங்களின் அமைப்பை அறிந்து எழுதி வாசித்துக் காட்டுவார்.<br>• பல்வேறு விடயங்களை முன்வைப்பார்.<br>• மதிப்பீடு செய்துகொள்வார். | 03 |
| 7.0 இரசனைக்காக வும், ஆக்கத் திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார். | 7.1 படைப்புக்களை வாசித்து நயப்பார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- சிறுகதைகள்<br>- நாடகங்கள் | படைப்புக்கள் பற்றி அறிந்துகொள்வார்.<br>• படைப்பின் உள்ளடக்கம் பற்றி அறிந்துகொள்வார்.<br>• படைப்பின் நுட்பங்களை அறிந்துகொள்வார்.<br>• செய்யுள்களில் அணி, ஓசைநயம், குறியீடு, கற்பனை, படிமம் முதலியன பற்றி அறிந்துகொள்வார்.<br>• சிறுகதை, நாடகம், முதலானவற்றின் களம், பாத்திரங்கள், சமூகப்பின்னணி முதலானவை பற்றி அறிந்து ஆக்கங்களில் பயன்படுத்துவார்.<br>• விழுமியக் கருத்துக்களை அறிந்து செயற்பட முன்வருவார்.<br>• விடயப் பரப்பினூடாக வரும் படிப்பினைகளை உணர்ந்து எழுதுவார். | 14 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 8.0 அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறி முறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங் களைத் தெளிவாக எழுதுவார். | 8.1 எழுத்துப் பொறிமுறைகளைஅனுசரித்து, வழுவின்றி நேர்த்தியாக எழுதுவார். | • எழுதுதல் (பயிற்சி)<br>- சொற்கள்<br>- சொற்றொடர்கள்<br>- வாக்கியங்கள்<br>- பந்திகள் | • எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி, சுயமாக எழுதுவார்.<br>• தெளிவாக எழுதுவார்.<br>• எழுத்துக்களுக்கிடையேயும், சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடைவெளி வரத்தக்க வகையில் எழுதுவார்.<br>• நேர்த்தியாக எழுதுவார்.<br>• நிறுத்தக் குறியீடுகளுடன் எழுதுவார். | 02 |
| | 8.2 அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார். | • சொற்கள்<br>• சொற்றொடர்கள்<br>• வாக்கியங்கள்<br>• பந்திகள்<br>• சிறுகதைகள்,<br>• சிறுகட்டுரைகள்,<br>• பாடல்கள்,<br>• விடுகதைகள்,<br>• பழமொழிகள் | • அவதானமாகக் கேட்டுக் கிரகித்து எழுதுவார்.<br>• ஏற்ற வேகத்துடன் எழுதுவார்.<br>• வரிவடிவத்தை அனுசரித்து எழுதுவார்.<br>• ஒலி வேறுபாடுகளை அனுசரித்து எழுதுவார்.<br>• பிழையின்றி எழுதுவார்.<br>• நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகக் கையாண்டு எழுதுவார். | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 9.0<br>வாசித்துக் கிரகித்த வற்றைத் தெளிவாக எழுதுவார். | 9.1<br>வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். | • செய்யுள்கள்<br>• உரைநடைகள்<br>- கதைகள்<br>- கடிதங்கள்<br>- உரைச்சித்திரம்<br>- கட்டுரைகள்<br>- உரையாடல்கள்<br>• நாடகங்கள்<br>• நாட்டார்பாடல்கள் | • கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவார்.<br>• பிரதான கருத்தை இனங்கண்டு எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை எழுதுவார்.<br>• விடயத்தினைச் சுருக்கியும் விரித்தும் எழுதுவார்.<br>• படைப்புக்களிலுள்ள சிறப்புக்களை எழுதுவார்.<br>• வாசித்த விடயம்தொடர்பான அபிப்பிராயத்தை ஒழுங்காகவும், தெளிவாகவும் நேர்த்தியாகவும், எழுதுவார்.<br>• விமர்சனம் செய்து எழுதுவார். | 14 |
| 10.0<br>எழுத்தாக்க நுட்பங் களைப் பயன்படுத்தி வழுவின்றிஎழுதுவார். | 10.1<br>வழுவின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார். | • உரைநடைகள்<br>• பயிற்சி<br>- வாக்கியம் அமைத்தல். | • எழுவாய், பயனிலை இயைபுடன் எழுதுவார்.<br>• திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றுக்கேற்ப எழுதுவார். | 04 |
| | 10.2<br>கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார். | • உரைநடைப் பகுதி<br>- பந்தி<br>- கட்டுரைகள்<br>- பத்திரிகைகள் | • பிரதான கருத்தினை எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை எழுதுவார்.<br>• கருத்துத் தொடர்புடன் எழுதுவார்.<br>• வாக்கிய இயைபுடன் எழுதுவார்.<br>• ஒழுங்கு முறையில் எழுதுவார்.<br>• நிறுத்தக் குறியீடுகள் இட்டு எழுதுவார்.<br>• பந்தி அமைக்கும் முறையை அறிந்து எழுதுவார்.<br>• பிரதான கருத்தை விரித்துரைத்து எழுதுவார். | 17 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 11.0<br>படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாகப் படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | 11.1<br>பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். | • செய்யுள்கள்<br>- பாடல்கள்<br>• உரைநடைகள்<br>- கட்டுரைகள்<br>- கதைகள்<br>- உரையாடல்கள்<br>- உரைச்சித்திரம்<br>• நாடகங்கள் | • ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு என்பன பொருத்தமுற எழுதுவார்.<br>• அவதானிப்புகள், அனுபவங்கள், சிந்தனைகளை அனுசரித்து எழுதுவார்.<br>• பந்திகளைத் தொடர்புபட அமைப்பார்.<br>• தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் எழுதுவார்.<br>• பொருத்தமான மொழிநடையில் எழுதுவார்.<br>• வாசிப்போருக்குப் புரியும் வகையில் எழுதுவார். | 04 |
| | 11.2<br>நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். | • கட்டுரை • கடிதம்<br>• அழைப்பிதழ் • விளம்பரம்<br>• அறிக்கை • துண்டுப்பிரசுரம்<br>• செய்திகள் • பத்திரிகை<br>• வானொலி • தொலைக்காட்சி<br>• மேடைப்பேச்சு • வரவேற்புரை<br>• தலைமையுரை • பாராட்டுரை<br>• நன்றியுரை • விமர்சனம்<br>• விவாதம் • நேர்காணல் | • விடய அமைப்பு, பொருத்தமாக இருக்குமாறு எழுதுவார்.<br>• தலைப்புக்கு / கேட்கப்பட்ட விடயத்துக்குப் பொருத்தமாக எழுதுவார்.<br>• விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும், தொடர்ச்சியாகவும், நேர்த்தியாகவும் எழுதுவார்.<br>• கேட்டுக் கிரகித்து எழுதுவார்.<br>• இலக்கண வழுவின்றி எழுதுவார்.<br>• தர்க்கித்து எழுதுவார்.<br>• விருப்பை ஏற்படுத்தும் வகையில் எழுதுவார்.<br>• உணர்வைத் தூண்டும் வகையில் எழுதுவார்.<br>• பண்புடன் எழுதுவார்.<br>• விமர்சனம் செய்து எழுதுவார்.<br>• மற்றவருக்கு விளங்கும் வகையில் எழுதுவார். | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 12.0<br><br>சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார் | 12.1<br><br>சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை<br>- கட்டுரைகள்<br>- கதைகள்<br>- நாடகங்கள்<br>• விவாதம் | • சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து பிரயோகிப்பார்.<br>- ஒத்த கருத்துச் சொல்<br>- எதிர்க் கருத்துச் சொல்<br>- ஒரு சொல் பல பொருள்<br>- பல சொல் ஒரு பொருள்<br>- மரபுச் சொற்கள்<br>- கலைச் சொற்கள்<br>- பிரதேச வழக்குச் சொற்கள்<br>- திசைச் சொற்கள்<br>- திரி சொற்கள்<br>• அரும்பதங்களைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.<br>• முன்னொட்டு, பின்னொட்டுக்ளை சொல்லாக்கத்திற்கு ஏற்ப பிரயோகிப்பார்.<br>• சொற்களைச் செம்மையாகப் பிரயோகிப்பார். | 06 |
| | 12.2<br>சொற்றொடர்களின் பொருளையும், வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை | • சொற்றொடர்களின் இயல்பு, பொருள், வகை என்பவற்றை அறிந்து பிரயோகிப்பார்.<br>- மரபுத் தொடர்கள்<br>- உவமை, உருவகம்<br>- இரட்டைக்கிளவி<br>- இணைமொழி<br>- அடுக்குத் தொடர்<br>• சொற்றொடர்களைச் செம்மையாகப் பிரயோகிப்பார். | 15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 13.0 மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாக க்கையாள்வார். | 13.1 எழுத்துக்களின் ஒலிப்பு முறை யையும் வகைதொகை யையும் அறிந்து, பயன்படுத்துவார். | • செய்யுள்<br>• உரைநடை | • எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து பயன்படுத்துவார்.<br>- குறில், நெடில்<br>- ர, ற, / ல, ள, ழ / ந, ண, ன<br>• எழுத்துக்களின் வகை, தொகையை அறிந்து பயன்படுத்துவார்.<br>- உயிரெழுத்து - மெய்யெழுத்து<br>- உயிர்மெய்யெழுத்து - ஆய்த எழுத்து | 03 |
| | 13.2 சொற்களின் இயல்பையும் வகையையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• கவிதை<br>• பொருத்தமான உரைநடைப் பகுதிகள்<br>- உரையாடல்<br>- உரைச்சித்திரம்<br>- பொருத்தமான<br>- உரைப்பகுதிகள் | • சொற்களின் வகையை அறிந்து பிரயோகிப்பார்.<br>- பெயர்ச் சொல்<br>- வினைச் சொல்<br>• இணைப்பிடைச் சொற்களை அறிந்து பிரயோகிப்பார்.<br>• கலைச் சொற்களை அறிந்து பிரயோகிப்பர்.<br>• சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் பிரயோகிப்பார். | 13 |
| | 13.3 சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து, பிரயோகிப்பார். | • பொருத்தமான உரைநடைப் பகுதிகள்<br>- உரைச்சித்திரம்<br>- உரையாடல் | • சொற்றொடர், வாக்கியங்கள் என்பவற்றின் வகையை அறிந்து பிரயோகிப்பார்.<br>• வாக்கியங்களின் இயல்பை அறிந்து பிரயோகிப்பார்.<br>• வாக்கியங்களை இயைபுறப் பிரயோகிப்பார்.<br>- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>- திணை, பால், எண், இடம், காலம்<br>- அடைமொழிகள்<br>• சொற்புணர்ச்சிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார். | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 13.4<br>நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகவும் செம்மையாகவும் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• பொருத்தமான உரைப் பகுதிகள் | • நிறுத்தக் குறிகளைப் பொருத்தமுறப் பிரயோகிப்பார்.<br>- முற்றுப்புள்ள<br>- காற்புள்ளி<br>- வினாக்குறி<br>- வியப்புக்குறி<br>- அடைப்புக்குறி<br>- மேற்கோள் குறி | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | 1.0 | 1.1 | நாட்டார் கதைகள் | 02 | 03 |
| 02 | 4.0 | 4.1 | முடிவுறாக் கதைகள் | 03 | 05 |
| 03 | 8.0 | 8.1 | பார்த்தெழுதுதல் | 01 | 07 |
| 04 | 7.0 | 7.1 | கூண்டிற்கிளி | 03 | 10 |
| 05 | 8.0 | 8.2 | மெய்யெழுத்துக்களின் ஒலி வேறுபாடு | 02 | 12 |
| 06 | 6.0 | 6.2 | ஒரு பாட்டுடையான் | 03 | 15 |
| 07 | 13.0 | 13.4 | நிறுத்தக் குறிகள | 02 | 17 |
| 08 | 9.0 | 9.1 | பறவைகளின் இசைவாக்கம் | 04 | 21 |
| 09 | 10.0 | 10.2 | சொல்வதெழுதுல் | 01 | 23 |
| 10 | 1.0 | 1.4 | இராபர்ட் புரூசும் சிலந்திப் பூச்சியும் | 04 | 25 |
| 11 | 19.0 | 10.2 | பந்தி எழுதுதல் | 01 | 26 |
| 12 | 13.0 | 13.1 | எழுத்துக்களின் வகை, தொகை | 03 | 28 |
| 13 | 9.0 | 9.1 | வாழ்வதற்காக வாசி | 03 | 30 |
| 15 | 9.0 | 9.1 | உறவு முறைக் கடிதம் | 04 | 34 |
| 14 | 13.0 | 13.3 | சொற்றொடரும் வாக்கியமும் | 06 | 36 |
| 16 | 5.0 | 5.1 | பேராசிரியர் ம.மு.உவைஸ் | 02 | 38 |
| 17 | 10.0 | 10.1 | வாக்கியம் அமைத்தல் | 04 | 41 |
| | | | **மொத்தப் பாடவேளை** | **48** | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப, வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : எழுத்துக்களின் ஒலிவேறுபாடுகளுக்கேற்ப, சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நாட்டார் கதைகள்

**பாடவேளை** : 02

## கற்றற் பேறுகள்

- கதைகளில் வரும் விடயத்தைக் கூறுவார்.
- பாடப்பரப்பில் கூறப்பட்ட விடயத்தினைத் தெளிவாகக் விளங்கிக்கொள்ளுவார்.
- எந்தவொரு விடயத்தினையும் சாமர்த்திய செயற்பாட்டின் மூலம் வென்றுவிடலாம் என்பதனை உணர்ந்து செயற்படுவார்.
- எந்த விடயத்தையும் செய்யுமுன் அதன் பயனையறிந்து செய்யவேண்டும் என்பதனை உணர்ந்து கூறுவார்.
- பாடத்தில் வரும் (ந, ன, ண, ர, ற, ல, ள, ழ) எழுத்துக்களை அதன் ஒலிப்பு முறைக்கேற்ப உச்சரிப்பார்.
- தமது சொந்த அனுபவங்களையும் கதையோடு இணைத்துக் கூறுவார்.
- ன,ண,ந, ர, ற, ல, ள, ழ எழுத்துக்களை அதன் ஒலிப்பு முறைகளை அறிந்து பொருள் உணர்ந்து எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, கதை கூறுவதற்குரிய தலைப்பு ஒன்றை முன்வைத்தல்.
- குழுக்களாக மாணவர்களைச் செயற்படச் செய்து குட்டிக் கதைகள் என்னும் கதையில் இடம் பெறும் (ன,ண,ந, ர,ற, ல,ள,ழ) எழுத்துக்கள் அடங்கிய சொற்களை எழுதிக்கொள்ள வழிப்படுத்தல்.
- அவ்விதம் எழுதியதற்கு அமைய தாமே தமக்குள் திட்டமிட்ட கதையைக் கூறச் செய்தல்.
- எடுத்துக்கொண்ட நோக்கத்திற்கு ஏற்ப, கதையை ஒப்படையாக மாற்றி உருவாக்க உதவுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- கதைக் கருவைத் தேர்ந்தெடுத்தல்.
- கதை சொல்லும் பாங்கைத் தெளிவுபடுத்தல்.
- ஒலிபேதச் சொற்களைத் தெளிவுபடுத்துதல்.
- ஏற்ற மொழிநடை சொல்லாட்சியைக் கையாண்டு கூறல்.
- பேச்சு வழக்குச் சொற்களைப் பட்டியல்படுத்தித் தெளிவுபடுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்
- ன,ண,ந,ர,ற,ல,ள,ழ எழுத்துக்கள் அடங்கிய சொல்லட்டைகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கொடுத்த தலைப்பை உள்ளடக்கியதாகக் கதை ஒன்றினைக் கூறுவார்.
- கரு, தலைப்புக்கு ஏற்ப, கதையை வளர்த்துச் சொல்லுவார்.
- பொருத்தமான மொழிநடையில் மற்றவர் இலகுவில் விளங்கிக்கொள்ளும் வகையில் சொற்களை உச்சரிப்பார்.

**பின்னிணைப்பு**

**கு.அழகிரிசாமி**



குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளரான இவர் 23.09.1923ஆம் ஆண்டு பிறந்தவர். 20ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்த அழகிரிசாமி கட்டுரை, புதினங்கள், நாடகங்கள், மேடை நாடகங்கள், கவிதைகள், கீர்த்தனைகள், மொழிபெயர்ப்புக்கள் என்று பல துறைகளில் சாதனை புரிந்துள்ளார். மலேசிய தமிழ் நேசன் பத்திரிகையிலும், சோவியத் நாட்டின் பத்திரிகைகளிலும் பணியாற்றியுள்ளார். 1970ஆம் ஆண்டு இவருடைய அன்பளிப்பு எனும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அகடமி விருது வழங்கப்பட்டது. இவரது உறக்கம் கொள்ளுமா எனும் முதல் சிறுகதை 1943ஆம் ஆண்டு ஆனந்த போதினி மாத இதழில் வெளிவந்தது. ரஷ்ய எழுத்தாளர் கார்க்கியின் எழுத்து அவரை மிகவும் கவர்ந்தது. கார்க்கியின் நூலை முதன் முதலில் தமிழாக்கம் செய்தவர். பழைய பாடல்களுக்கு உரையெழுதும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார். பிரசண்ட விகடனில் வெளிவந்த அவரது கதைகளை சமகால எழுத்தாளர்களான வல்லிக்கண்ணனும், புதுமைப்பித்தனும், தெ.மு.சி.ரகுநாதனும், இன்னும் பலரும் பாராட்டினர். அழகிரிசாமியின் முயற்சியால் வெளியான கம்பராமாயணம், காவடிச் சிந்து ஆகிய பதிப்புகள் அவருடைய ஆராய்ச்சித் திறனையும் மொழியாக்க ஆற்றலையும் வெளிப்படுத்தின. பல்திறமையுள்ள இவர் 05.07.1970ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 4.0** : தமது எண்ணங்களை, கேட்போர் உளங்கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : ஆக்கத் திறன் வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : முடிவுறாக் கதைகள்

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்

- ஆசிரியர் கதையின் ஆரம்பத்தைக் கூற மாணவர்கள் அதனைத் தொடர்ந்து கூறுவார்.
- கதைக்குரிய தலைப்பு ஒன்றினை முன்வைக்க, மாணவர் அதனைத் தொடர்ந்து கூறுவார்.
- மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய விதத்தில் புத்தாக்க பூர்வமான கதையாக்கி நிறைவு செய்வார்.
- பழமொழி ஒன்றைக்கூறி, முடிக்கும் வகையில் புதிய முடிவுகளை அமைத்துக் கதை கூறுவார்.
- தமது சொந்த அனுபவங்களையும் அதனுள் சேர்த்துக் கூறுவார்.
- சிறுசிறு கதைகளாக எழுதுவார்.
- தமது எழுத்தாற்றலை விருத்தி செய்து செயற்பாடுகளில் ஈடபடுவார்

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, கதை கூறுவதற்குரிய தலைப்பு ஒன்றை முன்வைத்தல்.
- குழுக்களாக மாணவர்களைச் செயற்படச் செய்து, கதை ஒன்றில் இடம்பெற வேண்டிய விடயங்களைக் கலந்துரையாடி அவற்றை எழுதிக் கொள்ள வழிப்படுத்தல்.
- அவ்விதம் எழுதியதற்கு அமைய தாமே தமக்குள் திட்டமிட்ட கதையைக் கூறச்செய்வித்தல்.
- எடுத்துக்கொண்ட நோக்கத்திற்கு ஏற்ப கதையை ஒப்படையாக மாறிமாறி முன்வைக்கும் ஆற்றலைப் பெற வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- கதைக் கருவைத் தேர்ந்தெடுத்தல்.
- கதைக் கருவை வளர்த்துச் செல்லல்.
- பல்வேறு பாத்திரங்களை அறிமுகப்படுத்தித் துணைக் கருத்துக்களையும் கதையையும் வளர்த்துச் செல்ல வழிப்படுத்தல்.
- ஏற்ற மொழிநடை, சொல்லாட்சி என்பனவற்றைக் கையாண்டு கூறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கொடுத்த தலைப்பை உள்ளடக்கியதாக கதை ஒன்றினைக் கூறுவார்.
- கதைக் கரு, தலைப்பு என்பனவற்றிற்கு ஏற்ப, கதையை வளர்த்துச் சொல்லுவார்.
- பொருத்தமான மொழிநடையில் மற்றவர் இலகுவில் விளங்கிக்கொள்ளும் வகையில் கதையைக் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** **8.0** : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து இலக்கண வழுவின்றி, உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** **8.1** : எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தியாக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : பார்த்தெழுதுதல்

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்**

- எழுத்துக்களை உறுப்பமைய எழுதுவார்.
- திசைமுகம் பற்றி அறிந்து, அதற்கமைய எழுதுவார்.
- எழுத்துக்களுக்கிடையேயும் சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடைவெளி விட்டு எழுதுவார்.
- அவதானமாகக் கிரகித்தவற்றை நேர்த்தியாக எழுதுவார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, ஏற்ற வேகத்தோடு எழுதுவார்.
- உரிய நிறுத்தக் குறிகள் இட்டு, பந்தியொன்றைப் பார்த்தெழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களுடன் கலந்துரையாடி, உறுப்பமைய எழுதும் முறை பற்றி விளக்கம் கொடுத்தல்.
- ஒவ்வொரு எழுத்துக்குமுரிய 'திசை முகம்' பற்றிக் கலந்துரையாடி எழுத வைத்தல்.
- சொற்களுக்கிடையில் இடைவெளி விடும் முறை பற்றி விளக்கமளித்து, அதற்கேற்ப எழுதுவித்தல்.
- பந்தியை நேர்த்தியாக எழுதுவது பற்றிக் கலந்துரையாடி, அவ்வாறே எழுதவைத்தல்.
- கவிதையை அல்லது பாடலை அதன் அமைப்புக்கு ஏற்ப எழுத வேண்டிய முறை பற்றிக் கலந்துரையாடி, செயற்பட வைத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் *( key words)* , எண்ணக்கருக்கள்**

- எழுத்துப் பொறிமுறையிலான வரிவடிவம்
- திசைமுகம் பற்றிய அறிமுகம்
- நிறுத்தக் குறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திசைமுகம் சார்ந்த எழுத்துக்களை எழுதிய சொல்லட்டைகள்
- எழுது கருவிகள்
- எழுது தாள்கள்
- பொருத்தமான கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- உறுப்பமைய எழுத வேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்து அதற்கேற்ப எழுதுவார்.
- திசைமுகம் பற்றிய அறிவு பெற்று, அதற்கேற்பத் துலங்குவார்.
- பந்தியை நேர்த்தியாக எழுதுவார்.
- பாடலை உறுப்பமைய எழுதுவார்.
- சொல்வதெழுதலில் ஈடுபடும்போது, ஏற்ற வேகத்தோடு துலங்குவார்.

**பின்னிணைப்பு**
**பின்வரும் கவிதையைப் பார்த்தெழுதுக.**

திட நம்பிக்கை வளர்த்துக்கொள்
துன்பங்கள் உமை விட்டோடும்
பாடமது கைகூடும்
படிப்பதற்கு இலகுவாக!

ஊக்கமதைக் கைவிடாதே
உண்மையை உரைத்திடுவாய்
பாக்கிவைக்க வேண்டாம் படிப்பில்
தூக்கு நித்தம் புத்தகத்தை!

தன்நம்பிக்கையை வளர்க்க வேண்டும்
தானாய் வரும் சிந்தனைகள்
வெற்றி பெறுவாய் திட்டமதில்
பெற்றிடுவாய் சிறந்த பேறு!

நேர்மை நிதம் வேண்டும்
நெஞ்சில் உறுதி வேண்டும்
வஞ்சகம் நினைக்க வேண்டாம்
கெஞ்சி வாழ வேண்டாம்!

முடிவெடு விடுபடவே
தடங்கலும் ஓடிவிடும்
விடாப்பிடியைக் கைவிடாதே
வீண்வார்த்தையைத் தவிர்த்துக்கொள்!

நம்பகத் தன்மையை உருவாக்கு
நல்ல நண்பனை இணைத்துக்கொள்
நாடிவரும் வெற்றி வேட்கை
தேடிடுவாய் நல்ல வாழ்க்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

### பின்வரும் பந்திகளைப் பார்த்தெழுதுக.

நல்ல முறையில் கற்பிக்கப்பெற்றால் மாணவர்கள் ஆசிரியரிடம் வினாக்கள் கேட்க முன்வருவர். மாணவர்களிடமிருந்து வினாக்கள் கிழம்பத் தொடங்கினால் அது அவர்கள் நன்கு கற்பதன் அறிகுறியாகும். இத்தகைய வினாக்களை ஆசிரியர் நன்கு வரவேற்க வேண்டும். பொருத்தமான வினாக்களை விடுப்பதற்கு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வாய்ப்பினை நல்க வேண்டும். பலர் சேர்ந்தாற்போல் வினாக்கள் விடுப்பதைத் தவிர்த்து ஒவ்வொருவராக வினாக்களைக் கேட்பதற்கு வழிகாட்ட வேண்டும். சில சமயம் மாணவர்கள் விடுக்கும் வினாக்களுக்கு விடைகாண முடியாதநிலையும் ஆசிரியருக்கு ஏற்படக்கூடும். இதை ஆசிரியர் ஒத்துக்கொண்டு மறுநாள் யோசித்துச் சொல்வதாகக் கூறவேண்டும்.

மாணவர்களுக்கு வினாக்களை விடுக்கும் வாய்ப்பினைத் கொடுத்தால்தான் கற்றலில் அவர்கள் நிலையினைப் பல கோணத்தில் அறிந்துகொள்ள முடியும். அவர்கள் கொண்ட தவறான கருத்தினை மாற்றவும், தெளிவற்ற நிலையினைத் தெளிவாக்கவும் வாய்ப்புக்கள் கிடைக்கும். கிண்டலாகவும் குறும்பாகவும் விடுக்கப்பெறும் வினாக்களுக்கும், மேம்போக்காகவும் சிந்திக்காமலும் விடுக்கப்பெறும் வினாக்களுக்கும் விடையிறுக்கும் பொழுது அவ்வாறு வினவினவர்களைக் கடிந்தோ அல்லது அவர்களையே விடையிறுக்கும்படி செய்தோ அவற்றைச் சமாளிக்கலாம்.

மாணவர்கள் தரும் விடைகளை ஆசிரியர் பாராட்ட வேண்டும். அறிவுத் திறனுடன் தரப்படும் விடையினை மெச்ச வேண்டும். யாராவது ஒருவர் தெளிவற்ற முறையில் விடையளித்தால் அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு சரியான விடைக்கு அழைத்துப் போக வேண்டும். இதைப் பல சிறு சிறு வினாக்களால் நிறைவேற்றலாம். ஒருவரோ பலரோ சரியான விடை தருவதில் பங்குகொள்ளலாம். தவறாக விடையளிக்கப்படும் பொழுது ஆசிரியர் இத் தவறினை எல்லோரும் அறியச் செய்தல் வேண்டும். சில சமயம் தவறான விடையிலிருந்து சரியான விடைக்குச் செல்லக்கூடும். விடைகளை சொற்களிலும் சொற்றொடர்களிலும் எதிர்பார்ப்பது அவர்களது மொழியாற்றலை மேலும் வலுப்பெறச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும், ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கவிதை - கூண்டிற்கிளி

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- செய்யுளைக் கருத்தூன்றி மௌனமாக வாசிப்பார்.
- செய்யுளில் காணப்படும் பிரதான கருத்தை முன்வைப்பார்.
- கூண்டில் அடைபட்ட கிளியின் செயல்களைக் கூறுவார்.
- பவளம் என்ற பாத்திரத்தின் குணவியல்புகளைக் கூறுவார்.
- குழுக்களாக இயங்கி, பாடல்களை நயப்பார்.
- மாணவர் நயந்ததை எழுதிக்காட்டுவார்.
- இவை போன்ற பாடல்களைத் தாமும் எழுதிக் காட்சிப்படுத்துவார்.
- இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களை மௌனமாக வாசிக்க வழிப்படுத்தல்.
- செய்யுள்களில் காணப்படும் பிரதான கருத்துக்களை முன்வைக்க வழிப்படுத்தல்.
- பாடலாசிரியரின் நோக்கம் பற்றி விளக்குதல்.
- பாடலாசிரியரின் மொழிநடை பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாடலை உரையாடல் வடிவில் எழுத வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- கவிதை பற்றி அறிமுகம்
- ஆசிரியர்
- கூறப்படும் விடயம்

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| தேனைப் போன்ற மாங்கனிகள் | - | மிக இனிமையான மாம்பழங்கள் |
| குழந்தை மொழிகள் | - | கேட்பதற்கு ஆசைப்படுகின்ற பேச்சு |
| கோலப்பந்து | - | அழகான பந்து |
| தோழிக்கிளிகள் | - | நண்பிகளான கிளிகள் (உருவக அணி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- பாடலை விருப்போடு மௌனமாக வாசிப்பார்.
- பாடலை ஓசைநயத்துடன் குழுவாகப் பாடுவார்.
- பாடலில் காணப்படும் மையக்கருத்தை இனங்கண்டு கூறுவார்.
- பாடலை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்.
- இப்பாடல்களை இயன்றளவு இசையுடன் பாடுவார்.

## பின்னிணைப்பு
## வித்துவான் க.வேந்தனார்



யாழ்ப்பாணத்து வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் நாகேந்திரப்பிள்ளை. பின்னர் இவர் வேந்தனார் என தமது பெயரை மாற்றிக் கொண்டார். இளமைக்காலத்திலிருந்து இந்துசாதனம், ஈழகேசரி, போன்ற இதழ்களில் இலக்கிய, சமய கட்டுரைகளை வரைந்தார். பின்பு வீரகேசரி, தினகரன், சுதந்திரன், ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் ஆய்வுக் கட்டுரைகளை வரைந்தார். இவர் ஆரம்பத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். வேந்தனார் வித்துவான் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தமிழ் நாடு சென்றபோது மறைமலையடிகளைச் சந்தித்து, அவருடன் சிலகாலம் தங்கியிருந்தார். சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் முதலான தமிழ் இலக்கியங்களில் இவருக்கு அதீத ஈடுபாடிருந்தது. இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டத்தையும், சைவ சித்தாந்த சமாசத்தில் சைவப்புலவர் பட்டத்தையும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தையும் பெற்றவர். திருவாடுதுறை ஆதீனம் தமிழன்பர் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 8.0** : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து இலக்கண வழுவின்றி, உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : மெய்யெழுத்துக்களின் ஒலி வேறுபாடு

- ல, ழ, ள வேறுபாடு
- ண, ந, ன வேறுபாடு
- ர, ற வேறுபாடு

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- மெய்யெழுத்துக்களின் ஒலி வேறுபாட்டை இனங்கண்டு பயன்படுத்துவார்.
- லகரம், ழகரம், ளகரம் முதலான எழுத்துக்களின் வேறுபாடுகளை அறிந்து சொற்களை உச்சரிப்பார்.
- லகரம், நுனி நா நுனி அண்ணத்தைப் பொருந்த உச்சரிக்கப்படுவதை அறிந்து உச்சரிப்பார்.
- ழகரம், ளகரம் ஆகிய மெய்யெழுத்துக்கள் நுனி நா மேல்நோக்கி வளைந்து நடு அண்ணத்தை தொடுமாறு உச்சரிப்பார்.
- 'ள', என்னும் எழுத்துக்கு பதிலாக 'ழ' என்ற எழுத்து இடம்பெறும்போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுவார்.

  உதாரணம் - அளி, ஆள், கோளை, தாள் பளி, வாள்,
  அழி, ஆழ், கோழை, தாழ், பழி, வாழ்
- லகரத்துக்குப் பதிலாக ளகரம் இடம் பெறும்போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுவார்.

  உதாரணம் - ஒலி, கலம், கலப்பு, தலம், வலம்
  ஒளி, களம், களப்பு, தளம், வளம்
- லகரத்துக்குப் பதிலாக ழகரம் இடம் பெறும்போது பொருள் வேறுபடுவதை அறிந்து கூறுவார்.

  உதாரணம் - கலி, கிலி, பலம், கலப்பு
  கழி, கிழி, பழம், கழப்பு (சோம்பல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ணகர, நகர, னகர ஒலி வேறுபாடுகளை அறிந்து செயற்படுவார்.
- நகரம், நுனி நா மேற் பல்லின் உட்புறத்தைப் பொருந்த உச்சரிக்கப்படும் என்பதை அறிவார்.
- நகரம், தகரத்துக்கு முன்பு வரும் போது மட்டும் நுனி நா பல்லோடு பொருந்த உச்சரிக்கப்படுவதை அறிவார்.
- உதாரணம் - சந்தை, பந்து, தொந்தி, இந்த
- ணகரம், நுனி நா மேல் நோக்கி வளைந்து அண்ணத்தைத் தொட உச்சரிக்கப்படும் என்பதை அறிவார்.
- னகரம், நுனி நா நுனி அண்ணத்தைப் பொருந்த உச்சரிக்கப்படுவதை அறிந்து உச்சரிப்பார்.
- ணகரத்துக்குப் பதிலாக னகரம் இடம்பெறும்போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுவார்.

  உதாரணம் - அன்னம், என், கான், தன், மன்,

  அண்ணம், எண், காண், தண், மண்
- ரகரம், றகரம் ஆகிய இரண்டும் நுனி நா, நுனி அண்ணத்தைப் பொருந்த உச்சரிக்கப் பட்டாலும் இவ்விரு எழுத்துக்களும் உச்சரிப்பு முறையில் வேறுபடுவதை அறிந்து உரைப்பார்.
- ரகரத்துக்குப் பதிலாக றகரம் இடம்பெறும்போது பொருள் வேறுபடுவதை அறிந்து எழுதுவார்.
- உதாரணம் - அரம், அரி, அரை, கரை, மரை, பரி, மரம்

  அறம், அறி, அறை, கறை, மறை, பறி, மறம்

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- சொற்களுக்கூடாக ஒலி வேறுபாடுகளை இனம் காணல்.

  கலி, வலி, கலப்பு, தாலம்

  கழி, வழி, கழப்பு, தாழம்

  களி, வளி, களப்பு, தாளம்
- மெய் ஒலி வேறுபாட்டை வாக்கியங்களுக்கூடாக மாணவர்களுடன் கலந்துரையாடல்.

உதாரணம் -

உ**ழ**வாரப்படையா**ளி** திரு**நா**வுக்கரசர்.

சி**ன்ன** **நந்**தன் பெ**ன்ன**ம் பெரிய பலாப்ப**ழ**த்தை உண்டு க**ளி**த்தான்.

க**ளி**த்து உறங்கா க**லி**கா**ல**மாய்க் க**ழி**ந்தது வா**ழ்**க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மெய் ஒலிகளின் வேறுபாட்டைத் தெளிவுறுத்தும் வகையில் பாடல்களைப் பாடுதல்.

  "காலைப் பனியில்
  வாலைச் சுருட்டி வரும்
  வெள்ளை நாயைப் பாராய்
  வெள்ளிக் கிண்ணத்தில்
  அள்ளி ஊற்றிய பாலைப்
  பருகும் அழகைப் பாராய்"

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- லகர, ழகர, ளகர மெய்யெழுத்துக்களின் ஒலி வேறுபாடு
- நகர, னகர, ணகர மெய்யெத்துக்களின் ஒலி வேறுபாடு.
- 'ர', 'ற' மெய்யெழுத்துக்களின் ஒலி வேறுபாடு
- 'ல' என்னும் மெய்க்குப் பதிலாக 'ழ', 'ள' எழுத்துக்களை எழுதுவதால் ஏற்படும் பொருள் வேறுபாடு.
- 'ன' என்னும் மெல்லின மெய்க்குப் பதிலாக 'ண' என்ற மெய்யை எழுதுவதால் உண்டாகும் பொருள் வேறுபாடு
- 'ர' என்னும் மெய்க்குப் பதிலாக 'ற' என்ற மெய்யை எழுதுவதால் உண்டாகும் பொருள் வேறுபாடு.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை உள்ளடக்கிய சொல்லட்டைகள்
- பாடல்கள்
- ஒலிநாடா

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- மெய் எழுத்துக்களின் வேறுபாட்டை அறிந்து உச்சரிப்பார்.
- சொற்கள், சொற்றொடர், வாக்கியங்களுக்கூடாக ஒலி வேறுபாடு, பொருள் வேறுபாடுகளை இனம் காண்பார்.
- ஒலி வேறுபாடுகளை அறிந்து சொற்களைத் திருத்தமாக எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 6.0 : கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 6.2 : பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை - ஒரு பாட்டுடையான்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- ஒரு பாட்டுடையான் எனும் பாடப்பரப்பைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- அப்பகுதியில் இடம்பெறும் பிரதான கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்கண்டு எழுதுவார்.
- ஒரு பாட்டுடையான் என்னும் பாடப்பரப்பில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களைத் தமக்குள் கலந்துரையாடி பட்டியற்படுத்திக் கூறுவார்.
- இதில் இடம்பெறும் பாத்திரங்களின் குணவியல்புகளைக் கூறுவார்.
- கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றிக் கலந்துரையாடுவார்.
- இக்கட்டுரையை மையமாக வைத்து, கம்பனின் கவித்துவம் பற்றி விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரையை மாணவர் தனித்தனியாக மௌனமாக வாசித்துக் கிரகிக்க வழிப்படுத்தல்.
- குழுக்களாக மாணவர்களைச் செயற்படச் செய்து, கட்டுரையில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடச் செய்தல்.
- ஒருவருடன் ஒருவர் உரையாடி, தாம் கிரகித்த விடயங்களைத் தொகுத்து எழுதச் செய்தல்.
- ஒவ்வொருவரும் தாம் தொகுத்து எழுதியதை முன்வைக்க வழிப்படுத்தல்.
- கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்தி விளக்கமளித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- கட்டுரையாசிரியர் பற்றிய தேடல்.
- இராமாயணம் பற்றிய அறிமுகம்.

**அரும்பத விளக்கம்**

| | | |
|---|---|---|
| அரக்கர் கோமான் | - | இராவணன் |
| துளையமாடுதல் | - | அழுந்தி இருத்தல் |
| மாசு | - | குற்றம் |
| அவதி | - | துன்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுது தாள்கள், எழுது கருவிகள்.
- டிமைன் தாள்கள்.

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடப்பரப்பை மௌனமாக வாசிப்பார்.
- தாம் கிரகித்தவற்றைக் குழுவாகச் செயற்பட்டு, பட்டியற்படுத்துவார்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- கட்டுரை தொடர்பான கருத்துக்களைப் பட்டியற்படுத்தி எழுதுவார்.

**பின்னிணைப்பு**

**அ.ச.ஞானசம்பந்தன்**



கட்டுரை ஆசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் 10.11.1916 இல் பிறந்தார். இவர் சிறந்த தமிழறிஞரும் இலக்கிய விமர்சகருமாவார். 1985ஆம் ஆண்டு தமிழ்மொழிக்கான சாகித்திய அகடமி விருதினை, கம்பன் - புதிய பார்வை நூலிற்காகப் பெற்றவர். சுருக்கமாக அ.ச.ஞா என அழைக்கப்பட்டார். இவரது **இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்** என்ற நூல் சிறப்பு வாய்ந்தது. இவர் அ.ச.ஞா பதில்கள், அகமும் புறமும், அரசியல், அருளாளர்கள் மூவர், இலக்கியக் கலை முதலிய முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். சத்துருக்கனின் பெருமையினைக் கம்பர் ஒரு பாடல்மூலம் பாடியுள்ளார். அந்த நான்குவரிப் பாடலின் மூலம் கம்பனின் கவித்துவ ஆற்றலும், இராமாயண கதாபாத்திரங்களில் ஒன்றான சத்துருக்கனின் குணப்பண்பும் வெளிப்படுகின்றது.

CP/HZ/CARFAX T.M.V. HATTON * LIBRARY *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.4** : நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகவும் செம்மையாகவும் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நிறுத்தக் குறிகள்

**பாடவேளை** : 02

## கற்றற் பேறுகள்

- நிறுத்தக் குறிகளை அறிந்துகொள்வார்
- நிறுத்தக் குறிகள், கருத்துக்களை மயக்கமின்றித் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு உதவும் என்பதை விளக்கிக் கூறுவார்.
- நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்தக் குறிகளை அறிமுகப்படுத்தல்.
- குறியீடுகளைப் பிழையின்றிப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை விளக்குதல்.
- நிறுத்தக் குறிகள் பொருத்தமாக இடப்பட்டுள்ள பந்தியினைக் காட்சிப்படுத்தி அப்பந்தி தொடர்பாக விளக்கமளித்தல்.
- நிறுத்தக் குறியீடுகள் இடப்படாத பந்தியொன்றைக் கொடுத்து அப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடவைத்தல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

. - முற்றுப்புள்ளி

, - காற்புள்ளி

? - வினாக்குறி

! - மெய்ப்பாட்டுக்குறி

( ) - அடைப்புக்குறி

“ ” - மேற்கோள்குறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முற்றுப்புள்ளி / முடிப்பிசைக்குறி / முழுமாத்திரை ( . )**

- வினாவும் மெய்ப்பாடும் இல்லாத வாக்கியங்களின் இறுதியிலும் முற்றுப் புள்ளி வரும்.
  தமிழ் ஒரு செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கூற்று)
  தமிழ்மொழி வாழ்க. (வியங்கோள்)
  தம்பி இங்கே வா. (ஏவல்)
- சொற்களைக் குறுக்கி எழுதும் இடங்களில் வரும்.
  கி.பி.1971
  நன்.எழுத்து.12
  மா.நன்னன்
- கடித முகவரியின் இறுதியிலும், திகதியின் இறுதியிலும் வரும்.
  கலைமகள் வீதி,
  மட்டக்களப்பு.
  12.06.2015.

**காற்புள்ளி ( , )**

- ஒரு தொடராக வரும் சொற்களையும் சொற்றொடர்களையும் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படுகிறது.
  - இலங்கை, இந்தியா, நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், வங்காளதேசம், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் தென்கிழக்காசிய நாடுகளே.
  - காலையில் துயில்விட்டெழுதல், கடவுளை மனம் உருகித்தொழல், அவரவர்க்கேற்ற உடற்பயிற்சிகளைக் காலையிலேயே செய்தல் போன்ற பழக்கங்கள் ஒருவரின் வாழ்வில் வெற்றிக்கு உறுதுணையாக அமைவன.
- வாக்கியத்தில் எழுவாய் நீண்ட . தொடராக இருக்கும்போதும் எழுவாயை அடுத்து இக்குறியீடு வரும்.
  - அழகும் இளமையும் அறிவும் நிறைந்த இராமன், வில்வித்தையையும் திறமையாகக் கற்றான்.
- வாக்கியத்தில் பொருள் மயக்கத்தை நீக்கவும் இக்குறியீடு பயன்படும்.
  வினை, தெரிநிலைவினை எனவும் குறிப்புவினை எனவும் இருவகைப்படும்.
  ஆதலால், ஆகையால், ஆகவே, ஆயினும், இனி, என்றாலும், எனவே, அதற்காக என்பன போன்ற இணைப்புச் சொற்களை அடுத்துவரும்.
  நான் முன்னேற விரும்பினேன். அதற்காக, கடுமையாக உழைக்கத் தொடங்கினேன்.
  இனி, உரையாடலைத் தொடங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகவரி எழுதும்போது**

பரீட்சை ஆணையாளர்,

பரீட்சைத் திணைக்களம்,

இசுறுபாய.

**வினாக்குறி / வினாவிசைக்குறி ( ? )**

- வினாவாக்கியத்தின் இறுதியில் வரும்.

  உண்மை எது?

- சந்தேகத்தைக் குறிப்பிடும்போது வரும்.

  இன்னும் சில வருடங்களில் எமது நிலை உயருமா ?

**மெய்ப்பாட்டுக்குறி / உணர்ச்சிக்குறி**

- வியப்பு, இரக்கம், துன்பம், அருவருப்பு, வெறுப்பு என்பன போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவுகின்றது.

  ஆகா ! என்ன அழகு.

  சீ ! நீ வெளியேறு !

**அடைப்புக் குறி** [ (.......) ]

ஒரு விடயத்தை எழுதும் போது சான்றாதாரம், வரைவிலக்கணம், விளக்கம், பிறமொழிச் சொற்பிரயோகம் என்பன பயன்படுத்தப்படும்போது இக்குறியீடு பயன்படுத்தப்படுகின்றது.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொல்.)

ஏற்றுமதி, இறக்குமதி பற்றிக் கணக்குப்பதிவு (சென்மதி நிலுவை) எமது நாட்டுக்குச் சாதகமாக அமையும்.

வீட்டுத்தளபாடங்கள் (கதிரை, மேசை, கட்டில்) ஏலத்தில் விற்கப்படுகின்றன.

இணையம் (Internet) இன்று எல்லோருக்கும் கிடைக்கத்தக்க ஊடகமாக மாறியுள்ளது.

**மேற்கோட் குறி**

பிறருடைய கூற்றை அப்படியே எடுத்தாளும்போது மேற்கோட்குறி இடப்படுகின்றது.

"புதுமைப்பித்தனை நீக்கிவிட்டுத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றைப் பார்க்கமுடியாது என்று" பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவார்.

"ஏறுபோல் நட" என்பது சான்றோர் கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- பிரதி எடுக்கப்பட்ட கதை
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- நிறுத்தக் குறிகளின் பயன்பாட்டினைக் கூறுவார்.
- நிறுத்தற் குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.
- நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைப்பார்.

## பின்னிணைப்பு

**கீழ்வரும் பந்தியினை நிறுத்தக் குறியீடு இட்டு எழுதுக.**

'காலம் கருந்தனம்' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. காலம் விரைந்து செல்கின்றது. சிற்றறிவுடைய மக்கள் கரையற்ற கல்வியைக் கற்க வேண்டியுள்ளது. கற்றது கைமண்ணளவாகவும் கல்லாதது உலகளவாகவும் உள்ளன. எனவே, கற்பனவற்றையும் எழுத வேண்டியனவற்றையும் விரைவாகச் செய்தல் வேண்டும். தெளிவைப் பறிகொடுக்காது விரைவாக எழுதும் பழக்கம் ஏற்பட வேண்டும். சில பயிற்சிகளால் இவ்விரைவை கைவரச் செய்யலாம். ஆசிரியர் 'எழுது' என்று கட்டளை இட்டதும் எழுத வேண்டும் 'நிறுத்து' என்று கட்டளை இட்டதும் நிறுத்த வேண்டும்.

திருக்குறளை எழுதியவர் யார்? என்ற வினாவுக்கு திருவள்ளுவர் என்று விடை தரப்பட்டால் அதனை ஆசிரியர் சரியான விடை என்று கொள்ளவேண்டும். கம்பன், ஒட்டக்கூத்தர் என்போர் சமகாலத்தில் வாழ்ந்த புலவர்கள். ஔவையார் பெண்பாற் புலவர். பாரதி யுகக் கவிஞன். (இவர் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்) "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதனைக் கருத்திற் கொண்டு நாம் ஒழுக வேண்டும். "நாளை நமதே"

(நிறுத்தக் குறியீடுகளைத் தவிர்த்துப் பந்திகளைக் கொடுக்க.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 9.0 : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 9.1 : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை - பறவைகளின் இசைவாக்கம்

**பாடவேளை** : 04

## கற்றற் பேறுகள்

- கட்டுரையை மாணவர் ஒருவர் வாசிக்க, ஏனையோர் கேட்டுக் கிரகித்து முக்கியமானதை எழுதுவார்.
- கட்டுரையை மாணவர் ஒருவர் வாசிக்க, ஏனையோர் குறிப்பெழுதுவார்.
- மையக்கருத்து, துணைக் கருத்துக்களைப் பட்டியற்படுத்துவார்.
- கட்டுரையில் காணப்படும் விழுமியக் கருத்துக்களை விளக்குவார்.
- பறவைகளின் புத்திசாதுர்யம் பற்றிக் கலந்துரையாடிக் கருத்துக்களை முன்வைப்பார்.
- கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றிக் கலந்துரையாடுவார்.
- கலந்துரையாடிய மொழிநடைச் சிறப்புப் பற்றி எழுதிக்காட்டுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- பறவைகள் பற்றிக் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- பறவைகளின் இசைவாக்கம் என்ற கட்டுரையை ஒருவர் வாசிக்க வழிப்படுத்துதல்.
- மாணவர் ஒருவர் வாசிக்கும்போது, ஏனையோர் குறிப்பெடுக்க வழிப்படுத்துதல்.
- பறவைகளின் புத்திசாதுர்யம் பற்றிக் கலந்துரையாடுவதற்கு வழிப்படுத்துதல்.
- கலந்துரையாடிய விடயங்களுக்கமைய சுருக்கமாகக் காட்சிப்படுத்தவும், விளக்கவும் வழிப்படுத்துதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- மக்களின் கண் அமைப்புக்கும், பறவைகளின் கண் அமைப்புக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்.
- டிமைன் தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரை தொடர்பான கருத்துக்களைப் பட்டியற்படுத்தி எழுதுவார்.
- கட்டுரையின் உள்ளடக்கத்தைக் கூறுவார்.
- பாடப்பரப்பை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதிக் காட்டுவார்.
- பறவைகள் பெற்றுள்ள உயர்வான இசைவாக்கம் பற்றி எழுதிக் காட்சிப்படுத்துவார்.

## பின்னிணைப்பு
## பறவைகள்

பறவைகளின் மூளை பலவிதங்களில் முழுமைபெற்றது. பறக்கும்போது, விமானத்தைப்போன்று உடலின் அனைத்து இயக்கங்களின் ஒருங்கிணைப்பு, உள்ளுணர்வு, உடனடியாக உணர்ந்துகொண்டு திசைமாறுதல் போன்றவற்றைச் செயற்படுத்துகின்றன. பறவைகளின் அறிவுத் திறனும் வியப்பூட்டுமாறு சிறப்பாக உள்ளது. மனிதர்களுக்கும் பிற பாலூட்டிகளுக்கும் இல்லாத மீயடுக்குமூளை எனும் ஒரு பகுதி பறவைகளின் மூளையில் உள்ளது. இது மனிதர்களின் அறிவாற்றலுக்கு உதவுவதாகக் கருதப்படும் பெருமூளைத் திறனிற்கு மாறாக, பறவைகளில் செயற்படுவதாக கருதப்படுகின்றது.

1. மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவை கொத்தும்.
2. கடல்புறா நீரில் மிதந்துகொண்டே தூங்கும்.
3. பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்றுகொண்டே இருக்கும்.
4. அவுஸ்ரேலியாவில் இருக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
5. மல்லாந்து தூங்கும் பறவை - குவாரின்
6. ஓய்வெடுக்காமல் சுமார் 1000 கி.மீ வரை பறக்கும் பறவை - புறா
7. நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை - புறா
8. ஒரே சமயத்தில் நூற்றுக்கு மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை - நெருப்புக்கோழி.
9. மிகப்பெரிய நீர்ப்பறவை - அன்னம்
10. வெட்டுக்கிளியை வேட்டையாடும் பறவை - மைனா.
11. காகம் இல்லாத நாடு - நியுஸிலாந்து
12. வான்கோழிகள் - அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவை
13. பறக்கமுடியாத பறவைகள் - பென்குயின், தீக்கோழி, நியுஸ்லாந்தின் கிபி, அழிந்துபோன டோடோக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 10.0 : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 10.2 : கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : சொல்வதெழுதுதல்

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்**

- சொல்வதெழுதலின்போது கவனத்தில் கொள்ளவேண்டியவற்றை, கலந்துரையாடல் மூலம் விளக்கிக் கூறுவார்.
- சொற்களுக்கிடையே இடைவெளிவிட்டு எழுதுவார்.
- எழுத்துப் பிழைகளின்றி எழுதுவார்.
- உரிய நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதுவார்.
- ஆசிரியர் கூறுவதை அவதானமாகச் செவிமடுத்து எழுதுவார்.
- ஒலிபேதங்களை அவதானித்து, எழுத்துப் பிழைகளின்றி எழுதுவார்.
- சொல்லப்பட்டது பந்தி எனின் பந்தியாகவும், பாடல் எனின் பாடல் அமைப்பிலும் எழுதுவார்.
- தாம் எழுதியவற்றை மீண்டும் வாசித்துத் திருத்தங்கள் செய்வார்.
- இலக்கணப் பிழைகள், எழுத்துப் பிழைகள் இன்றி எழுதப்பட்டுள்ளதா என மீளச் சரி பார்த்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பொருத்தமான பாடப்பிரவேசத்தைத் திட்டமிட்டு மாணவருக்கு முன்வைத்தல்.
- சொல்வதெழுதலுக்குரிய பந்தி, அல்லது பாடலில் இடம்பெறும் சொற்களைத் தொனிப் பேதங்களுடன் உச்சரித்துக் கூறுதல்.
- ஆசிரியர் கூறுவனவற்றைச் செம்மையாகக் கிரகித்துப் பிழைகளின்றி எழுதுவதற்கு வழிப்படுத்துதல்.
- ஒரு தடவை கூறி எழுதச் செய்வதோடு, மீண்டும் விரைவுபடுத்திக் கூறி, மாணவர் தாம் எழுதியதை திருத்தம் செய்யவும் வழிகாட்டுதல்.
- போதியளவு நேர அவகாசம் கொடுத்து, அவரவர் எழுதியதை மீண்டும் திருத்தம் செய்வதற்கு வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- சொல்வதெழுதுதலுக்குப் பொருத்தமான பந்திகள்
- பாடல் பகுதிகள்
- நிறுத்தக் குறியீடுகளைக் காட்டும் அட்டைகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- பொருத்தமான பந்திகள், பாடல்கள்
- பத்திரிகை, சஞ்சிகைகள் முதலியன
- நிறுத்தக் குறியீடுகளைக் காட்டும் அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- சொல்வதெழுதுதலின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களை விளக்கிக் கூறுவார்.
- சொற்பிழைகளின்றியும், சொற்களுக்கிடையில் இடம்விட்டும் எழுதவேண்டிய முறைபற்றியும் அறிந்து அதற்கேற்ப எழுதுவார்.
- தாம் எழுதியதை ஏற்ற குறியீடுகள் இட்டுத் திருத்தம் செய்து பிழையறப் பூரணப்படுத்துவார்.

**பின்னிணைப்பு**

**கீழ் வரும் சொற்களைக் கொடுக்கவும் / வேறு சொற்களையும் கொடுக்கலாம்.**

- இம்முறையில்
- அந்நிகழ்ச்சிகள்
- இடைநிலை
- மகிழ்தல்
- முந்நூறு
- மூன்றாவது
- யோசனைகளை
- விழிப்புடன்
- அறிஞர்கள்
- கல்விமுறை
- 2015ஆம் ஆண்டு
- 40 மணித்தியாலம்
- மொத்தம் 5 மணி 12 நிமிடங்கள்
- மங்கல வாழ்த்து
- கலாசாரம்
- 2ஆம் படிவம்
- 120 சொற்கள்
- 1000/120 = 8.3
- எட்டுச் சொற்களுக்கு ஒரு புதிய சொல் உள்ளது.
- நெறி (Principal)
- காலை 7.30 தொடக்கம் மாலை 4.30 வரை இடம்பெறும்.
- மணியன் (கி.பி 1972-1999) வரை வாழ்ந்தவர்.
- குறையறிதல்
- சிறுகதைகள்
- தமிழ்மொழி
- நாட்டார்பாடல்கள்
- 1981ம், 1997ம் திருத்தங்கள் செய்யப்பட்டன.
- 4,5ஆம் படிவங்கள்
- 35 பாட வேளைகளாகப் பிரிக்க
- கற்றது கைமண்ணளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 1.0** : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப, வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : செயல் திறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை - இராபர்ட் புரூசும் சிலந்திப் பூச்சியும்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- இராபர்ட் புரூசும் சிலந்திப் பூச்சியும் பற்றிய விளக்கத்தினைப் பெறுவார்.
- இராபர்ட் புரூசும் சிலந்திப் பூச்சியும் எனும் கட்டுரையை வாசித்துக் கிரகித்துக் துலங்குவார்.
- கிரகித்த விடயங்களைக் குழுவாக இருந்து தமக்குள் உரையாடிக் கூறுவார்.
- கட்டுரையில் இடம்பெறும் உட்கருத்தை விளக்குவார்.
- கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றிக் கலந்துரையாடி அதனை மேற்கோள் காட்டி எழுதுவார்.
- கட்டுரையை வாசித்துக் காட்டுவார்.
- இக்கட்டுரையில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களை விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரை எழுந்த சந்தர்ப்பத்தைக் கலந்துரையாடிப் பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- மாணவரை மௌனமாக வாசிக்க வழிப்படுத்துதல்.
- மாணவர் வாசித்த விடயம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவரைப் பாத்திரமேற்று உரையாட வழிப்படுத்துதல்.
- இவ்வுரையாடல் வாயிலாக வெளிப்படும் விழுமியங்களைத் தொகுத்துப் பேச வழிப்படுத்தல்.
- உரையாடலில் இடம்பெற்றுள்ள மொழிநடை பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- கட்டுரையின் பிரதான கருத்துப் பற்றிய விளக்கம்
- இராபர்ட் புரூசின் மதிநுட்பம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

CP/HZ/CARFAX T.M.V. HATTON
........................
LIBRARY

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரையில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவார்.
- பாடப்பரப்பைக் கிரகிக்கும் முகமாக மௌனமாக வாசிப்பார்.
- பாடப்பரப்பை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 10.0 : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 10.2 : கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : பந்தி எழுதுதல்

**பாடவேளை** : 01

## கற்றற் பேறுகள்

- பந்தி ஒன்று அமைய வேண்டிய முறை பற்றித் தாம் அறிந்தவற்றைக் கூறுவார்.
- பந்தியின் முதல் வாக்கியம், எடுத்துக் கொண்ட நோக்கத்திற்கு ஏற்ப அமைவதைத் தெரிவிப்பார்.
- பந்தியொன்று அமைவு பெற வேண்டியதற்கான தலைமைக் கருத்தை முதல் வசனமாக எழுதுவார்.
- தலைமைக் கருத்தை வளர்த்துச் செல்வதாகத் துணைக்கருத்துகள் அமைவதை எடுத்துக்காட்டுவார்.
- மாறியிருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி, அவை கருத்துத் தொடர்போடு அமையுமாறு மாற்றி மீளவும் ஒழுங்குபடுத்தி எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- பந்தி என்றால் என்ன? என்பது பற்றிய விளக்கத்தைக் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- முறை மாறியிருக்கும் பல்வேறு வாக்கியங்ளைக் கொடுத்து அவற்றை அவதானிக்கச் செய்தல்.
- கொடுத்த வாக்கியங்கள் கருத்துத் தொடர்போடு அமைய அவற்றைப் பந்தியாக எழுத வழிப்படுத்துதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் தலைப்பு ஒன்றினை வழங்கி பந்தியை எழுத வழிப்படுத்துதல்.
- குழுநிலையில் எழுதியதை வகுப்பிலே சமர்ப்பிக்கச் செய்து, கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- சிறப்பான பந்தி ஒன்றை அமைப்பதற்கான படிமுறைகள்.
- பந்தியில் மையக் கருத்து ஒன்று மட்டுமே அமைய வேண்டும்.
- அக்கருத்தை வளர்த்துச் செல்லும் விதத்திலே ஏனைய துணைக்கருத்துகள் அமையவேண்டும்.
- பந்தி எழுதியதற்கான நோக்கம்,தெளிவாக வாசகர்கள் இனங்காணக் கூடியதாக அமைய வேண்டும்.
- தேவையற்ற அல்லது வேறொரு விடயம் பந்தியில் இடம்பெறக் கூடாது.
- மிகவும் சுருக்கமாக அல்லது அளவுக்கு மிக நீண்டதாக பந்தி அமைந்துவிடக்கூடாது.
- பந்திக்கான தலைப்பு ஒன்றையும் எழுத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- பந்திகள் சில எடுத்து ஒட்டிய தாள்கள்
- எழுது தாள்கள், எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கொடுத்த தலைப்பில் தகவல்கள் சேர்த்து, பந்தியாக எழுதுவார்.
- பந்தி தெளிவாக அமைய வேண்டிய முறை பற்றி எடுத்துக் கூறுவார்.
- தலைமைக் கருத்தை வலியுறுத்துவதாக அமையும் துணைக்கருத்துக்களையும் இணைத்து பந்தி எழுதுவார்.
- பந்தியில் குறிப்பிடப்படும் விடயத்திற்கேற்ப தலைப்பு ஒன்றையும் எழுதுவார்.

## பின்னிணைப்பு

### கீழ்வரும் பந்திகளைப் பார்த்து எழுதுக.

எம்மைச் சூழ்ந்துள்ள இந்த உலகத்திற் காணப்படுகின்ற காட்சிகள் யாவும் மனதோடு சம்பந்தப்பட்டவை. ஆகையால், நமதுமனதில் ஆழமான ஆசையொன்று இன்று இருக்குமானால், அந்த எண்ணத்தின் வெற்றி நாளையே வந்தெய்திவிடும். தாழ்வு மனப்பான்மை உடையவர்கள், சோர்வுள்ளவர்கள், ஆடுபோல (ஒன்றிலே மனம் பற்றாமல்) ஓடியோடிப் பல விடயங்களை விரும்புபவர்கள், வந்து சேருகின்ற இடையூறுகளுக்குப் பயப்படுபவர்கள் இவர்கள் தாம் விரும்பிய எதனையும் அடையமாட்டார்கள்.

(அப்படியானவர்கள் தங்கள் தவறை உணராதவர்களாக, எல்லாம் தங்கள் விதிப்பயன் என்று விதியை நோவார்கள். தங்கள் நண்பர்களைக் குறை சொல்வார்கள். கோபம் மிகுந்தவர்களாகத் தம் பகைவரைப் பழித்துரைப்பார்கள் மற்றவர்களுக்கு எதிராகச் சதிகள் செய்வார்கள். பொய்யான சாத்திரங்களை யெல்லாம் எடுத்துரைப்பார்கள். முயற்சியின்றியே முன்னேறுவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா என்று பார்ப்பதற்காகத் தமது சாதகங்களைப் புரட்டுவார்கள் பொய்யான அறிவினாலே கீழ்த்தரமான நாத்திகம் பேசுவார்கள். அவர்கள் அழிவற்றதும், முழுமையானதுமான ஈடுபாடே எல்லா ஈடேற்றங்களையும் தரும் என்பதை உணரமாட்டார்கள். கண்ணில்லாதவர்கள் போல, வாழும் வழியறியாது திகைத்து நிற்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.1 : எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும், வகைதொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : எழுத்துக்களின் வகை, தொகை

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- தமிழில் கையாளப்படும் எழுத்துக்களை அறிந்து கொள்வதோடு அந்த எழுத்துக்கான ஒலிப்பு முறையை உச்சரித்துக் காட்டுவார்.
- எழுத்துக்களின் வகைகளை உதாரணத்துடன் விளக்குவார்.
- உயிர் எழுத்துக்களில் குறில், நெடில் எழுத்துக்களை உச்சரித்துக் காட்டுவார்.
- உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் என்பவற்றை உச்சரிப்பார்.
- தமிழ் எழுத்துக்களை உச்சரித்துக் காட்டுவது மட்டுமன்றி அதனைத் தம் ஆக்கங்களிலும் பயன்படுத்துவார்.
- ஒலிப்பில் மயக்கத்தை ஏற்படுத்தும் (லகர, ளகர, ழகர, னகர, ணகர, நகர, ரகர, றகர) எழுத்துச் சொற்களைச் செம்மையாக, பொருள் மயக்கத்தை ஏற்படுத்தாத வகையில் ஒலித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- எழுத்துக்களடங்கிய சொல்லட்டை ஒன்றைத் தயார்செய்து அதனை உச்சரித்துக் காட்டுவது மட்டுமன்றி மாணவரையும் முறையாக உச்சரிக்க வழிப்படுத்துதல்.
- உயிர் எழுத்துக்களில் குற்றெழுத்துக்கள் (குறில்), நெட்டெழுத்துக்கள் (நெடில்) என்பவை உச்சரிக்க எடுக்கும் மாத்திரையின் அளவை உச்சரித்துக் காட்டி மாணவர்களையும் உச்சரிக்கச் செய்தல்.
- மெய் எழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுவதுடன் உயிர்மெய் எழுத்தாகவும் உச்சரிக்க வழிகாட்டுதல்.
- ஒலிப்பில் மயக்கத்தை ஏற்படுத்தும் எழுத்துக்கள் இடம்பெறும் சொற்கூட்டங்களைக் கொடுத்து, திருத்தமாக உச்சரிக்கச் செய்தல்.
- கிரந்த எழுத்துக்களை அதற்குரிய உச்சரிப்பு முறைக்கேற்ப உச்சரித்துக்காட்டி, சரியாக உச்சரிக்க மாணவரை வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

உயிர் எழுத்துக்கள் - 12

மெய் எழுத்துக்கள் - 18

உயிர் மெய் எழுத்துக்கள் - 12 x 18 = 216

ஆய்த எழுத்து - 01

........

247

........

- உயிர் எழுத்துக்களைக் குறில், நெடில் என வகுக்கலாம்.
    - குறில் - அ, இ, உ, எ, ஒ
    - நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

மெய் எழுத்துக்களின் உச்சரிப்பு முறைகளைத் தெளிவாக வெடிப்பொலி, மூக்கொலி என வகைப்படுத்தி ஒலித்துக்காட்டல்.

உதாரணம் :- வல்லினம் - க், ச், ட், த், ப், ற் - வெடிப்பொலிகள் அல்லது தடை ஒலிகள்.

மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன் - மூக்கொலிகள்

இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

கிரந்த எழுத்துக்கள் - ஜ, ஸ, ஷ, ஹ,க்ஷ

(வடமொழிக் கலப்பினால் தமிழில் புகுந்த எழுத்துக்கள்)

ஸ்ரீ - (தற்காலத் தமிழில் அரிதாக வழக்கில் உள்ள எழுத்து)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சொல்லட்டைகள்
- செயற்பாட்டுப் பத்திரம்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- உயிர் எழுத்துக்களை குறில், நெடில் என்ற வகையில் உச்சரித்துக் காட்டுவார்.
- உயிர்மெய் எழுத்துக்களை அதன் ஒலிப்பு முறைக்கு ஏற்ப உச்சரித்துக் காட்டுவார்.
- ஒலிப்பில் மயக்கத்தை ஏற்படுத்தும் சொற்களைச் சரியான முறையில் உச்சரித்துக் காட்டுவார்.
- எழுத்துக்களின் வகையையும் தொகையையும் நன்கு உள்வாங்கி உச்சரிப்பது மட்டுமன்றி தமது ஆக்கங்களிலும் பயன்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 9.0 : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 9.1 : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வாழ்வதற்காக வாசி

**பாடவேளை** : 03

### கற்றற் பேறுகள்

- கடித அமைப்பினை அறிந்து அது பற்றிக் கூறுவார்.
- கடித அமைப்பிலான பாடத்தில் நேரு அவர்கள் தனது மகள் இந்திராவுக்கு வாசிப்பின் முக்கியத்துவம், எவற்றை வாசிக்க வேண்டும் என்பன பற்றி எழுதியுள்ள விடயங்களைக் கலந்துரையாடுவார்.
- இக்கடிதத்தில் தம்மனம் கவர்ந்த அல்லது மனதிலே தாக்கத்தை ஏற்படுத்திய பகுதியை எடுத்துக் கூறுவார்.
- தாமும் வாசிப்பில் ஈடுபட வேண்டும் என்ற மனப்பாங்கைப் பெறுவார்.
- கடித அமைப்புக்கு ஏற்ப, கடிதம் எழுதுவார்.
- பாடப்பரப்பில் இடம்பெற்றுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்பதை உணர்ந்து விளக்குவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- உறவுமுறைக் கடிதம் அமையும் விதம் பற்றிக் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- உறவுமுறைக் கடிதம் ஒன்று அமையும் விதம் பற்றிக் கரும்பலகை / வெண்பலகையில் எழுதிக்காட்டுதல் அல்லது, டிமைன் தாளில் முன்கூட்டியே எழுதியதைக் காட்சிப்படுத்துதல்.
- வகுப்பிலே மாணவர் ஒருவரைக் கொண்டு வாசிக்கச் செய்தல் அதில். இடம் பெற்றுள்ள விடயங்கள், கடித அமைப்பு என்பன பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து வெவ்வேறு தலைப்புக்களைக் கொடுத்துக் கடிதம் எழுத வழிப்படுத்துதல்.
- மாணவர்கள் எழுதிய கடிதத்தைக் குழு ரீதியாக வாசிக்கச் செய்து அமைப்பு, உள்ளடக்கம் தொடர்பாக விளக்கிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- தரப்பட்ட கடிதம் யாரால், யாருக்கு அனுப்பப்பட்டது என்பதைப் பற்றிய விளக்கம்.
- இந்திராவின் தந்தை ஜவகர்லால் நேரு வெளிநாட்டிற்குச் சென்றபோதும், இந்தியாவில் வேறு பிரதேசங்களில் இருந்தபோதும், சிறைச்சாலையில் இருந்தபோதும் இந்திராவுக்குக் கடிதம் எழுதினார்.
- கற்கும்போது பேராசிரியர்களுடன் கலந்துரையாடிக் கற்பது சிறப்பென்பதை தன் அனுபவத்தினூடாக மகளுக்கு எடுத்துரைக்கின்றார்.
- வாசிப்பின் முக்கித்துவம், சிறப்புப் பற்றி விளக்குகின்றார்.
- ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியோர் அற்புதமான ஆங்கிலப் படைப்பாளிகள் என மகளுக்குக் கூறுகிறார்.
- வாசிக்கப்பட வேண்டிய நூல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.
- தனக்குப் பிடித்தமான நூலாசிரியரான பெட்ரண்ட் ரஸ்ல் பற்றி நேரு குறிப்பிடுகின்றார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- உறவுமுறைக் கடித மாதிரிகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்.
- டிமைன் தாள்


**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கடிதம் எழுதப்படும் நோக்கம் பற்றிக் கூறுவார்.
- கடிதம் ஒன்றில் அமைய வேண்டிய உறுப்புக்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- கடிதம் எழுதுபவர், தமது எண்ணங்களைச் சுலபமாக வெளிப்படுத்த, கடித அமைப்பு உதவுவதனை தன் அனுபவமாகக் கூறுவார்.
- கடிதம் எழுதப்படும் சந்தர்ப்பங்களை வெளிப்படுத்துவார்.
- கடிதம் ஒன்றினை எழுதிச் சமர்ப்பிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்ரண்ட் ரஸ்ல்



1872 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவரான இவர் புகழ்பெற்ற தத்துவவாதி. இங்கிலாந்தைச் சேர்ந்த இவர் கணிதவியலாளர் மற்றும் சிறந்த சமூக சீர்திருத்தவாதியும் கூட. தனது தத்துவங்களால் சமூகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியவர்.

சமுதாயம் மற்றும் அரசியல் எண்ணங்களில் ஈடுபாட்டுடனும், போருக்கு எதிரான மன நிலையுடனும் செயல்பட்டார். 1950ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசினை பெற்றவர். விடாப்பிடியான கொள்கைகளுடன் வாழ்ந்த ரஸல், இங்கிலாந்தின் ஈடு இணையற்ற சிந்தனையாளராக போற்றப்படுகிறார்.


- அன்பினால் ஊக்கமளிக்கப்படும் மற்றும் அறிவினால் வழிநடத்தப்படும் வாழ்க்கையே ஒரு நல்ல வாழ்க்கையாகிறது.
- மனித குலத்தை மீட்க தேவையான ஒரே விஷயம் ஒத்துழைப்பு மட்டுமே.
- யார் சரியானவர் என்பதை போர் தீர்மானிப்பதில்லை, மாறாக யார் வெளியேறுகிறார் என்பதை மட்டுமே தீர்மானிக்கின்றது.
- இந்த உலகம் முழுவதும் நிரம்பியுள்ள மாய விஷயங்களானது, அவற்றை கூர்மையடையச் செய்யும் நமது அறிவாற்றலுக்காக பொறுமையாகக் காத்துக்கொண்டிருக்கின்றது.
- நம்பிக்கைக்குத் தேவையான நல்ல அடித்தளம் இல்லாதபோது, மோசமான ஒன்றைக்கொண்டு திருப்தி அடைய வேண்டியிருக்கும்.
- உங்களுக்கு என்ன தெரியும் என்பது அறிவியல், உங்களுக்கு என்ன தெரியாது என்பதே தத்துவம்
- சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய அனைத்து விஷயங்களும் சிறந்தவையே.
- தீவிரமான நம்பிக்கைகள் தீவிரமான துன்பங்களில் இருந்தே பிறக்கின்றன.
- மற்றவர்களின் ரகசிய நல்லொழுக்கங்களைப் பற்றி யாரும் கிசுகிசு பேசுவதில்லை.
- பயத்தினை வென்று அதனை வெற்றிக்கொள்வதே ஞானத்தின் தொடக்கமாகும்.
- நீங்கள் அனுபவித்து இழந்த நேரமானது உண்மையில் வீணடிக்கப்பட்ட நேரமாகாது.
- மது போதை என்பது தற்காலிக தற்கொலையே.

என்று பல தத்துவ வாழ்க்கைக்கான விடயங்களை முன்வைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜவர்கலால் நேரு



14.11.1889ஆம் ஆண்டு பிறந்த ஜவகர்லால் நேரு இந்தியாவின் முதல் பிரதமராவார். இவர் பண்டிட் நேரு, பண்டிதர் நேரு என்றும் அழைக்கப்பட்டார். 15.08.1947ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவை மீட்டபோது அதன் முதலாவது அமைச்சராகப் பதவியேற்றார். இந்திய சுதந்திர இயக்கத்தின் முன்னோடியானவர்களில் ஒருவரான நேரு அணிசேரா இயக்கத்தை உருவாக்கினார். இவர் உலக அரசியலில் முக்கியமான நபராவார். 27.05.1964ஆம் ஆண்டு மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

1916ஆம் ஆண்டு லக்னோவில் நடந்த கூட்டத்தில் காந்தியடிகளைச் சந்தித்தார். காந்தியடிகளின் பேச்சைக் கேட்டு அவருடைய நம்பிக்கைக்குரியவரானார். 1920ஆம் ஆண்டு காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்ததற்காக 1921ஆம் ஆண்டு சிறை சென்றார். 1922ஆம் ஆண்டு அப்போராட்டத்தை விலக்கிக் கொண்டமையினால் விடுதலை பெற்றார். அவருடைய போராட்டம் சத்தியாக்கிரக முறையில் இருந்தாலும் பல தடவை சிறை செல்லவேண்டியிருந்தது. சிறையில் இருந்த நாட்களில் உலக வரலாற்றின் கட்சிகள் (1943), சுயசரிதை (1936) மற்றும் இந்தியாவின் கண்டுபிடிப்பு ஆகிய நூல்களை எழுதினார். காந்தியடிகளின் வழிகாட்டுதலின் கீழ் காங்கிரசின் இடதுசாரித் தலைவரான இவர் 15.08.1947ஆம் ஆண்டு புதுடில்லியில் சுதந்திர இந்தியாவின் கொடியை ஏற்றினார். இவர் சிறையில் இருந்த காலங்களில் பல கடிதங்களை தனது மகள் இந்திராவுக்கு எழுதியுள்ளார். அந்தக் கடிதங்களில் புகழ்பெற்ற கடிதம் ஒன்றுதான் தரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 9.0 : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 9.1 : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : உறவுமுறைக் கடிதம்

**பாடவேளைகள்** : 04

### கற்றற் பேறுகள்

- கடிதத்தின் உறுப்புக்கள் பற்றி தெளிவுபடுத்துவார்.
- உறவுமுறைக் கடிதத்தின் உறுப்புக்கள் வெளிப்படும் வகையில் கடிதமொன்றை எழுதிக்காட்டுவார்.
- பல்வேறு தேவைகளுக்காகக் கடிதங்களை எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- உறவுமுறைக் கடிதங்களைக் காட்சிப்படுத்தல்.
- உறவுமுறைக் கடிதமொன்றின் அமைப்பினை விளக்குதல்.
- கடிதம் எழுதப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுதல்.
- விடயங்களை வழங்கி உறவுமுறைக் கடிதம் எழுதுவதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.

### முதன்மைப் பதங்கள் *( key words)* , எண்ணக்கருக்கள்

- கடித வகைகள்.
    1. உறவு முறைக் கடிதம்
    2. தொழில் முறைக் கடிதம்
- கடிதத்தின் பயன்பாடுகள்.
    - உறவு நிலைகள் வலுப்படுதல்.
    - கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுதல்.
    - ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ளல்.
    - தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **கடித உறுப்புக்கள்**

**உறவுமுறைக் கடிதம்**

I. அனுப்புபவரின் முழு முகவரியும், திகதியும் (வலதுபக்க மேல் மூலையில்)

த.செல்வமதி,
இல: 24,
தமிழ்ச் சங்க வீதி,
கொழும்பு - 06
12.06.2015.

II. விளிப்பு

1. அன்புள்ள அம்மா, 2. அருமை நண்பா,

III. செய்தி

(அ) நலம் விசாரித்தல், தகவல் தெரிவித்தல், வினவுதல்

IV. முடிப்பு

எழுதுபவருக்கும் பெறுபவருக்கும் இடையிலான தொடர்பு

உதாரணம் : உங்கள் அன்பு மகன்
அருமை நண்பன்

V. ஒப்பம்

கையெழுத்துக்குப் பின் நிறுத்தற்குறி எதுவும் இடப்படுவதில்லை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- உறவுமுறைக் கடித மாதிரிகள்
- எழுது தாள்கள்
- பத்திரிகைச் செய்தி துணுக்குகள்
- பாடநூல்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- உறவுமுறைக் கடிதத்தில் அன்பு, பண்பு, தெளிவான விடய வெளிப்பாடு, உரிய முடிப்பு என்பன அமையுமாறு எழுதும் திறனை வெளிப்படுத்துவார்.
- கொடுக்கப்படும் விடயத்திற்கு ஏற்ப உறவுமுறைக் கடிதம் ஒன்றை எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.3 : சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும், அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சொற்றொடரும் வாக்கியமும்

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்**

- சொற்றொடர், வாக்கியம் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சொற்றொடர், வாக்கியம் என்பவற்றிற்கு உதாரணம் தருவார்.
- சொற்றொடருக்கும் வாக்கியத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைச் சுருக்கமாகக் கூறுவார்.
- சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகைகளை அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- சொற்றொடர்கள், வாக்கியங்கள் சிலவற்றை எழுதிக் காட்சிப்படுத்திப் பாடத்தை ஆரம்பித்தல்.
- மாணவர்களைக் கொண்டே சொற்றொடர், வாக்கியம் என்பவற்றுக்கு எளிய வரைவிலக்கணம் ஒன்றை அமைக்கச் செய்து அதைச் செம்மைப்படுத்தல்.
- சொற்றொடர் வகை, வாக்கிய வகை என்பவற்றை அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்தித் தெளிவுபடுத்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பாட்டில் ஈடுபடுத்துதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- சொற்றொடரும் வாக்கியமும்
- சொற்கள் அமைப்புரீதியாக இணைந்து முற்றுப் பொருளைத் தருவது வாக்கியமாகும். இது அமைப்பு ரீதியான உறவுடைய ஒரு சொல், அல்லது சொற்களின் ஒரு தொகுதியாக அமையும்.
- ஒரு சொல், அதன் அமைப்பு மற்றும் பொருள் தரும் அடிப்படையில் தொடராகவும் செயற்படும், வாக்கியமாகவும் செயற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கிய வகைகளுள் தனிவாக்கியம், கூட்டு வாக்கியம், கலப்புவாக்கியம் என்பன அடங்கும்.

( உ - ம்) வா, படி, ஆடு என்பன ஏவல் வாக்கியமாகவும் பயன்படும்.

( உ - ம்) நீ வா - இதில் வா என்பது முற்றுப் பயனிலை.

நீ வா - இதில் வா என்பது வாக்கியம்.

சொற்றொடர் பல வகைப்படும். அவற்றுள் மிக முக்கியமானவற்றை மட்டும் இங்கு குறிப்பிடலாம்.

பெயர்த் தொடர் அல்லது எழுவாய்த் தொடர்.

ஒரு பெயர்ச் சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயர்த் தொடர் எனப்படும்.

- கண்ணன்
- செல்லக் கண்ணன்
- நல்ல கண்ணன்

வினைத் தொடர் / பயனிலைத் தொடர்

ஒரு வினைச் சொல்லை தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் வினைத் தொடர் எனப்படும்.

- வந்தான்
- ஓடி வந்தான்
- வீட்டுக்கு ஓடி வந்தான்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- வாக்கியங்கள் தொடர்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பவற்றுக்கு வரைவிலக்கணம் அமைத்து உதாரணங்கள் தருவார்.
- கொடுக்கப்படும் பாடப்பகுதியிலிருந்து சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பவற்றை வேறுபடுத்தி எழுதுவார்.
- சொற்றொடர்களின் வகைகளைக் கூறுவார்.
- சொற்றொடர் வகைகளுக்கு உதாரணம் தருவார்.
- தனிவாக்கியம், கூட்டுவாக்கியம், கலப்புவாக்கியம் எனும் வாக்கிய வகைகளை விளங்கி அவற்றுக்கு உதாரணம் தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 5.0** : ஆக்கபூர்வமான செயல்திறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை - பேராசிரியர் ம.மு.உவைஸ்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- பேராசிரியர் ம.மு.உவைஸ் என்ற கட்டுரையை, வாசிப்பு பொறிமுறையை அனுசரித்து வாசிப்பார்.
- கட்டுரையாசிரியர் பற்றிக் கலந்துரையாடுவார்.
- பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களின் பல்வேறுபட்ட பணிகள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- தமிழ் இலக்கியத்தில் பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களின் நற்பண்புகள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- பேராசிரியர் ம.மு.உவைஸ் போன்று தாமும் பல்வேறு இலக்கியப் பணிகளைச் செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கைப் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பேராசிரியர் ம.மு.உவைஸ் என்ற கட்டுரையை வாசிப்புப் பொறிமுறையை அனுசரித்து வாசிக்க வழிப்படுத்துதல்.
- மாணவர்களைக் குழுக்களாகக் பிரித்து வாசிக்கச் செய்தல்.
- வாசித்த விடயங்களைக் கலந்துரையாடுதல்.
- வாசிக்கும் போது வழிப்படுத்துதல்.
- கலந்துரையாடிக் குறிப்பெடுக்கப்பட்ட விடயங்களைக் காட்சிப்படுத்தவும் விளக்குவதற்கும் வழிப்படுத்துதல்.
- மாணவரிடம் எழுமாறாக சிறிய சிறிய வினாக்களைக் கேட்டு அவற்றுக்கு விடை கூறச் சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- கட்டுரை ஆசிரியர் பற்றிய விளக்கம்.
- பேராசிரியர் ம.மு.உவைஸ் பற்றிய அறிமுகம்.
- வாசிப்பின் முக்கியத்துவம் பற்றிய விளக்கம்.
- பேராசிரியர் ம.மு.உவைஸின் பல்வேறு பணிகள், அவரது தனித்துவப் பண்புகள், அவரது முக்கியத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுதுதாள்கள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பொறிமுறையை அனுசரித்து விடயத்தெளிவோடு கட்டுரையை வாசிப்பார்.
- கட்டுரையின் உள்ளடக்கத்தைக் கூறுவார்.
- கட்டுரை தொடர்பான கருத்துக்களைப் பட்டியற்படுத்தி எழுதுவார்.
- பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களின் பல்வேறுபட்ட பணிகள் பற்றிக் கலந்துரையாடித் தெளிவுபடுத்துவார்.

### பின்னிணைப்பு

### பேராசிரியர் சி.தில்லைநாதன்



CP/HZ/CARFAX T.M.V. HATTON
LIBRARY

இக் கட்டுரை ஆசிரியரான பேராசிரியர் சி.தில்லைநாதன் இன்று இலங்கையில் ஓய்வு நிலையில் மூத்த தமிழ்ப் பேராசிரியராக விளங்குபவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் நீண்ட காலம் விரிவுரையாளராக, பேராசிரியராக, துறைத் தலைவராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். இவர், தினகரன், ceylon observer ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழாமில் உறுப்பினராக இருந்தவர். அரசகருமத் திணைக்களத்தில் மும்மொழி அகராதி ஆக்கத்திலும் சிங்கள அலுவலர்களுக்கு உகந்த தமிழ்மொழிப் பாடநூல் ஆக்கத்திலும் ஈடுபட்டவர். அங்கு, தமிழ்க் கலைச்சொல் ஆக்கத்தில் தொடர்ந்து துணைநிற்பவர். தமிழ்மொழி பற்றிய தேசிய ஆணைக் குழுக்களில் உறுப்பினராகப் பணிபுரிந்து வருபவர். பலநூல்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள், பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்கள் பற்றி எழுதிய கட்டுரையும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் ம.மு.உவைஸ்



ம. மு. உவைஸ் 1922 ஆம் ஆண்டு பாணந்துறையிலுள்ள கொறக்கானை எனும் ஊரில் மகுமூது லெப்பை, சைனம்பு நாச்சியார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். ஆங்கிலத்துடன் சிங்களத்தினையும் பயின்று 1946ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு தமிழ்த்துறைத் தலைவரான சுவாமி விபுலானந்தரின் வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைக்கழகத்தில் தமிழை, சிறப்புப் பாடமாகவும் சிங்களத்தினை உப பாடமாகவும் கற்றுப் பட்டம் பெற்றார். (இவர், சீறாப்புராணத்தை உலகறியச் செய்வதற்கு வித்திட்டவர் சுவாமி விபுலானந்தர்.) உவைஸ் இலங்கையில் குறிப்பிடத்தக்க இசுலாமியத் தமிழறிஞர்களில் ஒருவராவார். 1968 ஆம் ஆண்டு இடம் பெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 'தமிழ் இலக்கியத்திலுள்ள முஸ்லிம் இலக்கிய வடிவங்கள்' எனும் ஆங்கிலக் கட்டுரையை வாசித்தார். இஸ்லாமிய இலக்கியத்தின் 'திருச்சித்திருப்பம்' என்ற நூலை 1974 ஆம் ஆண்டு சென்னையில் இடம்பெற்ற இரண்டாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிட்டார். இந்த மாநாட்டில், 'முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் பயன்படும் செந்தமிழ்ச் சொற்கள்' என்ற கட்டுரையையும் வாசித்தார். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் உமறுப்புலவர் இருக்கைக்கு இணைப் பேராசிரியராக நியமனம் பெற்றார். இவர், இஸ்லாமும் இன்பத் தமிழும், இஸ்லாமியத் தென்றல், நம்பிக்கை, ஞானசெல்வர், குணங்குடியார், நீதியும் நியாயமும், நெஞ்சில் நிறைந்த சுற்றுலா, இஸ்லாம் வளர்த்த தமிழ், தமிழ் இலக்கியம், அரபுச் சொல் அகராதி போன்ற நூல்களை எழுதியுள்ளார். மார்ட்டின் விக்கிரமசிங்கவின் 'கம்பரெலிய' என்ற புதினத்தை 'கிராமியப் பிறழ்வு' என மொழிபெயர்த்தார். டி.என் தேவராஜனின், 'வணிக எண்கணிதம்' எனும் நூலை வணிக அங்க கணிதய என சிங்களத்தில் மொழிபெயர்த்தார். நபிகள் நாயகம், தித்திக்கும் திருமறை முதலான நூல்களைத் தமிழிலிருந்து சிங்களத்திற்கு முறையே 'நபிநாயக சரிதய', 'அல்குர்ஆன் அமாபிந்து' என மொழி பெயர்த்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 10.0 : எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 10.1 : வழுக்களின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கியம் அமைத்தல்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- எழுவாய் பயனிலை இயைபுபெற வாக்கியங்களை எழுதுவார்.
- வாக்கியங்களில் வாக்கிய உறுப்புகளை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- திணை, பால், எண், இடம், காலம் என்பவை வாக்கியங்களில் இயைபுபெற அமைய வேண்டியதை உதாரணத்துடன் விளக்குவார்.
- பொருத்தமான வேற்றுமை உருபுகளைக் கையாண்டு வாக்கியங்களை அமைப்பார் .

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வாக்கியங்கள் எழுதிய பகுதிகளைக் காட்சிப்படுத்தி, அதிலே இடம்பெறும் வாக்கிய உறுப்புகள் பற்றிக் கலந்துரையாடி, பாடத்தை ஆரம்பித்தல்.
- வாக்கிய உறுப்புகள் இயைபுபெற அமைந்திருப்பதனை அவதானிக்கச் செய்து, அவற்றை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என அட்டவணைப்படுத்தி எழுத வழிப்படுத்துதல்.
- திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றை அட்டவணைப்படுத்தி எழுத வழிப்படுத்துதல்.
- அட்டவணைகளை அடிப்படையாகக் கொண்டு வாக்கிய இயைபினைக் கலந்துரையாடி விளக்குதல்.
- மேலதிக வாக்கியங்களை மாணவர்களுக்குக் கொடுத்து, குழுநிலையில் வாக்கிய உறுப்புகளை இனங்கண்டு அட்டவணைப்படுத்தி எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- **திணை**

உயர்திணை - மனிதர், தேவர், நரகர்.
அரசன் வந்தான்.

அஃறிணை - மிருகம், பறவை முதலியன
நிலம், நீர் முதலியன.
உ - ம் - குருவி பறந்தது.
புலி பாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஐம்பால்**
  - ஆண்பால் உயர்திணை
  - பெண்பால் உயர்திணை
  - பலர்பால் உயர்திணை
  - ஒன்றன்பால் அ∴றிணை
  - பலவின்பால் அ∴றிணை

  உ - ம்

| | |
|---|---|
| அவன் வந்தான் | - உயர்திணை ஆண்பால். |
| அவள் வந்தாள் | - உயர்திணை பெண்பால். |
| அவர் வந்தார் | - உயர்திணை பலர்பால். |
| அது வந்தது | - அ∴றிணை ஒன்றன்பால். |
| அவை வந்தன | - அ∴றிணை பலவின்பால். |

- **மூவிடம்**

  தன்மை, முன்னிலை, படர்க்கை

| | |
|---|---|
| நான் வந்தேன் | - தன்மை ஒருமை |
| நாம் வந்தோம் | - தன்மை பன்மை |
| நீ வந்தாய் | - முன்னிலை ஒருமை |
| நீங்கள் வந்தீர்கள் | - முன்னிலை பன்மை |
| அவன் வந்தான் | - படர்க்கை ஒருமை |
| அவர்கள் வந்தார்கள் | - படர்க்கை பன்மை |

- **எண்**

  ஒருமை, பன்மை

  சித்திரத்தேர் அசைந்து வந்தது. - ஒருமை

  சித்திரத்தேர்கள் அசைந்து வந்தன - படர்க்கை பன்மை

- **காலம்**

  இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

| | |
|---|---|
| கமலா வந்தாள் | - இறந்தகாலம் |
| கமலா வருகிறாள் | - நிகழ்காலம் |
| கமலா வருவாள் | - எதிர்காலம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- பொருத்தமான வாக்கியங்கள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- வாக்கிய உறுப்புகளைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்துவார்.
- திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை அட்டவணைப்படுத்துவார்.
- வேற்றுமைகளைக் கையாண்டு கருத்துப் பிழையின்றி வாக்கியங்களை எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | 13.0 | 13.2 | பெயர்ச் சொல் | 03 | 44 |
| 02 | 1.0 | 1.3 | பசிப்பிணி மருந்து | 02 | 46 |
| 03 | 13.0 | 13.3 | 4ஆம், 5ஆம், 6ஆம் வேற்றுமைகள் | 06 | 48 |
| 04 | 1.0 | 1.2 | ஆர்க்கிமிடிஸ் | 04 | 52 |
| 05 | 11.0 | 11.2 | விளம்பரம், துண்டுப்பிரசுரம் | 06 | 55 |
| 06 | 7.0 | 7.1 | நாடகமே உலகம் | 04 | 58 |
| 07 | 13.0 | 13.2 | வினைச்சொல் | 04 | 60 |
| 08 | 6.0 | 6.1 | சொல்லின் இசை | 03 | 62 |
| 09 | 13.0 | 13.2 | இணைப்பிடைச் சொற்கள் | 03 | 64 |
| 10 | 11.0 | 11.1 | சுதந்திர கீதம் | 04 | 66 |
| 11 | 12.0 | 12.2 | உவமைத் தொடர்கள் | 04 | 70 |
| 12 | 3.0 | 3.2 | பாலித்திட வேண்டுமம்மா | 03 | 72 |
| 13 | 12.0 | 12.1 | மரபுச் சொற்கள் | 06 | 73 |
| 14 | 8.0 | 8.1 | ஓங்குக உயிர் இரக்கம் | 01 | 76 |
| 15 | 12.0 | 12.2 | மரபுத் தொடர்கள் | 04 | 78 |
| | | | | | |
| | | | மொத்தப் பாடவேளை | 57 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.2 : சொற்களின் வகையையும், இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : பெயர்ச் சொல்

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்

- சொற்களது வகைகளை அறிந்து, அவற்றை அட்டவணைப்படுத்துவார்.
- பெயர்ச்சொற்கள் ஏனைய சொற்களிலிருந்து தனியிடம் பெறுவதை உதாரணத்துடன் விளக்குவார்.
- பெயர்ச்சொற்களின் வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
- ஒவ்வொரு பெயர்ச்சொற்களையும் ஆதாரத்துடன் விளக்கி எழுதுவார்.
- பெயர்ச்சொற்களது இலக்கணப் பண்பை அறிந்து தமது ஆக்கங்களில் கையாள்வர்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- தமிழில் கையாளப்படும் பல்வேறு சொற்களைக் காட்சிப்படுத்தி, அவற்றுள் பெயர்ச்சொற்களை இனம் காணச் செய்தல்.
- பெயர்ச்சொற்களது வகைகளைப் பற்றி, மாணவர்களுடன் கலந்துரையாடி விளக்குதல்.
- ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் அறு வகைப் பெயர்கள், மூவிடப்பெயர்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பின்வரும் பெயர்ச்சொற்களின் வகைகள் பற்றி எழுமாறாகக் கேள்வி கேட்டு ஞாபகமூட்டுதல். மாற்றுப்பெயர், இடுகுறிப்பெயர், தொகைப்பெயர், காரணப்பெயர், கூட்டுப்பெயர், காரண இடுகுறிப்பெயர், ஆக்கப்பெயர், தொழிற்பெயர், பொதுப்பெயர், வினையாலணையும் பெயர், சிறப்புப் பெயர்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

| அறுவகைப் பெயர்கள் | மூவிடப் பெயர்கள் | |
|---|---|---|
| 1. பொருள்<br>2. இடம்<br>3. காலம்<br>4. சினை<br>5. குணம்<br>6. தொழில் | தன்மை | ஒருமை - நான்<br>பன்மை - நாம், நாங்கள் |
| | முன்னிலை | ஒருமை - நீ<br>பன்மை - நீங்கள் |
| | படர்க்கை | ஒருமை - அவன், அவள், அவர்கள்<br>பன்மை - அது, அவை |

| பெயர் வகைகள் | விளக்கம் | உதாரணம் |
|---|---|---|
| 1. மாற்றுப்பெயர் | பெயர்ச்சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடியது. | நீ, நான், அவன் |
| 2. தொகைப்பெயர் | தொகுத்துக் கூறுபவை | இருசுடர், முக்கனி |
| 3. கூட்டுப் பெயர் | இரு சொற்கள் சேர்ந்து ஆக்கப்படுவது. | வானொலி, தொலைக்காட்சி |
| 4. ஆக்கப் பெயர் | பெயர், வினையுடன் விகுதி சேர்த்து ஆக்கப்படுவது. | முதலாளி<br>புத்திசாலி<br>அவமானம் |
| 5. தொழிற்பெயர் | செயல் ஒன்று நிகழ்வதைக் குறிக்கும் பெயர்ச் சொல். | ஆடல், எழுதுதல் |
| 6. வினையாலணையும் பெயர் | வினைச்சொல் ஒன்று பெயரின் தன்மை பெறுவது. | வந்தவன், ஆடியவள் |
| 7. காரணப்பெயர் | காரணம் தழுவியதாக வருவது. | மண்வெட்டி |
| 8. இடுகுறிப்பெயர் | எவ்வித காரணமும் இன்றி வழங்குவது. | மலை, கடல் |
| 9. காரணஇடுகுறிப் பெயர் | காரணம் கருதிய போது காரண மாகவும் கருதாத போது இடுகுறியாகவும் வருவது. | முள்ளி |

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சொல்லட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்
- டிமைன் தாள்கள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- சொற்கூட்டங்களுள் பெயர்ச்சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- பெயர்ச்சொற்களது வகைகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இத்தகைய பெயர்ச்சொற்களைத் தமது ஆக்கங்களில் கையாள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 1.0 : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.3 : கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார்.

**விடய உள்ளடக்கம்** : பசிப்பிணி மருந்து

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்**

- பாடத்தைக் கருத்தூன்றி வாசித்து பிரதான கருத்தையும் துணைக் கருத்துக்களையும் எழுதுவார்.
- பசிப்பிணியின் கொடுமைபற்றி இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்தை எடுத்துக்கூறுவார்.
- பசிப்பிணி தீர உணவளிப்பதன் உயர்வுபற்றி விளக்கமளிப்பார்.
- மணிமேகலையில் பசிப்பிணிதீர்ப்பதன் முக்கியத்துவம்பற்றி கூறியிருப்பதை விளக்குவார்.
- இக்கட்டுரைப் பகுதியில் வருகின்ற பாத்திரங்களையும் அவற்றின் குணவியல்புகளையும் பற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.
- இக்கட்டுரையின் மொழிநடைபற்றிக் கலந்துரையாடிக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஐம்பெரும் காவியங்களுள் ஒன்றான மணிமேகலை பற்றி சுருக்கமாகக் கூறிப் பாடத்தினை ஆரம்பித்தல்.
- பசிப்பிணி தீர்ப்பது அறங்களில் சிறந்தது என்ற உண்மை விளக்கப்பட்டிருப்பதனை கலந்துரையாடல்மூலம் முன்வைத்தல்.
- இதில் தரப்பட்டுள்ள பாடல் பகுதிகளைச் சந்திபிரித்து வாசிக்கச் செய்தல்.
- பாடல் பகுதியின் பொருளை எழுதச் செய்தல்
- கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்த கூறச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- மணிமேகலை கூலவாணிகர் சீத்தலைச் சாத்தனாரால் பாடப்பட்டது.
- பசித்தோர்க்கு உணவளித்து பசிப்பிணி தீர்ப்பதனை அறமாக வலியுறுத்துகின்றது.
- பசிப்பிணி (நோய்) எனத் திருவள்ளுவர் கூறினாலும், மணிமேகலையிலே சாத்தனார் பசிப்பிணி என அழுத்தமாகக் குறிப்பிடுகின்றார்.
- மணிமேகலைக்கு அள்ள அள்ளக் குறையாத “மந்திரப் பாத்திரம் கிடைத்தல்” (அட்சயபாத்திரம்)
- மணிமேகலை அமுதசுரபியை சுயநலநோக்கமின்றிப் பொதுநலத்துக்காகவே பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "யானைத்தீ" எனும் கொடிய பசிநோய் காயசண்டிகையை பிணிப்பதும் அமுதசுரபியின் அமுதினை உண்டு அந்நோய் நீங்குவதும்.
- மணிமேகலை சிறைச்சாலையில் அமுதசுரபியின் துணைகொண்டு எல்லோருக்கும் உணவளித்தல்.
- இறுதியில் இக்கட்டுரையாசிரியர் ஒரு நாட்டு அரசனது முக்கிய பணியே தன் மக்களின் பசிப்பிணியைத் தீர்ப்பதுதான் என அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- பிரதி எடுக்கப்பட்ட கதை
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடப்பகுதியின் பிரதான கருத்தையும் துணைக் கருத்துக்களையும் கூறுவார்.
- பசிப்பிணி தீர்ப்பதன் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுவார்.
- இக்கட்டுரையில் வருகின்ற ஆபுத்திரன் மணிமேகலை ஆகிய பாத்திரங்கள் பசிப்பிணி நீங்கச் செய்த தொண்டினைப் பற்றி விளக்குவார்.
- அறங்களில் சிறந்த அறம் பசிப்பிணி தீர்ப்பது என்ற தலைப்பில் பேச்சு/சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம் 13.3** : சொற்றொடர் வாக்கியம் என்பவற்றின் வகையையும், அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நான்காம், ஐந்தாம், ஆறாம் வேற்றுமைகள்

**பாடவேளை** : 06

### கற்றற் பேறுகள்

- வேற்றுமையை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- வேற்றுமை உருபுகள் பயன்படும் விதத்தினை அறிந்து கூறுவார்.
- வேற்றுமை உருபு வெளிப்பட்டும், வெளிப்படாமலும் நின்று தொழிற்படுவதனை எடுத்துக்காட்டுவார்.
- வேற்றுமைக்கான உருபுகளையும் பொருள்களையும் எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- வேற்றுமை என்றால் என்ன? என்பதனை வினவி பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- வேற்றுமை அட்டவணையை காட்சிப்படுத்துதல்.
- வாக்கியத்தில் பெயர்ச் சொற்களின் இலக்கணத் தொழிற்பாட்டை வேறுபடுத்துவது வேற்றுமை என உதாரணங் காட்டி விளக்குதல்.
- உருபு இன்றி (6ஆம் வேற்றுமை/உடைமை வேற்றுமை) வேற்றுமை தொழிற்படுவதை எடுத்துக் காட்டுதல்.
- வேற்றுமை உருபு வெளிப்பட்டும், வெளிப்படாமலும் நின்று தொழிற்படுவதனை எடுத்துக்காட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- வேற்றுமையுருபுகள் 4ஆம், 5ஆம், 6ஆம், வேற்றுமைகள் வேற்றுமைப் பொருள்கள்

உ - ம் :-

4ஆம் வேற்றுமை கொடைப் பொருள் முதலியன
5ஆம் வேற்றுமை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது
6ஆம் வேற்றுமை உடைமைப் பொருள் / கிழமைப் பொருள் இவற்றுக்கான உதாரணங்களும், தற்காலப் பயன்பாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- வேற்றுமைகள் 4ஆம், 5ஆம், 6ஆம் வேற்றுமைகளுக்கான உருபு, பொருள் அடங்கிய அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- வேற்றுமையை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- வேற்றுமை உருபுகளையும், பொருள்களையும் அட்டவணைப்படுத்திக் காட்டுவார்.
- பொருத்தமான எடுத்துக்காட்டுக்களைப் பயன்படுத்தி 4ஆம், 5ஆம், 6ஆம் வேற்றுமைகளை விளக்கிக் கூறுவார்.
- வேற்றுமைகளை இனங்கண்டு தமது ஆக்கங்களில் பயன்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## வேற்றுமை

1. முதலாம் வேற்றுமை – எழுவாய் வேற்றுமை – உருபில்லை

   உதாரணம் :

   - உழவன் பாடுகிறான்
   - அவர் யார்?

2. இரண்டாம் வேற்றுமை – செயப்படுபொருள் வேற்றுமை – ஐ உருபு

   உதாரணம் :

   - வீட்டைக் கட்டினான் - ஆக்கப்படுபொருள்
   - சுவரை இடித்தான் - அழிக்கப்படுபொருள்
   - இலங்கையை அடைந்தான் - அடையப்படுபொருள்
   - மனையைத் துறந்தான் - துறக்கப்படுபொருள்
   - காளையை ஒத்தான் - ஒக்கப்படுபொருள்
   - பொருளை உடையான் - உடைமைப்பொருள்

3. மூன்றாம் வேற்றுமை – உடன் நிகழ்ச்சி வேற்றுமை – ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகிய உருபுகள்

   உதாரணம் :

   - வாளால் வெட்டினான் - கருவிப் பொருள்
   - அறத்தான் வருவதே இன்பம் - கருவிப் பொருள்
   - சிற்பியால் சிலை செய்யப்பட்டது - கருத்தாப் பொருள்
   - மன்னனால் கோயில் கட்டப்பட்டது - கருத்தாப் பொருள்
   - தாயொடு சேயும் வந்தாள் - உடன் நிகழ்ச்சிப் பொருள்
   - தாயோடு சேயும் வந்தாள் - உடன் நிகழ்ச்சிப் பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நான்காம் வேற்றுமை – கொடை வேற்றுமை – கு உருபு

உதாரணம் :

- கபிலருக்குப் பொன் கொடுத்தான் - கொடை
- பாம்புக்குப் பகை கீரி – பகை
- அண்ணனுக்கு நண்பன் தம்பி – நட்பு
- அரசனுக்குரியது மணிமுடி – தகுதி
- ஆடைக்கு நூல் - முதற் காரணம்
- கூலிக்கு வேலை – நிமித்த காரணம்
- தந்தைக்கு மகன் - உறவு

5. ஐந்தாம் வேற்றுமை – நீங்கல் வேற்றுமை - இன், இல் உருபுகள்

உதாரணம் :

- ஊரின் நீங்கினான் - நீக்கல்
- இலங்கையின் வடக்கு இந்தியா - எல்லை
- கல்வியில் பெரியவர் கம்பர் - ஏது
- அவரில் இவர் உயரம் - ஒப்பு

6. ஆறாம் வேற்றுமை – உடைமை வேற்றுமை – அது, ஆது, அ உருபுகள்

உதாரணம் :

- தனது கை - தன் கை (தற்கிழமை)
- எனது புத்தகம் - என் புத்தகங்கள் (பிறிதின் கிழமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 1.0 : பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப, வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.2 : பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார்.

**விடய உள்ளடக்கம்** : கவிதை - ஆர்க்கிமிடிஸ்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- ஆர்க்கிமிடிஸ் பற்றி அறிந்து கூறுவார்.
- செய்யுளை நயந்து வாசிப்பார்.
- செய்யுளை இசையோடு ஓதுவார்.
- செய்யுளைப் பொருளுணர்ந்து ஓதுவார்.
- செய்யுளின் பொருளை, தமது நடையில் எழுதுவார்.
- செய்யுளைக் கதையாகக் கூறுவார்.
- ஆர்க்கிமிடிஸ் விதியைக் கூறுவார்.
- விடாமுயற்சி வெற்றி தரும் என்பதனைக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஆர்க்கிமிடிஸ் பற்றிக் கலந்துரையாடி அறிமுகம் செய்தல்.
- ஆர்க்கிமிடிஸ் எனும் கவிதையைத் தனித்தனியாகவும் குழுவாகவும் வாசிக்க வழிகாட்டுதல்.
- கவிதையை இசையுடன் ஓதுவதற்கு வழிகாட்டுதல்.
- ஆர்க்கிமிடிஸ் தத்துவத்தினை பரிசோதனைமூலம் செய்து காட்டுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- ஆர்க்கிமிடிஸ் ஒரு விஞ்ஞானி
- "ஒரு பொருளைத் தண்ணீரில் அமிழ்த்தினால் அதன் எடைக்குச் சமனான நீர் வெளியேறும்" என்ற உண்மையை உலகறியச் செய்தவர்.
- கணிதம், பௌதீகம், வானவியல் போன்ற துறைகளின் மேதை.
- தளங்களின் சமநிலை, மிதக்கும் பொருள்கள் எனும் நூல்களை எழுதியுள்ளார்.
- சைரக்யூஸ் நாட்டு மன்னர் ஹீரானுக்கு அவருடைய கிரீடத்தினை செய்த பொற்கொல்லர் தங்கத்துடன் வெள்ளியைக் கலந்திருப்பானோ? என்ற சந்தேகம் உருவானது. அந்தச் சந்தேகத்தினைப் போக்கும்படி ஆர்க்கிமிடிஸ்ஸிடம் கூறினார் மன்னர். ஆர்க்கிமிடிஸ் குளிக்கும்போது சந்தேகத்துக்கான விடையைக் கண்டுபிடித்தார். அதுவே, ஆர்க்கிமிடிஸ் விதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தரவிருத்தி உள்ளீடுகள்

- ஆர்க்கிமிடிஸ் விதி
- பாடநூல்
- ஆர்க்கிமிடிஸ் பற்றிய புத்தகங்கள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- ஆர்க்கிமிடிஸ் என்ற விஞ்ஞானியைப் பற்றிக் கூறுவார்.
- செய்யுளின் பொருளை எழுதுவார்.
- ஆர்க்கிமிடிஸ் விதியைச் செய்துகாட்டுவார்.

### ஆர்க்கிமிடிஸ் தத்துவத்தினை விளக்கும் படம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்க்கிமிடீஸ் (கி.மு.287-212)



ஒரு பொருளானது தண்ணீரில் மூழ்கினால் அது தன் எடைக்குச் சமனான நீரை வெளியேற்றுகின்றது என்ற உண்மையைக் கண்டறிந்து உலகிற்குக் கூறியவர். இந்த அறிவியல் உண்மை அவர் பெயராலே ஆர்க்கிமிடீஸ் கோட்பாடு என்று அழைக்கப்படுகின்றது. பத்தாயிரம் தொன் எடையுள்ள ஒரு கப்பலின் உடற்பகுதி, அதே எடையுள்ள தண்ணீரை இடம்பெயரச் செய்யும். எனவே ஒரு கப்பலின் எடையைக் கூறுவதற்குப் பதிலாக அது இடம்பெயரச் செய்யும் தண்ணீரின் எடையைக் கூறுகின்றார்கள். கணிதம், பௌதிகம், வானவியல் போன்ற பல துறைகளில் மேதையாக விளங்கியவர். கணிதத்தில் வட்டத்தின் பரப்பளவு, சுற்றளவு போன்றவற்றைக் கணிக்கும் வாய்பாடுகளைக் கண்டுபிடித்தார். நீள் வட்டத்தின் பரப்பினை அறியும் சுருக்க விதிமுறையை உருவாக்கினார். கணித ஜியோமி விதியில் இவர் கண்டறிந்த உண்மைகள் அளவில்லாதவை. அன்றாட வாழ்வை வசதியாக்கப் பல எளிய இயந்திரங்களை இவர் உருவாக்கினார். திருகுபோன்ற கருவியையும் கப்பியையும் வடிவமைத்து நீரை மேலே ஏற்றிக் காட்டினார். நெம்புகோல் மற்றும் புவிஈர்ப்பு உருளை ஆகியவற்றைக் கண்டறிந்தவரும் இவரே. "இவ்வுலகை விட்டு வெளியே நிற்க ஓர் இடம் கிடைக்குமானால் பூமிப் பந்தையே நெம்புகோல் கொண்டு என்னால் புரட்டிவிட முடியும்" என்று கூறி நெம்பு கோல்களின் தத்துவத்தை விளக்கினார்.

ஆர்க்கிமிடீஸ் கோட்பாட்டு அடிப்படையிலேயே கப்பல்கள் உருவாக்கப்படுகின்றன. இவருக்கு எழுபது வயதானபோது ரோமாபுரிக்கும் சிலி நாட்டுக்கும் போர் மூண்டது. இரும்பினால் செய்யப்பட்ட பிரமாண்டமான உருளைக் குண்டுகளை மிகப் பெரிய கவண் பொறியில் வைத்து அடித்து ரோமானியக் கப்பல்கள் மீது வீசி அவற்றை கடலில் மூழ்கடித்தார். மிகப் பெரிய லென்சுகளை உருவாக்கி அவற்றின் மூலம் சூரிய ஒளியைக் குவித்து அந்த ஒளிக்கற்றைகளை எதிரி நாட்டு பாய்மரக் கப்பல்களின் மீது விழச் செய்து அந்த பாய்மரக் கப்பல்களையே எரிக்கச் செய்தார். எவ்வாறாயினும் ரோமானியர் சிலி நாட்டைக் கைப்பற்றி முதலில் ஆர்க்கிமிடீஸ்சை கைது செய்வதற்குச் சென்றனர். கணித ஆராய்ச்சியில் தன்னை மறந்தே மூழ்கி இருந்த அவர் மணலில் ஏதோ கணக்குகளைச் செய்துகொண்டிருந்தார். அவரைக் கண்ட ரோமானிய வீரன் ஒருவன் அவரை வெட்டினான். இறக்கும் தறுவாயில் "இன்னும் சிலமணி நேரம் தாமதமாக வந்திருந்தால் ஓர் அரிய உண்மை உலகுக்குக் கிடைத்திருக்கும்! உங்களால் என் உடலை மட்டுமே எடுத்துச் செல்லமுடியும், என் அறிவை அல்ல என்று கூறிய படியே உயிர் நீத்தார் அந்த மாமேதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 11.0 : படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 11.2 : நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : விளம்பரம், துண்டுப்பிரசுரம்.

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்**

- விளம்பரம், துண்டுப்பிரசுரம் என்பவற்றை ஆக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களைக் கலந்துரையாடுவார்.
- இவை இரண்டையும் பிரசுரிப்பதற்கான நோக்கங்கள் பற்றிக் கூறுவார்.
- விளம்பரம், துண்டுப்பிரசுரம் ஆகியவற்றில் அமைய வேண்டிய அம்சங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- விளம்பரங்களில் இடம்பெற வேண்டியதை விளக்கிக் கூறுவார்.
- முக்கிய செய்தி ஒன்றை வெளிப்படுத்தும் துண்டுப் பிரசுரத்தில் அமைய வேண்டியதை எடுத்துக் காட்டி விளக்குவார்.
- விளம்பரம், துண்டுப்பிரசுரம் என்பனவற்றை வெளியிடுபவரது பெயர், முகவரி, திகதி என்பன அமைய வேண்டிய வகையை நன்கறிந்து அதனைப் பின்பற்றித் தாமும் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- விளம்பரம், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை முன்கூட்டியே தொகுக்கச் செய்து, அவற்றைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- அவற்றைக் கரும்பலகையில் எழுதிக் காட்டி, மேலதிக விளக்கம் கூறிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து தலைப்புகளை வழங்கி விளம்பரம், துண்டுப்பிரசுரம் எழுதச் செய்தல்.
- குழுத் தலைவர்களால் முன் வைக்கப்பட்ட தகவல்களைக்கொண்டு கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- நடைமுறைத் தேவைகளுக்காக எழுந்த ஆக்கங்களில் விளம்பரம், துண்டுப்பிரசுரம் என்பவை முக்கிய இடம்பெறுகின்றன.
- விற்பனையை அதிகரித்தல், பாவனையை மேம்படுத்தல், தகவல்களை வழங்கி பிரசாரம் செய்வதே விளம்பரத்தின் நோக்கங்களாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளம்பரம் ஒன்றில் அமையவேண்டிய அம்சங்கள்**

- கவர்ச்சிகரமான தலைப்பு.
- சிறந்த மொழி ஆட்சி.
- சுருங்கக் கூறி விளங்க வைத்தல்.
- படங்கள், வர்ணங்கள், குறியீடுகள் என்பவை மனதைக் கவர்வனவாக அமைதல்.

**துண்டுப்பிரசுரம் ஒன்றில் அமையவேண்டிய அம்சங்கள்**

- கவர்ச்சிகரமான தலைப்பு
- சிறந்த மொழி ஆட்சி
- சுருங்கக் கூறி விளங்க வைத்தல்.
- படங்கள், வர்ணங்கள், குறியீடுகள் என்பவை மனதைக் கவர்வனவாக அமைதல்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சேர்க்கப்பட்ட விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- விளம்பரம், துண்டுப்பிரசுரம் என்பவற்றை ஆக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றிக் கூறுவார்.
- விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆக்கும் நோக்கம் பற்றி விளக்குவார்
- விளம்பரத்திலும் துண்டுப்பிரசுரத்திலும் அமைய வேண்டிய அம்சங்களின் முக்கியத்துவம் பற்றிக் கூறுவார்.
- விளம்பரத்திலும் துண்டுப்பிரசுரத்திலும் கையாளப்படும் மொழிநடையை வேறுபடுத்திக் காட்டுவார்.
- இவை இரண்டிலும் வெளியிடுபவரின் பெயர், முகவரி என்பன முக்கியமாக இடம்பெற வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பர மாதிரி




## துண்டுப்பிரசுர மாதிரி




(இணையத் தரவிறக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை - நாடகமே உலகம்

**பாடவேளை** : 04

### கற்றற் பேறுகள்

- பாடப்பகுதியைக் கருத்தூன்றி வாசிப்பார்.
- அதிலுள்ள பிரதான கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்கண்டு கூறுவார்.
- உரைப்பகுதியின் மொழிநடை குறித்துக் கருத்துக் கூறுவார்.
- படைப்பாக்க உத்திக்களை நயந்து முன்வைப்பார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- கட்டுரையின் பிரதான கருத்து, துணைக்கருத்து என்பவற்றை எழுதிக் காட்சிப்படுத்துதல்.
- பாடத்தை மௌனமாக வாசிக்கச் செய்வதுடன் வினாக்களுக்கு விடையளிக்கச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- கட்டுரை ஆசிரியர் பற்றிக் குறிப்பிடல்.

உலக அனுபவங்கள் அனைத்தையும் குறுகிய நேரத்தில் மேடையிற் செய்து காட்டுதல். (நாடகமே உலகம்)

**ஒற்றுமைகள்**

உலகம் - பல்வேறு சம்பவங்கள் / பல்வேறு அனுபவங்கள்

நாடகம் - பல்வேறு சம்பவங்கள் / பல்வேறு அனுபவங்கள்

உலகம் - ஒவ்வொரு மனிதனும் ஒரு பாத்திரம்

நாடகம் - ஒவ்வொரு மனிதனும் ஒரு பாத்திரம்

**வேற்றுமைகள்**

உலகம் - சம்பவங்கள்/ அனுபவங்கள் நீண்டகாலத்தில் இடம்பெறும்.

நாடகம் - சம்பவங்கள்/ அனுபவங்கள் குறுகிய நேரத்தில் காட்டப்படும்.

உலகம் - மனிதன், நடிகனாகவே வாழ்க்கை.

நாடகம் - சிறிது நேரத்திற்கு ஒரு பாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரதான கருத்து, துணைக்கருத்து என்பவற்றின் விளக்கம்.
- மையக்கருத்தை இனங்காணல்.
- நாடகத்தை உலகத்தோடு ஒப்பிடுவதன் பொருத்தப்பாட்டினை விளக்குதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்.

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடப்பகுதியின் பிரதான கருத்தையும் துணைக்கருத்தையும் இனங்கண்டு கூறுவார்.
- இவ்வுரைப் பகுதியின் மொழிநடை பற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.
- நாடக மேடையாக உலகத்தை உருவகித்து விளக்குவதிலுள்ள பொருத்தப்பாட்டினை விளக்குவார்.
- இப்பகுதியில் வெளிப்படும் ஆசிரியரின் படைப்பாக்க உத்திகளைக் கிரகித்துக் கூறுவார்.
- குறட்பாக்களில் வெளிப்படும் விழுமியக் கருத்துக்களை எழுதுவார்.
- இப்பாடல்களை இயன்றளவு இசையுடன் பாடுவார்.

## பின்னிணைப்பு

### நாடகம்

நாடகம் என்பது ஒரு கலை அல்லது பலவகைக் கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாட்டு + அகம் நாடகம். அதாவது, நாட்டு மக்களின் அகத்தைப் பிரதிபலிக்கும் கலை, இயல், இசை,மற்றும் உடல் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட வடிவம். இதனை உலகமே ஒரு நாடகமேடை என்றார் கிரேக்க அறிஞரான ஷேக்ஸ்பியர். இயல், இசை, நாடகம் மூன்றும் சேர்ந்த தமிழை முத்தமிழ் என்கின்றோம். நாடகம் என நாம் கூறுவதை பழந்தமிழ் கூத்து என வழங்குகிறது. இலங்கையில் வடமோடி, தென்மோடி, விலாசம், காத்தவராயன், வசந்தன் கூத்து, நாட்டை, வடபாங்கு, தென்பாங்கு,காமன்கூத்து, கோவலன் கூத்து, பறை மேளக் கூத்து எனும் வகையில் கூத்துக்கள் ஆடப்படுகின்றன. கூத்தினை நாடகம் என்றும் அழைப்பது வழக்கமாக உள்ளது.

மட்டக்களப்பு - வடமோடி, தென்மோடி, விலாசம், பறை மேளக்கூத்து, வசந்தன்

யாழ்ப்பாணம் - வடமோடி, தென்மோடி

மன்னார் - வடபாங்கு, தென்பாங்கு

மலையகம் - காமன்கூத்து, அருச்சுனன் தவசு, பொன்னர்சங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.2 : சொற்களின் வகையையும், இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : வினைச்சொல்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- சொற்கள் பலவற்றுள் காலம் காட்டும் சொற்கள், செயலை உணர்த்துஞ் சொற்கள் என்பனவற்றை வேறு பிரித்து எழுதுவார்.
- அதனை அடிப்படையாகக் கொண்டு வினைச்சொற்களுக்கான வரைவிலக்கணத்தை தெளிவுபடுத்தி எழுதுவார்.
- வினைச்சொற்களைத் தமது ஆக்கங்களில் கையாண்டு எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பல்வேறு சொற்களைக் கொண்ட சொல்லட்டைகளைக் காட்சிப்படுத்தி அவற்றுள் வினைச்சொற்களை இனங்காணச் செய்து, கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- வினைச்சொல் என்றால் என்ன என்பதை விளக்குதல்.
- வினைச்சொற்கள் காலம் காட்டுவதையும் செயல் உணர்த்துவதையும் விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- செயல் ஒன்று நடைபெறுவதைக் குறிப்பதே வினைச்சொல். அதாவது, ஒரு பொருளின் வினையை (செயலை) உணர்த்துவதாகும்.

  தம்பி ஓடினான் என்ற தொடரில் ஓடினான் வினையாகும்.

  வினைச்சொல் மூன்று காலமும் உணர்த்தும்.

  உதாரணம் :

  - ஓடினான் (இறந்த காலம்)
  - ஓடுகின்றான் (நிகழ் காலம்)
  - ஓடுவான் (எதிர் காலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• வினைச்சொல்லிற்கு சொல் இலக்கணம் கூறுதல்.

உதாரணம் : **ஓடினான்**

| | | |
|---|---|---|
| திணை | - | உயர்திணை |
| பால் | - | ஆண்பால் |
| எண் | - | ஒருமை |
| இடம் | - | படர்க்கை |
| காலம் | - | இறந்தகாலம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

• பாடநூல்
• சொல்லட்டைகள்
• எழுது தாள்கள்
• எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

• வினைச்சொற்களுக்கான வரைவிலக்கணத்தை விளக்கி எழுதுவார்.
• வினைச்சொற்கள் காலம் காட்டுவதையும் செயல் உணர்த்துவதையும் உதாரணம் மூலம் விளக்குவார்.
• வினைச்சொல் ஒன்றினுக்கு திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 6.0 :** கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம் :** கட்டுரை - சொல்லின் இசை

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள்**

- இக்கட்டுரை ஆசிரியர் மு.வரதராசன் பற்றிச் சுருக்கமாகக் கூறுவார்.
- இக்கட்டுரையின் பிரதான கருத்தையும் துணைக் கருத்தையும் இனங்கண்டு முன்வைப்பார்.
- சொல்லோடு இசை சேர்வதனால் சொல் எவ்வாறு வளமும் வலியும் பெறுகிறது என்பதை விளக்கி அவற்றுக்கு உதாரணங்களையும் குறிப்பிடுவார்.
- இசை ஒழுங்கை அனுசரித்தே சொற்கள் ஆக்கம் பெறுகின்றன என்பதற்கான உதாரணங்களைத் தருவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரை ஆசிரியர் மு.வரதராசன் பற்றிய தகவல்களைத் திரட்ட வழிப்படுத்துதல்.
- கட்டுரையின் மையக்கருத்தைச் சுருக்கி ஒரு வாக்கியத்திலோ ஒரு சில வாக்கியங்களிலோ எழுதிக் காட்சிப்படுத்தித் தயார்செய்தல்.
- இசை ஒழுங்கை அனுசரித்துச் சொற்கள் ஆக்கம் பெற்றிருப்பதற்கான உதாரணச் சொற்களைச் சேகரித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- சொல், இசை, பாட்டு - எனும் சொற்கள் இந்தக் கட்டுரையிலே என்ன பொருளில் கையாளப்பட்டிருக்கின்ற என்பதைக் கலந்துரையாடச் செய்தல்.
- இசையோடு ஒன்றியே மொழி பிறந்தது.

  இசையை அனுசரித்தே சொற்கள் பெரும்பாலும் ஆக்கம் பெறுகின்றன.

  உ - ம் : இல்லை, அல்ல.

  மனிதன் திருத்தமாகப் பேசக் கற்றுக்கொள்வதற்கு முன்பே இசை அறிமுகமானது.

  நாம் பேசும் போதும் ஏதாவது செயற்பாட்டைச் செய்யும்போதும் சந்தத்திற்கே செய்கின்றோம்.

  நாட்டுக்கு நாடு இசையும், இசைக்கருவிகளும் வேறுபடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரவிருத்தி உள்ளீடுகள்


- பாடநூல்
- எழுது தாள்கள், எழுது கருவிகள்
- டிமைன் தாள்கள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரையை மௌனமாக வாசிப்பார்.
- கட்டுரையின் பிரதான கருத்தையும், துணைக்கருத்துக்களையும் இனங்கண்டு கூறுவார்.
- சொல்லோடு இசை கலந்திருக்கும் விதத்தை விவாதித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.
- தமிழ்ச் சொல்லாக்கம், சொற்புணர்ச்சி என்பன இசையை ஒட்டி அமைந்திருப்பதை விளங்கி விபரிப்பார்.

### பின்னிணைப்பு

### மு.வரதராசன்



இவர் 25.04.1912ஆம் ஆண்டு பிறந்தார். இவரின் தந்தை முனுசாமி முதலியார், தாயார் அம்மாக் கண்ணு. இளமைக் கல்வியைச் சிறப்பாகக் கற்று 1939ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரையாளராகி அக்கல்லூரியின் கீழ்த்திசை மொழிகளின் விரிவுரையாளர் என்ற பொறுப்பை ஏற்றார். 1948ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கியத்தில் இயற்கை என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து முனைவர் (கலாநிதி) பட்டம் பெற்றார். 1939ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த இவர் 1961ஆம் ஆண்டுவரை அங்கு பணியாற்றினார். 1945ஆம் ஆண்டில் அக்கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவரானார். 1971ஆம் ஆண்டில் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராகப் பொறுப்பேற்று 1974ஆம் ஆண்டுவரை சிறப்புப் பணியாற்றினார்.

சோவியத்நாடு, பாரிஸ், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, யப்பான், இத்தாலி, கிரேக்கம் முதலிய நாடுகளில் கல்வித்துறை ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றினார். இவர் கரித்துண்டு, தம்பிக்கு, அன்னைக்கு, குழந்தைப் பாடல்கள், கழகத்தமிழ் இலக்கணம், மூன்று நாடகங்கள் ஆகியவற்றோடு பல திறனாய்வு நூல்களையும் இலக்கிய ஆய்வுகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவரது அகல்விளக்கு என்னும் நாவலுக்கு சாகித்திய அகாதமி (அகடமி) விருது கிடைத்தது. அத்துடன் அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்கும் தமிழக அரசின் விருது கிடைத்தது.

திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழி நூல், கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், விடுதலையா, ஓலச்செய்தி ஆகிய ஆறு நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரத்தைப் பெற்றன. பல நூல்கள் ஆங்கிலம், இந்தி, மராத்தி, சிங்களம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. அவற்றில் பெற்ற மனம் திரைப்படமானது. இவ்வாறு பல சாதனைகளைப் படைத்த இவர் 10.10.1974ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.2 : சொற்களின் வகையையும், இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : இணைப்பிடைச் சொற்கள்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- சொற்களில் இணைப்பிடைச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- சொற்களில் இவ்வகையினாலான இணைப்பிடைச் சொற்கள் பெறும் இடத்தை ஆதாரத்துடன் விளக்குவார்.
- இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு தமது ஆக்கங்களை மெருகூட்டச் செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு வாக்கியங்களையும் ஏனைய சாதாரண வாக்கியங்களையும் காட்சிப்படுத்தி, கலந்துரையாடிப் பாடத்தை ஆரம்பித்தல்.
- அவற்றுள் இடம்பெறும் இணைப்பிடைச் சொற்களை இனங்காண வழிநடத்தல்.
- தாம் எழுதும் ஆக்கங்களில் இணைப்பிடைச் சொற்களை இனங்காண வழிநடத்தல்.
- சிறுசிறு வாக்கியங்களை இணைக்க இணைப்பிடைச் சொற்களைக் கையாளச் செய்தல்.
- வாக்கியத்தினுள்ளும் வாக்கியங்களுக்கிடையேயும் வரும் இணைப்பிடைச் சொற்கள் பற்றி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

- வாக்கியத்தினுள் வரும் இணைப்பிடைச் சொற்கள் சிலவற்றை அவதானிக்கலாம்.
  - சூறாவளி வீசிய**தனால்** ஊரே அழிந்தது.
  - கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
  - அரசனா**னாலும்** தாய்க்கு மகன் இவன்.

**வாக்கியங்களுக்கு இடையில் வரும் இணைப்பிடைச் சொற்கள் சில**

- மழை விடாது பொழிந்தது. **ஆனாலும்** குளம் நிரம்பவில்லை.
- நான் இக் கருமத்தைச் செய்வேன். **என்றாலும்** பாடசாலை மாணவரும் அதைச் செய்ய வேண்டும்.
- கர்ணன் வெல்வான் **அல்லது** அர்ச்சுனன் வெல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பிடைச் சொற்கள்**

- ஆகவே
- ஆனால்
- ஏனென்றால்
- எனினும்
- இருந்தாலும்
- அல்லாமல்
- தவிர
- அன்றி
- அதன் காரணமாக

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- வாக்கியங்கள் எழுதிய சொல்லட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கொடுக்கப்பட்ட வாக்கியங்களில் இடம்பெற்ற இணைப்பிடைச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- பாடத்தில் இடம்பெற்ற இணைப்பிடைச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு வாக்கியங்கள் எழுதுவார்.
- வாக்கியங்களினுள்ளும் வாக்கியங்களுக்கிடையிலும் இணைப்பிடைச் சொற்களைக் கையாண்டு எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 11.0 : படைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 11.1 : பல்வேறு ஆக்கங்களை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : கவிதை - சுதந்திர கீதம்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- பாடலை மௌனமாக வாசித்துக் கிரகிப்பார்.
- இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தமை பற்றிக் கூறுவார்.
- இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்க பாடுபட்டவர்களைப் பட்டியற்படுத்தி, அவர்களின் பின்னணி பற்றிக் கூறுவார்.
- பாடல் மூலம் பெற்ற அனுபவத்தை உள்வாங்கி கவிதை, கட்டுரை போன்ற ஆக்கங்களை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடலை முன்வைத்தல்.
- இலங்கையானது சுதந்திரத்தை எப்போது பெற்றது எனக்கேட்டுப் பாடலை இரசனையோடு வாசிக்க வழிகாட்டுதல்.
- இலங்கை சுதந்திரம் பெற்றபோது பாடப்பட்ட இப்பாடலை அறிமுகஞ் செய்து கலந்துரையாடுதல்.
- இது போன்ற கவிதையை எழுதவோ, கட்டுரை எழுதவோ வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- இலங்கை சுதந்திரம் அடைவதற்காகப் பாடுபட்டவர்களை தேசியத்தலைவர்கள் எனக்கூறுகிறோம்.
- அவர்களுள் முக்கியமானவர்கள் சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், ஜேம்ஸ் பீரிஸ், தம்பிமுத்து, டி. எஸ். சேனாநாயக்க, டி.பி.ஜாயா முதலியோர்.
- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போருக்கு அடிமைப்பட்டிருந்தாலும் இறுதியில் அவர்கள் யாவரையும் எதிர்த்து சுதந்திரம் பெறல்.
- கவிதையை இயற்றியவர்
- கவிதையில் கூறப்படும் விடயங்கள் (ஒழுங்கு முறையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- பாடல் எழுதிய சொல் அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடலைக் கருத்தூன்றி மௌனமாக வாசிப்பார்.
- தமது அனுபவங்கள், அவதானிப்புகள், சிந்தனைகள் போன்றவற்றை வெளிப் படுத்திக் கவிதை ஆக்குவார்.
- தர்க்கரீதியான கருத்துக்களை முன்வைத்துக் கட்டுரை எழுதுவார்.
- எவ்வித ஆக்கமாக அமைந்தாலும் அதன் அமைப்பு, வடிவம், தலைப்பு என்பவற்றிற்கு ஏற்ப எழுதிக்காட்டுவார்.
- ஆக்கங்களை மற்றவர்க்கு புரியும் வண்ணம் பொருத்தமான மொழிநடையைக் கையாண்டு எழுதுவார்.

## டி.எஸ்.சேனாநாயக்கா



டொன் சுடீபன் சேனாநாயக்கா 20.09.1887ஆம் ஆண்டு பிறந்தவர். இலங்கைத் தேசத்தின் தந்தையான இவர் இலங்கையின் முதலாவது பிரதமருமாவார். நில அளவைத் திணைக்களத்தில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். 1929ஆம் ஆண்டு இலங்கைச் சட்டவாக்கக் கழகத்தில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர், 1931 அம் ஆண்டு மானில அவைக்குத் தெரிவு செய்யப்பட்டு, வேளாண்மை, காணி அமைச்சராகி, அச் சேவைக்காகப் பெரிதும் உழைத்தவர். 1946ஆம் ஆண்டு பிரிட்டிஸ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட knight பட்டத்தினை அவர் பெற மறுத்தார். எனினும் பிரித்தானிய அரசுடன் அவருடைய நல்லுறவு தொடர்ந்தது. 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இலங்கையின் முதலாவது பிரதமரானார். கல்லோயாத் திட்டத்தினைத் தொடங்கி வைத்த இவர், இலங்கைத் திருநாட்டிற்காகப் பல சேவைகளைச் செய்தார். 1952ஆம் ஆண்டு குதிரைச் சவாரியின்போது விழுந்து காயமடைந்து மரணத்தைத் தழுவினார். இவருக்குப் பின்னர் இவருடைய மகன் டட்லி சேனாநாயக்கா இலங்கைத் திருநாட்டின் பிரதமரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேர்.பொன்.இராமநாதன்



பொன்னம்பலம் இராமநாதன் மானிப்பாயைச் சேர்ந்தவர். ஆரம்பக் கல்வியைக் கொழும்பு இராணி கல்விக் கழகத்தில் கற்றார். பின்னர் தனது 13 வது வயதில் சென்னையில் கல்வி கற்றார். 1873 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற வழக்கறிஞரானார். 1879ஆம் ஆண்டு சட்டசபை உறுப்பினரானார். 1911ஆம் ஆண்டு இடம்பெற்ற சட்டசபைக்கான முதலாவது, முழு இலங்கையரையும் பிரதிநித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 1921ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் "சேர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். 1915ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தில் கைதுசெய்யப்பட்டு பிரித்தானியச் சிறையில் அடைக்கப்பட்டு, மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட பலரைத் தனது வாதத்திறமையால் வென்று சிறைமீட்டவர். இது இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். தனது தந்தையாரால் 1857ஆம் ஆண்டு கொச்சிக்கடையில் அமைத்து குடமுழுக்குச் செய்வித்த ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர கோயில் எழுந்தருளிய இடத்திலே புதியதொரு கோயிலை 1907ஆம் ஆண்டு கருங்கற் பணியாக ஆரம்பித்து 1912ஆம் ஆண்டு குடமுழுக்குச் செய்வித்தார்.

## சேர்.பொன்.அருணாசலம்



பொன்.அருணாசலம் 14.09.1853ஆம் ஆண்டு பிறந்தவர். பிற்காலத்தில் சேர்.பொன்.அருணாசலம் என்று அறியப்பட்டவர். குமாரசுவாமி முதலியார், சேர்.பொன்.இராமநாதன் ஆகியோர் இவரது சகோதரர்கள். கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்று 1870ஆம் ஆண்டு இராணி புலமைப் பரிசிலையும் பெற்று லண்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்றார். 1875 ஆம் ஆண்டு சிவில் சேவை உத்தியோகத்தர் தேர்வில் சித்திபெற்ற முதல் இலங்கையர் இவராவார். இவர் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றினார். இவர் பதிவாளர் நாயகமாக இருந்த காலத்தில் பல்வேறு நுணுக்கங்களுடனான குடிசன மதிப்பீட்டை உருவாக்கினார். 1919ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது முயற்சியால் உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரசிற்கு முதல் தலைவராகவும், 1921ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட தமிழர் மகாஜன சபையின் தலைவராகவும் இருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரி.பி.ஜாயா



துவான் புர்ஹானுதீன் ஜாயா 01.01.1890ஆம் ஆண்டு பிறந்தவர். இவர், இலங்கையின் கல்விமானும் அரசியல்வாதியுமாவார். 1913ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்று, கண்டி தர்மராசக் கல்லூரியில் சில காலம் பணியாற்றினார். பின்னர் பிரஞ்சு ஒ.்.ப் வேல்சு கல்லூரியிலும் பின்னர் 1921ஆம் ஆண்டு கொழும்பு சாஹிராக் கல்லூரியில் அதிபராகவும் பதவி வகித்தார். 1924ஆம் ஆண்டு இலங்கையின் சட்டவாக்கப் பேரவைக்கு அதிகாரபூர்வமற்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்,தொழில் மற்றும் சமூக சேவைக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1936ஆம் ஆண்டு இலங்கை அரசாங்க சபைத் தேர்தலில் நியமன அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1947ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் பாக்கிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராகக் பணியாற்றினார். 1960ஆம் ஆண்டு மக்காவுக்கு புனித யாத்திரை சென்றிருந்தபோது அங்கு மரணத்தைத் தழுவிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 12.0 : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.2 : சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : உவமைத் தொடர்கள்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- உவமைத் தொடர்களை இனங்கண்டு கூறுவார்.
- உவமைத் தொடர்கள் தரும் பொருட்சிறப்பைக் கண்டறிந்து கூறுவார்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் உவமைச் சொற்றொடர்களை இனங்கண்டு எழுதுவார்.
- உவமைச் சொற்றொடர்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- உவமைத்தொடர்கள் இடம்பெறும் பாடல் அல்லது பந்தியைக் காட்சிப்படுத்துதல்.
- காட்சிப்படுத்தியதை மாணவர்களுடன் கலந்துரையாடி உவமைத் தொடர்களது சிறப்புப் பொருள் பற்றி விளக்குதல்.
- உவமைச் சொற்றொடர்களைக் கையாண்டு வேறு உதாரணங்களை எழுதச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

| **உவமைச் சொற்றொடர்கள்** | - **அவற்றின் பொருள்** |
|---|---|
| இணை பிரிந்த அன்றில் போல | - பிரிவுத் துயர் |
| அத்தி பூத்தாற் போல | - எப்போதாவது நடைபெறும் செயல் |
| ஒளியைக் கண்ட இருளைப் போல | - நீங்குதல் |
| எலியும் பூனையும் போல | - பகை |
| உள்ளங்கை நெல்லிக்கனி போல | - மிகத் தெளிவாக விளங்குதல் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- உவமைச் சொற்கள் இடம்பெறும் பாடல், பந்திகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- உவமைச் சொற்கள் இடம்பெறும் பாடலை வாசிப்பார்.
- உவமைச் சொற்றொடர்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுவார்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் உவமைச் சொற்றொடர்களைத் தொகுத்து எழுதுவார்.

## பின்னிணைப்பு

### உவமைத்தொடர்கள்

1. அடியற்ற மரம் போல
2. ஆலைவாய்க் கரும்பு போல
3. இடியோசைகேட்ட நாகம் போல
4. இலவு காத்த கிளி போல
5. உடுக்கை இழந்தவன் கை போல
6. உடும்புப் பிடி போல
7. உமி குற்றிக் கை சலித்தாற் போல
8. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல
9. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தாற் போல
10. பசுமரத்து ஆணிபோல
11. பகலவனைக் கண்ட பனி போல
12. பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெற்றாற் போல
13. மடை திறந்த வெள்ளம்போல
14. மலரும் மணமும் போல
15. மழைமுகங் காணாப் பயிர் போல
16. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டாற் போல
17. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல
18. வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்தாற் போல
19. வேலியே பயிரை மேய்வது போல
20. வெந்த புண்ணிலே வேல் பாய்ந்தது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 3.0** : பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : பாவனை செய்து பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : சிறுகதை - பாலித்திட வேண்டுமம்மா

**பாடவேளை** : 03

### கற்றற் பேறுகள்

- விடயத்தினைச் சுருக்கி கதையாகக் கூறுவார்.
- கதையின் பிரதான கருத்தைக் கூறுவார்.
- பாத்திரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- ஆலோசனை செய்யவேண்டியதன் முக்கியத்துவத்தினை அறிந்து கூறுவார்.
- விளையாடும்போது கவனமாக விளையாடவேண்டும் என்பதனைக் கூறுவார்.
- கதையில் இடம்பெறும் விழுமிய உணர்வுகள் பற்றிக் கூறுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- கதையினைக் கூறி, மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- கதையைச் சுருக்கமாக முன்வைத்தல்.
- மாணவர்களை குழுநிலையில் பாடத்தினை வாசிக்கச் செய்தல்.
- கதையினைக் கூற வழிப்படுத்தல்.
- தனித்தனியாக விடயத்தின் கருப்பொருளைப் பேசச் செய்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- சிறுகதை ஆசிரியரைப் பற்றிய அறிமுகம்.
- பாட விடயம் பற்றிய அறிமுகம்.
- உளவளத்துணையின் முக்கியத்துவம் பற்றிய விளக்கம்.
- உடல்சோர்வு, உளச்சோர்வு ஏற்படுவதற்கான காரணமும் விளக்கமும்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சுருக்கக் குறிப்பமைந்த அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- கதையின் கருவினை விளக்கிக் கூறுவார்.
- கதையில் வரும் பாத்திரப் பண்புகளைச் சுருக்கமாகக் கூறுவார்.
- எந்த விடயத்தினையும் ஆராயாமல் முடிவெடுக்கக் கூடாது என்பதனைக் கூறுவார்.
- உளவளத்துணையின் முக்கியத்துவம் பற்றிக் கூறுவார்.
- பாலித்திட வேண்டுமம்மா கதைக் கருவினை உள்ளீடாகக் கொண்டு ஆக்கங்களைப் படைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 12.0 : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்மான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.1 : சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : மரபுச் சொற்கள்

**பாடவேளை** : 06

## கற்றற் பேறுகள்

- மரபுச்சொற்கள் என்றால் என்ன எனக் கூறுவார்.
- மரபுச்சொற்களுக்கான உதாரணங்களைக் கூறுவார்.
- மரபுச்சொற்களின் வகைகளைக் கூறுவார்.
- மரபுச்சொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- பொருத்தமான மரபுச்சொற்களை அறிந்து பிரயோகிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- ஏற்கனவே அறிந்து கொண்ட மரபுச்சொற்களைக் கூறிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- மாணவர்களிடம் மரபுச்சொற்களைக் கூற சொல்லி, அவை பற்றிக் கலந்துரையாடுதல்.
- மரபுச்சொற்கள் என்றால் என்ன என்பதை விளக்குதல்.
- மரபுச்சொற்களின் பயன்பாடு பற்றி விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துத் மரபுச்சொற்களை வகை ரீதியாக தேடித் தொகுக்கச் செய்தல்.
- தொகுக்கப்பட்ட மரபுச்சொற்கள் தொடர்பாகக் கலந்துரையாட வழிப்படுத்துதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு ஆன்றோர் தொன்று தொட்டு வழங்கி வந்தனரோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு ஆகும்.
- மரபுச் சொற்கள் - இளமைப் பெயர்கள், குரல்வகை குறிக்கும் சொற்கள் போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாரணம் - இளமைப் பெயர்கள்

**விலங்குகளின் இளமைப் பெயர்கள்**

அணில் - பிள்ளை

ஆடு - குட்டி

கழுதை - குட்டி

சிங்கம் - குருளை

புலி - போத்து

எலி - குஞ்சு

எருமை - கன்று

பசு - கன்று

கீரி - பிள்ளை.

**காய்களின் இளமைப் பெயர்கள்**

அவரை - பிஞ்சு

மா - வடு

கத்தரி - பிஞ்சு

வெள்ளரி - பிஞ்சு

தென்னை - குரும்பை

வாழை - கச்சல்

பலா - மூசு

கொய்யா - பிஞ்சு

முருங்கை - பிஞ்சு

**விலங்கு, பறவைகள் தங்குமிடம்**

குதிரை - கொட்டில்

மாடு - தொழுவம்

வாத்து - பண்ணை

யானை - கூடம்

கோழி - பண்ணை

**பிஞ்சுப் பெயர்கள்**

தென்னை, பனை - குரும்பை

மா - வடு

பலா - மூசு

வாழை - கச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விலங்கு, பறவைகளின் ஒலி**

ஆந்தை - அலறும்

மயில் - அகவும்

பல்லி - சொல்லும்

பாம்பு - சீறும்

அணில் - கீச்சிடும்

கழுதை - கத்தும்

குதிரை - கனைக்கும்

சிங்கம் - கர்ச்சிக்கும்

யானை - பிளிறும்

காகம் - கரையும்

நரி - ஊளையிடும்.

**வித்துப் பெயர்கள்**

மிளகாய், கத்தரி - விதை

நெல், சோளன் - மணி

மா, பாலா - கொட்டை

ஆமணக்கு, வேம்பு - முத்து

**இலைப் பெயர்கள்**

தென்னை, பனை - ஓலை

நெல், புல் - தாள்

வாழை, மா - இலை

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- மரபுச் சொற்கள் அடங்கிய சொல்லட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- மரபுச்சொற்கள் என்றால் என்ன எனக் கூறுவார்.
- மரபுச்சொற்களை வகைக்கேற்ப அட்டவணைப்படுத்திக் காட்டுவார்.
- மரபுச்சொற்களை ஆக்கங்களில் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 8.0** : அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து இலக்கண வழுவின்றி, உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தியாக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம் :** கட்டுரை - ஓங்குக உயிர் இரக்கம்

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்**

- பாடப்பரப்பில் இடம்பெறும் பந்தி ஒன்றை திசைமுகம், வரிவடிவத்திற்கு ஏற்ப உறுப்பமைய எழுதுவார்.
- எழுத்துக்களுக்கிடையேயும், சொற்களுக்கிடையேயும் ஏற்ற இடைவெளிவிட்டு எழுதுவார்.
- நேர்த்தியாகவும் கவர்ச்சிகரமாகவும் ஏற்ற வேகத்தோடு எழுதுவார்.
- உயிரின் இன்றியமையாமை பற்றி அறிந்து எழுதுவார்.
- இலக்கண வழுவின்றி அவதானமாக, தாம் எடுத்த மொழிவடிவத்திற்கு ஏற்ப தெளிவாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- உறுப்பமைய எழுதுதல் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி, பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- ஒவ்வொரு எழுத்துக்குமுரிய திசைமுகம், வரிவடிவம் பற்றிய விளக்கத்தை வழங்கி மாணவரை வழிநடத்துதல்.
- எழுத்துக்களை அமைப்பாக எழுதுவதுடன், சொற்களுக்கிடையில் இடைவெளிவிட்டு எழுதும் முறை பற்றியும் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துதல்.
- பந்தியை எழுதும்போது குறியீடுகள் இட்டு எழுத வேண்டிய அவசியத்தைத் தெளிவுறுத்தி எழுதச் செய்தல்.
- பந்தியை எழுதும் போது அதன் அமைப்புக்கு ஏற்ப எழுதவேண்டிய முறை பற்றிக் கலந்துரையாடி வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- கட்டுரை ஆசிரியர் பற்றிய குறிப்பு.
- கட்டுரையில் கூறப்பட்டுள்ள விடயங்கள்.
- இயற்கை பற்றிய விளக்கம்.
- எழுத்துப் பொறிமுறையிலான வரிவடிவம்
- திசைமுகம்
- எழுத்துக்களை எழுதும் முறை பற்றிய விளக்கம்
- நிறுத்தக்குறிப் பிரயோகம்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சொல்லட்டைகள் - திசைமுகம் சார்ந்தவை
  வரிவடிவம் சார்ந்தவை
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- எழுத்துக்களை, எழுத்துப் பொறி முறைகளுக்கு அமைய எழுதுவார்.
- உறுப்பமைய எழுத வேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்து, அதற்கேற்ப துலங்குவார்.
- பந்தி அமைப்புக்கேற்ப குறியீடுகளைப் பிரயோகிப்பார்.
- உயிரின் இன்றியமையாமையினை எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 12.0** : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 12.2** : சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : மரபுத்தொடர்கள்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- மரபுத் தொடர் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தருவார்.
- மரபுத்தொடர் குறிப்பிடும் சிறப்பான குறிப்புப் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடநூலிலிருந்து மரபுத்தொடரை இனங்கண்டு விளக்கிக் கூறுவார்.
- மரபுத்தொடரின் குறிப்புப் பொருளை மனங்கொண்டு வாக்கியம் எழுதுவார்.
- வாக்கியங்களைக் கவர்ச்சியாகவும் ஆற்றலுடனும் அமைக்க மரபுத்தொடர்கள் உதவுவதை அறிந்து, அதனைத் தமது ஆக்கங்களில் பொருத்தமாகக் கையாள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மரபுத்தொடர்கள் இடம்பெறும் பாடல் அல்லது பந்தியைக் காட்சிப்படுத்துதல்.
- காட்சிப்படுத்தியதை மாணவர்களுடன் கலந்துரையாடி அவை குறிக்கும் குறிப்புப் பொருள் பற்றி விளக்குதல்.
- மரபுத்தொடர்களைக் கையாண்டு வேறு உதாரணங்களைக் கூறச் செய்தல்.
- தாம் கூற வந்த கருத்தைச் சுருக்கமாகவும் சுவையாகவும் கூறுவதற்கு மரபுத் தொடர் உதவுவதை அறிந்து தமது ஆக்கங்களில் கையாண்டு எழுதுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

பண்டைத் தமிழ்ச் சான்றோர்களும், முன்னோர்களும் வழிவழியாகப் பொருள் பொதிந்த சொற்றொடர்கள் பலவற்றைப் பேச்சிலும் எழுத்திலும் கடைப்பிடித்து வந்திருக்கின்றார்கள். அச்சொற்களை வழிவழியாக வழங்கிவந்த முறையை மரபுச் சொற்கள் (தொடர்கள்) என்பர்.

1. அகட விகடம் - தந்திரம்
2. அடாப்பிடி - கொடுஞ்செயல்
3. அடிபிழைத்தல் - நெறி தவறி நடத்தல்
4. ஆலாய்ப் பறத்தல் - எப்படியேனும் அடைந்துவிடத் துடித்தல்
5. ஆழம் பார்த்தல் - மனநிலை அறிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இலம்படுதல் - வறுமையடைதல்
7. இன்னார் இனியார் - பகைவரும் நண்பரும்
8. ஒரு கைபார்த்தல் - சண்டைக்குப் போதல்
9. ஒரு காலில் நிற்றல் - பிடிவாதம் காட்டுதல்
10. கம்பி நீட்டுதல் - ஓடிப்போதல்
11. கயிறு திரித்தல் - பொய் சொல்லிப் பரப்புதல்
12. காது குத்துதல் - ஏமாற்றுதல்
13. கண்கனலுதல் - கோபத்தால் கண் சிவத்தல்
14. காது குத்துதல் - வஞ்சித்தல்
15. குரங்குப்பிடி - பிடிவாதம்
16. கைகொடுத்தல் - உதவி செய்தல்
17. தலை சிறத்தல் - மேன்மையுறுதல்
18. தலையிடுதல் - குறுக்கிடல்
19. தாளம்போடல் - மறுக்காமல் ஏற்றுக்கொள்ளல்
20. நீறுபூத்த நெருப்பு - உணர்ச்சி குன்றாமை
21. பழுக்கப்போடு - காலந் தாழ்த்து
22. வாய்ப் பூட்டு - பேசக்கூடாது எனத் தடை விதித்தல்
23. வாலாட்டுதல் - மீறி நடத்தல்
24. வெட்ட வெளிச்சம் - எல்லோருக்கும் தெரிதல்
25. முகத்தில் கரிபூசுதல் - இழிவுபடுத்தல்
26. முழுக்குப்போடுதல் - கைவிடுதல்

- நாம் எழுதும் வாக்கியங்களைக் கவர்ச்சியுள்ளதாகவும் ஆற்றலுள்ளதாகவும் ஆக்க, மரபுச்சொற்றொடர் உதவுவதை உதாரணங்கள் மூலம் எழுதிக் காட்டுதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- மரபுத்தொடர்கள் இடம்பெறும் பாடல், பந்திகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- மரபுத்தொடர்களையும் அதன் பொருளையும் வாசிப்பார்.
- மரபுத்தொடர்கள் தரும் குறிப்புப் பொருளைக் கூறுவார்.
- மரபுத்தொடர்களை இனங்கண்டு வாசிப்பார்.
- தமது ஆக்கங்களில் மரபுத்தொடர்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் தவணை

| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | 7.0 | 7.1 | வினோதக் கனவு | 04 | 81 |
| 02 | 12.0 | 12.2 | இரட்டைக்கிளவி, இணைமொழி | 04 | 83 |
| 03 | 9.0 | 9.1 | எலிப்பாட்டு | 03 | 85 |
| 04 | 11.0 | 11.2 | அழைப்பிதழ் | 04 | 87 |
| 05 | 2.0 | 2.1 | நீரின்றி அமையாது உலகு | 04 | 89 |
| 06 | 13.0 | 13.2 | அடைமொழிகள் | 03 | 91 |
| 07 | 3.0 | 3.1 | குமணன் நாடகம் | 06 | 93 |
| 08 | 12.0 | 12.2 | கலைச் சொற்கள் | 03 | 96 |
| 09 | 2.0 | 2.1 | தேனீயும் குளவியும் | 03 | 98 |
| 10 | 4.0 | 4.2 | சிறிய மேடைப்பேச்சு | 03 | 100 |
| 11 | 5.0 | 5.1 | திருக்குறள் | 02 | 102 |
| 12 | 13.0 | 13.3 | புணர்ச்சி | 05 | 104 |
| 13 | 7.0 | 7.1 | சூழலில் பிறக்கும் பாடல்கள் | 03 | 106 |
| | | | **மொத்தப் பாடவேளை** | **47** | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்** : வினோதக் கனவு

**பாடவேளை** : 04

## கற்றற் பேறுகள்

- வினோதக் கனவு எனும் கட்டுரையை வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.
- கிரகித்த விடயங்களைக் குழுவாக இருந்து தமக்குள் உரையாடிக் கூறுவார்.
- கட்டுரையில் இடம்பெறும் உரையாடல் அமைப்பை விளக்குவார்.
- கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றிக் கலந்துரையாடி அதனை மேற்கோள் காட்டி எழுதுவார்.
- இக்கட்டுரையில் இடம்பெறும் உரையாடல் ஊடாக வெளிப்படும் விழுமியக் கருத்துக்களை விளக்கிக் கூறுவார்.
- உரையாடல் பாத்திரங்களைப் பாத்திரமேற்று வாசித்துக் காட்டுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரை எழுந்த சந்தர்ப்பத்தைக் கலந்துரையாடி பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
  உ - ம் கனவு பற்றி வினவிக் கலந்துரையாடல்.
- மாணவரை மௌனமாக வாசிக்க வழிப்படுத்தல்.
- மாணவர் வாசித்த விடயம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவரைப் பாத்திரமேற்று உரையாட வழிப்படுத்துதல்.
- இவ்வுரையாடல் வாயிலாக வெளிப்படும் விழுமியங்களைத் தொகுத்துப் பேச வழிகாட்டுதல்.
- உரையாடலில் இடம்பெற்றுள்ள மொழிநடை பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- ஒவ்வொரு உணவு வகைக்கும் பிறப்பிடங்கள் உள்ளன.
- சோளத்தை உணவில் சேர்த்துக்கொள்வதனால் பல சத்துக்களைப் பெறுகிறோம்.
- மாணவப் பருவத்தினருக்குக் கீரை மிக அவசியமானது.
- பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் கோதுமை மூலம் செய்யப்பட்ட ரொட்டியை உணவாகக் கொண்டார்கள்.

அண்டுதல் - நெருங்குதல்
அவை - சபை
சீக்கிரம் - விரைவு
ஜாடி - சாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்.

**கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- கட்டுரையில் இடம்பெறும் விழுமியக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவார்.
- பாடப்பரப்பைக் கிரகிக்கும் முகமாக மௌனமாக வாசிப்பார்.
- பாடப்பரப்பை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 12.0 : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.2 : சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : இரட்டைக் கிளவி, இணைமொழி

**பாடவேளை** : 04

## கற்றற் பேறுகள்

- இரட்டைக் கிளவி, இணைமொழி என்பவற்றை இனங்கண்டு கூறுவார்.
- இரட்டைக் கிளவி, இணைமொழி என்பவை வாக்கிய ஆக்கத்திற்கு அழகூட்டுவதை அறிந்து தமது ஆக்கத்திற் பயன்படுத்துவார்.
- இரட்டைக் கிளவி, இணைமொழிகள் கொடுக்கும் பொருளை அறிந்து கையாள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- இரட்டைக் கிளவி, இணைமொழி இடம்பெறும் பாடல் அல்லது பந்தியைக் காட்சிப்படுத்துதல்.
- இத் தொடர்களை இனங்காண்பதுடன் வாக்கியங்களில் அமைத்துக் கூறச் செய்தல்.
- இத்தொடர்கள் அற்ற வாக்கியத்தையும் அவற்றைக் கையாண்டுள்ள வாக்கியத்தையும் ஒப்பிட்டுக் காட்டி, அவற்றின் பொருள் வேறுபாட்டின் அழகினைக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

**இரட்டைக்கிளவி**

இசை பற்றியும் பண்பு பற்றியும் குறிப்புப் பற்றியும் அடிச்சொல் இரட்டித்து முழு உருவத்தோடும் வரும். ஆனால், பிரித்தால் பொருளைத் தராது அதுவே இரட்டைக் கிளவியாகும்.

- **கலகல** எனச் சிரித்தான்.
- **குசுகுசு** என்று அதைச் சொன்னார்.
- **சிலுசிலு** என்று காற்று வீசியது.
- **மடமட** என மரம் முறிந்தது.
- **கடகட** என வண்டி ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைமொழித்தொடர்**

எதுகை, மோனை என்னும் ஓசைநயம் பற்றியும் ஒத்தகருத்து, எதிர்க்கருத்துப் பற்றியும் இருசொற்கள் அமைகின்றன. அதாவது, பொருள் நயம் உடையனவாக இணைந்து அமையப்பெறுவது இணைமொழித் தொடராகும்.

1. அல்லும் பகலும்
2. அருமைபெருமை
3. ஆற அமர
4. இழுபறி
5. இன்னார் இனியார்
6. ஈடும் எடுப்பும்
7. ஈவிரக்கம்
8. உண்டியும் உறையுளும்
9. உருண்டு திரண்டு
10. ஏறத்தாழ
11. ஏழை எளியவர்
12. ஒப்புயர்வற்ற
13. ஒழிவு மறைவில்லாமல்
14. கணக்குவழக்கு
15. கண்ணுங் கருத்துமாய்
16. கண்ணீரும் கம்பலையுமாக
17. கையும் களவும்
18. சரமாரியாய்
19. சின்னா பின்னம்
20. சீரும் சிறப்புமாக
21. தட்டிக் கழித்தல்
22. திட்டவட்டம்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- இரட்டைக்கிளவி, இணைமொழிகள் இடம்பெறும் வாக்கியங்களும் அவற்றைக் கையாளாத வாக்கியங்களும் எழுதப்பட்ட சொல்லட்டைகள்.
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்.

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடநூலில் இடம்பெறும் இரட்டைக் கிளவி, இணைமொழிகளை வேறுபடுத்தி இனங்காண்பார்.
- அத்தகைய தொடர்களைக் கையாண்டு வாக்கியம் எழுதுவார்.
- இத்தொடர்கள் இடம்பெறும் வண்ணம் பேச்சொன்றை ஆக்கி, பேசிக்காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 9.0** : வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : பாடல் - எலிப்பாட்டு

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- வேடிக்கை உணர்ச்சியை ஊட்டும் பாடல், வாழ்வியற் சிந்தனையையும் ஊட்டுகின்றது என்பதைக் கூறுவார்.
- பாடலில் இடம்பெறும் இரசனை பற்றி ஆசிரியர் கூற, மாணவர் அதன்வழி, பாடலை இரசித்துப் பாடுவார்.
- எலியின் செயற்பாட்டை ஆசிரியர் கூற, அதனைக் கேட்டு மாணவர் தமது அனுபவத்துடன் ஒப்பிட்டு தமக்குள் கலந்துரையாடுவார்.
- இப்பாடலில் பேச்சுமொழி கையாளப்பட்டுள்ளதை உதாரணத்துடன் விளக்குவார்.
- எலியின் செயல்களை அடிப்படையாகக் கொண்டு நகைச்சுவைக் கட்டுரை ஒன்று எழுதுவார்.
- நாட்டுப்புற மக்களது நகைச்சுவை உணர்வை இப்பாடல் மூலம் எடுத்து விளக்குவார்.
- இது போன்ற வேறு பாடற் தொகுப்புக்களைத் தொகுத்து வழங்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- நாட்டுப்புற மக்கள் சிறந்த நகைச்சுவை உணர்வுடன் கூடிய பாடல்களைப் பாடினர் என்பதைக் கூறி, மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடலை அறிமுகஞ் செய்தல்.
- எலி ஒன்று செய்யும் வேடிக்கைகள் சுவைபட இப்பாடலில் கூறப்படுவதை எடுத்துக் காட்டுதல்.
- பாடலில் இடம்பெறும் பேச்சுவழக்குச் சொற்களை எடுத்துக்காட்தல்.
- நகைச்சுவை உணர்வு பற்றி விளக்குதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- எலிப் பாட்டு வேடிக்கைப் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புற இலக்கியத்தில் இப் பாடல்கள் நகைச்சுவை உணர்வை ஊட்டுவனவாக விளங்குகின்றன.
- பாடலாசிரியர் பற்றிய விளக்கம்.
- பேச்சு மொழி

| | | |
|---|---|---|
| கோட்டிகள் | - | சேட்டைகள் |
| இளனி | - | இளநீர் |
| சிரிக்கிறாய் | - | சிரிக்கின்றாய் |
| சுத்தி | - | சுற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- பாடல் எழுதிய சொல் அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடலை வாசித்து, நயந்து கூறுவார்.
- நகைச்சுவை உணர்வூட்டும் பாடல் வரிகளை எடுத்து உதாரணம் காட்டுவார்.
- பேச்சுமொழிச் சொற்களை எழுத்துமொழிச் சொற்களில் எழுதுவார்.
- பாடல்களைக் கூறுவதுடன், தாம் நயந்த பகுதியை அதற்கான உதாரணத்துடன் விளக்குவார்.
- பாடப்பரப்பையும் தமது அனுபவத்தையும் சேர்த்து கட்டுரையொன்றினை நகைச்சுவைப் பாணியில் எழுதுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 11.0** : பாடைப்புக்களை வாசித்த அனுபவங்கள் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.2** : நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : அழைப்பிதழ்

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்**

- அழைப்பிதழுக்குரிய பொருத்தமான அமைப்பிலே எழுதுவார்.
- எழுதப்போகும் விடயத்திற்கு ஏற்ப, தரவுகள் சேர்த்து அழைப்பிதழை எழுதுவார்.
- அழைப்பிதழ் ஒன்றில் இடம்பெற வேண்டிய விடயங்களைப் பொருத்தமாக எழுதுவார்.
- சுருக்கமாக, ஆனால் நடைமுறைத் தேவை கருதி விளக்கி எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- அன்றாட வாழ்வில் வீட்டில் மட்டுமன்றி நிறுவனங்களிலும் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடி பாடத்தை ஆரம்பித்தல்.
- பல்வேறு அழைப்பிதழ்களைச் சேகரித்து வருமாறு முன்கூட்டியே ஏற்பாடு மேற்கொள்ளல்.
- அவ்விதம் மாணவர்கள் கொண்டு வந்த அழைப்பிதழ்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துதல்.
- பல்வேறு அழைப்பிதழ்களிலும் அமைய வேண்டியவற்றைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துதல்.
- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினருக்கும் ஒவ்வொரு தலைப்பினைக் கொடுத்து அழைப்பிதழை எழுதுவித்தல்.
- மாணவர்கள் எழுதிய பல்வேறு அழைப்பிதழ்களைக் காட்சிப்படுத்தி அதனது குறைநிறைகளைக் கலந்துரையாடித் தெளிவூட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- அன்றாட வாழ்வில், வீட்டில் அல்லது, நிறுவனம் ஒன்றில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்காக உறவினர், நண்பர், நலன்விரும்பிகள் ஆகியோரை அழைக்கும் பொருட்டு எழுதப்படுவது அழைப்பிதழ் ஆகும்.
- அழைப்பிதழ் எழுதும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்.

  01. அழைப்பிதழின் தலைப்பு - நோக்கம் சார்ந்ததாக அமையும்.
  02. விளிப்பு அமைய வேண்டும்,
  03. அழைக்கப்படுபவரின் பெயர் - அதற்கென இடம் ஒதுக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இடம்,காலம், நேரம், நிகழ்ச்சி பற்றிய தெளிவான விளக்கம் இடம்பெறல்.
- தெளிவாக மட்டுமன்றி இனிமையாகவும் நயமாகவும் எழுதுதல்.
- மிகமிகச் சுருக்கமாக அமைதல்.
- இறுதியில் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன குறிப்பிடல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சேர்க்கப்பட்ட அழைப்பிதழ்கள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பல்வேறு வகையான அழைப்பிதழ்களை எழுதுவார்.
- அழைப்பிதழ்களில் அமைய வேண்டிய (பகுதிகளை) உறுப்புகளை எடுத்துக் கூறுவார்.
- அழைப்பிதழ் அனுப்பப்பட வேண்டிய நிகழ்ச்சிகளைப் பட்டியற்படுத்திக் கூறுவார்.

### அழைப்பிதழ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 2.0 : சந்தர்ப்பத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.1 : தமது உணர்வுகளும், எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை - நீரின்றி அமையாது உலகு

**பாடவேளை** : 04

## கற்றற் பேறுகள்

- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்துக் கிரகித்துக் கூறுவார்.
- கட்டுரைப் பகுதியின் முக்கியமான நோக்கத்தைத் தெளிவுபடுத்திக் கூறுவார்.
- சோடி சேர்ந்து அல்லது குழுவாக இயங்கி கட்டுரைப் பகுதியின் கரு, துணைக்கருக்கள் பற்றிக் கலந்துரையாடியவற்றைப் பட்டியற்படுத்துவார்.
- வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் காணப்படும் வேறு குறள்களை ஆதாரம் காட்டி உரையாடுவார்.
- விழுமியக் கருத்துக்களை மனங்கொண்டு, அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- திருக்குறள் பற்றியும் அதன் ஆசிரியர் பற்றியும் திருக்குறளில் இடம்பெறும் வான்சிறப்பு என்ற அதிகாரம் பற்றியும் மாணவரோடு கலந்துரையாடிப் பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- மக்கள் வாழ்வாங்கு வாழ நீரின் இன்றியமையாமை பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாடப்பரப்பை மௌனமாக வாசிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல்.
- முழுமையான உள்ளடக்க விடயங்கள் வெளிப்படும் விதமாக வினாக்களைக் கேட்டு, கலந்துரையாடி அவர்களது கருத்துக்களைப் பட்டியற்படுத்தல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அவர்கள் கிரகித்தவற்றை எழுதச் செய்து விபரிக்க வழிகாட்டுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- கட்டுரையாசிரியர் - வா.செ.குழந்தைசாமி அவர்கள் பற்றிய விளக்கம்.
- உயிர் ஊற்றுக்கள்
- உயிர் நதிகள்
- மழையின்றி உலகில் நீர் இல்லை என்ற கருத்துத் தெளிவுபடுத்தப்பட்டாலும், அது தொடர்பான சிந்தனைகளும் ஆய்வுகளும் பற்றிய விளக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

**"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வானின்றி அமையாது ஒழுக்கு"**

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலகவாழ்க்கை நடைபெறாது. மழையின்றி உலகுக்கு நீர் கிடைக்காது.

மழையின்றி எந்நிலையினருக்கும் ஒழுக்கம் உண்டாகாது. வாய்க்கால்களை வெட்டியும், மலைகளைக் குடைந்தும், அணைகள் போட்டும் இன்னும் பலவழிகளில் முயன்றாலும் மழையின்றி நீர்கிடைக்காது. மழையில்லாமல் உடல் நிலையாது. வாழ்க்கை சிறப்புறாது, தவ ஒழுக்கம் நிரம்பாது. உலகம் வாழ நீர் வேண்டும். நீர் பெருக மழை வேண்டும். எனவே யாராயிருந்தாலும் மழையின்றி ஒழுக்க வாழ்வு கெடும். மழையின்றி பசும்புல் தழைக்காது. உழவர் ஏர் உழார் கடல் வளம் குன்றும், வறுமையும் பசியும் மிகும், நிலவளம் மறையும், கடல் வளம் தேயும், இதனால் மக்களது பொருளாதாரநிலை கெடும், மக்களின் ஆன்மீக உணர்வு குன்றும், அறப்பண்பு விலகிப்போகும் இதனால் மனிதப்பண்பு மறக்கப்படும், உயிர்கள் மடியும் மொத்தத்தில் ஒழுக்கப் பண்பு கெடும். எனவே தான் உலகம் நீரின்றி வாழாது.

### குறிப்பு

அடுத்த உலகப்போரானது தண்ணீருக்காகவே நடக்கும் என்கிறார்கள் வரலாற்றை முன்மொழிபவர்கள். பணத்தைத் தண்ணீர்போல் செலவு செய்கின்றான் என்கிறார்கள். ஆனால், இன்று தண்ணீரைப் பணம்போல் செலவு செய்யவேண்டும் என்று சொல்லுமிடத்துக்கு நகர்ந்து வருகின்றோம். தண்ணீர் திரவத்தங்கம் என்று அழைக்கப்படுகின்றது. உலகத்தில் உள்ள நீரில் 3 வீதம் மட்டுமே நல்ல நீர், இதை மட்டுமே நாம் குடிக்கப் பயன்படுத்தமுடியும். இதிலும் 2 சதவீத நீர் பனிக்கட்டியாக உள்ளது. மழை நீர் மூலமே நல்ல தண்ணீர் கிடைக்கின்றது. இலங்கையில் ஒருநபருக்கு ஒரு நாளைக்கு உபயோகமாகும் நீரின் அளவு 13 கன மீற்றர்களாகும். நீரைக் கவனமாகப் பயன்படுத்துவது அவசியமாகும். தேசிய மட்டத்தில் உலகம் முழுவதும் தண்ணீரின் சேமிப்பு அளவு நாளாந்தம் குறைந்து செல்வதினால் 2018 ஆம் ஆண்டு குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பிருப்பதாக ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. நீரைச் சேமித்து மாசுபடாமல் பாதுகாப்பது இன்றியமையாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 13.0 : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.2 : சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : அடைமொழிகள்

**பாடவேளை** : 03

### கற்றற் பேறுகள்

- அடைமொழி பற்றிக் கூறுவார்.
- பெயரடை, வினையடை என்பவற்றுக்கு விளக்கம் அளிப்பார்.
- வாக்கியங்களிலுள்ள அடைமொழிகளை இனங்கண்டு அவற்றைப் பெயரடை, வினையடை எனப்பாகு படுத்திக் கூறுவார்.
- பொருத்தமான அடைமொழிகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- அடைமொழிக்கான வரைவிலக்கணத்தை எளிய முறையில் அமைத்துக் காட்சிப்படுத்துதல்.
- அடைமொழிகளை எழுதி அவற்றை பெயரடை, வினையடை எனப் பாகுபடுத்தும்படி மாணவரை வழிப்படுத்தல்.
- அடைமொழி இடப்படவேண்டிய இடத்தைக் கீறிட்டு வாக்கியம் எழுதி இடைவெளி நிரப்பும்படி பயிற்றுவித்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

**பெயரடை :**

பெயர்ச் சொல்லின் பண்பை உணர்த்தி நிற்பது பெயரடை எனப்படும்.

உ - ம் "நல்ல மரம்" - இதில் நல்ல என்பது பெயரடை

இதே போல்,

- மிக நல்ல மரம் - (மிக நல்ல)
- மிக மிக நல்ல மரம் - (மிக மிக நல்ல)
- மிக உயர்ந்த மரம் - (மிக உயர்ந்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினையடை :**

வினைச் சொல்லொன்றிலே அடையாக அமைந்து வினை நிகழும் முறை, வினை நிகழும் காலம், வினை நிகழும் இடம் போன்றவற்றை உணர்த்தப் பயன்படும் சொற்கள் வினையடைகள் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம் | உள்ளே போனான் | - | உள்ளே என்பது அடைமொழி |
| | நாளை வருவான் | - | நாளை என்பது அடைமொழி |
| | இனிமையாகப் பாடினான் | - | இனிமையாக என்பது அடைமொழி |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- அடைமொழிகள் எழுதிய சொல் அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- அடைமொழிக்கு சுருக்கமாக விளக்கம் கூறுவார்.
- பெயரடை, வினையடை என்பவற்றுக்கு உதாரணம் தருவார்.
- அடைமொழிகளைப் பொருத்தமாக இட்டு வாக்கியங்கள் அமைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 3.0 : பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.1 : பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப நடித்துப் பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : நாடகம் - குமணன் நாடகம்

**பாடவேளை** : 06

**கற்றற் பேறுகள்**

- நாடகப் பாத்திரங்களின் உள்ளத்து உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில் பாவனைசெய்து உச்சரிப்புத் தெளிவுடன் பேசுவார்.
- உணர்ச்சி வேறுபாடுகளுக்கு ஏற்ப தொனிவேறுபாட்டை வெளிப்படுத்துவார்.
- குழு ஒருமைப்பாட்டுணர்வை வெளிப்படுத்தி இயங்குவார்.
- நாடகத்தில் இடம்பெறும் படிப்பினைகளைத் தொகுத்துப் பட்டியற்படுத்துவார்.
- நாடகப் பாத்திரங்களின் குணவியல்புகளைக் குழுக்களாகக் கலந்துரையாடி வெளிப்படுத்துவார்.
- நாடகப் பரப்பில் இடம்பெறும் விழுமிய உணர்வுகள் பற்றிக் கூறுவார்.
- நாடக ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கலந்துரையாடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- நாடகக் கதாபாத்திரங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- நாடகம் என்றால் என்ன? என வினவிக் கலந்துரையாடுதல்.
- கதையைச் சுருக்கமாக முன்வைத்தல்.
- மாணவர்களை குழுநிலையில் வாசிக்கச் செய்தல்.
- பாத்திரமேற்று உரிய உணர்ச்சி நிலைகளைப் புலப்படுத்தும் வண்ணம் வாசிக்கவும் நடிக்கவும் வழிப்படுத்துதல்.
- ஒரு குழுவினரை நடிக்கச் செய்து மற்றக் குழுவினருடன் அதன் அபிப்பிராயம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

### அருஞ்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| தண்ணளி | இரக்க குணம் | அழுக்காறு | பொறாமை |
| அவா | ஆசை, விருப்பம் | கானகம் | காடு |
| வெகுளி | கோபம் | தேயம் | தேசம் |
| உலோபம் | கஞ்சத்தனம் | மந்திகள் | பெண் குரங்குகள் |
| இடுக்கண் | துன்பம் | அரி | சிங்கம் |
| கைம்மாறு | பிரதியுபகாரம் | ஒருப்படும் | விரும்பும் |
| மிடி | துன்பம் | அங்கம் | உடம்பு |
| இழைத்த | செய்த | அரியணை | சிங்காசனம் |

### எதிர்ப்பொருட் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அவமதித்தல் | மதித்தல் | தைரியம் | அதைரியம் |
| வள்ளல் | உலோபி | ஒழுங்கு | ஒழுங்கீனம் |
| இரவலர் | புரவலர் | பிறப்பு | இறப்பு |
| இம்மை | மறுமை | இல்லறம் | துறவறம் |
| வெற்றி | தோல்வி | வாட்டம் | மலர்ச்சி |
| புண்ணியம் | பாவம் | களங்கம் | நிஷ்களங்கம் |

### இத்தொடர்களை வைத்து ஆக்கங்களை ஆக்குக

- பனங்கிழங்கைப் பிளப்பதற்கு அரிவாள் வேண்டுவதில்லை.
- வீடு கொளுத்துகிற இராசாவுக்கு நெருப்புக் கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரிகள்.
- அரி இருந்த சிங்காசனத்தில் இந்தக் குள்ளநரி வந்து குந்திக்கொண்டது.
- உமது வறுமை வெயிலவனைக் கண்ட பனி போல நீங்கிவிடும்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சுருக்கக் குறிப்பமைந்த அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்
- மாணவரை நடிக்கச் செய்து ஒலிப்பதிவு செய்த ஒலிப்பேழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நாடகத்தைப் பாத்திரமேற்று நடிப்பார்.
- நாடகத்தில் இடம்பெறும் பேச்சு வழக்குச் சொற்களைப் பட்டியற்படுத்துவார்.
- நாடகப் பாத்திரங்களின் குணவியல்புகள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- பாடப்பரப்பில் இடம்பெறும் மொழிப்பிரயோகம் பற்றிக் கலந்துரையாடி அவர்களது கருத்துக்களை முன்வைப்பார்.
- பாடப்பரப்புத் தொடர்பாக வினவப்படும் வினாக்களுக்கு விடை எழுதிக் காட்டுவார்.

## பின்னிணைப்பு

### குமணன்

குமணன் மேம்பட்ட குடியில் பிறந்த சங்ககால மன்னன். இவன் முதிரை மலைப் பகுதியில் வாழ்ந்தவன். மார்பில் சந்தனம் பூசிக்கொண்டு மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வந்தான். குமணன் வழங்கும் கொடையானது, கொடையைப் பெற்றவர் பிறருக்கெல்லாம் வழங்கி மகிழும் அளவுக்கு மிகுதியாக இருந்தது. அதாவது, அவன் பாடுவோர்க்கெல்லாம் யானையைப் பரிசாக வழங்கி மகிழ்ந்தவன். குமணன் அரசனாக விளங்கியபோது பெருஞ்சித்திரனார் தன் வறுமைநிலையைக்கூறி குமணனிடம் தாம் யானைமீது செல்லும் வகையில் பரிசில் தருமாறு வேண்டினார். அவனும் அவ்வாறே கொடுத்தான். தன் இல்லறம் திரும்பும் வழியில் இளவெளிமான் நாட்டுக்கு வந்து தன்பெருமிதம் தோன்ற, தன் யானையை அவனது காவல் மரத்தில் கட்டிவிட்டு அவனிடம் சென்று குமண மன்னனின் பெருமிதத்தை வெளிப்படுத்தினார். குமணனை அவன் தம்பி இளங்குமணன் நாடுகடத்தியபோது, அவன் காட்டில் தலைமறைவாக வாழ்ந்து வந்தான். குமணன் தலையைக் கொண்டு வருவோர்க்கு தக்க பரிசில் வழங்கப்படுமென்று இளங்குமணன் அறிவித்திருந்தான். இவ்வாறான சூழ்நிலையில் குமணனிடம் பரிசில் பெறுவதற்காகக் காட்டிற்குச் சென்ற புலவர் அவனைப் பாடினார். புலவருக்குக் கொடுப்பதற்கு தன்னைத் தவிர வேறொன்றுமில்லை என்பதால் தன் வாளைப் புலவர்க்குக் கொடுத்தான். தன்தலையையே வெட்டியெடுத்துக்கொண்டு செல்வதற்காகத் தனக்கு இந்த வாள் தரப்பட்டிருக்கின்றது என்று அறிந்த புலவர். அந்த வாளே போதுமென்று வாளை மட்டும் எடுத்துக்கொண்டு புலவர் இளங்குமணனிடம் செல்கின்றார். புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில் இம் மன்னனைப் புலவர்கள் சிறப்பித்துப் பாடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 12.0 : சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 12.2 : சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கலைச்சொற்கள்

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்

- கலைச்சொற்கள் என்றால் என்ன? என்பதற்கு விளக்கம் தருவார்.
- நடைமுறையிலுள்ள கலைச்சொற்களைப் பட்டியற்படுத்துவார்.
- தமிழ் மொழியில் கலைச்சொற்களது முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்.
- தாம் இனங்கண்ட கலைச்சொற்களுக்கு நிகரான ஆங்கில மொழிச் சொற்களையும் குறிப்பிடுவார்.
- தமது ஆக்கங்களில் கலைச்சொற்களைப் பொருத்தமாகக் கையாள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- கலைச்சொற்களை சொல்லட்டை மூலம் காட்சிப்படுத்துதல்.
- காட்சிப்படுத்திய கலைச்சொல் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடிப் பாடப் பிரவேசத்தை மேற்கொள்ளுதல்.
- தற்கால அறிவியல் வளர்ச்சியில் கலைச்சொற்களது பயன்பாடு பெருகியுள்ளதை எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவுபடுத்துதல்.
- தமிழில் கலைச்சொற்களது பயன்பாட்டு முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றைப் பொருத்தமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

அறிவியல் கண்டுபிடிப்புகள் பெருகியுள்ளதால் அதற்கமைய தமிழ்ச் சொற்களும் அவ்வப்போது உருவாக்கப்பட வேண்டிய தேவை ஏற்படுகிறது. அத்தகைய தேவையைப் பூர்த்தி செய்ய ஆக்கப்பட்ட சொற்களே கலைச்சொற்கள். அதாவது அறிவுத்துறையில் பயன்படுத்தக்கூடிய சிறப்புச் சொற்களைக் குறிக்கும். இச்சொற்கள் சொற் சிக்கனத்தோடு பொருளின் ஆழத்தையும் துல்லியத் தன்மையையும் பெறுவதற்கான ஒரு வழிமுறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் ஒரு துறைசார்ந்த வல்லுநர்கள் அத்துறைசார் விடயங்களைச் சுருக்கமாகவும், துல்லியமாகவும் பரிமாறிக்கொள்வதற்கு கலைச்சொற்கள் பயனுள்ளவையாக அமைகின்றன. வேற்று மொழிகளில் அமைந்த அதிக சொற்பிரயோகங்களுக்கான தமிழ்ச் சொற்கள் அவ்வப்போது உருவாகும். அவை கலைச்சொற்கள் எனப்படும்.

உதாரணமாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| கணிப்பான் | - | கல்குலேட்டர் |
| மடி கணினி | - | லப்டொப் |
| கணினி | - | கம்பியூட்டர் |
| இணையம் | - | இன்டர்நெற் |
| மின்னஞ்சல் | - | ஈ-மெயில் |
| முகப்புத்தகம் | - | பேஸ்புக் |
| தந்தி | - | ரெலிகிராம் |
| கைத் தொலைபேசி | - | செல்போன் |
| தொலைபேசி | - | ரெலிபோண் |
| மின்விசிறி | - | பேன் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- சொல்லட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- ஆக்கங்களில் இடம்பெற்ற கலைச்சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- பல்வேறு வகையிலான கலைச்சொற்களைத் தொகுத்துக்காட்டுவார்.
- தமிழில் கலைச்சொற்களையும் அதற்கான ஆங்கில மொழிச் சொற்களையும் எழுதிக் காட்டுவார்.
- கலைச்சொற்களைத் தமது ஆக்கங்களில் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 2.0 : சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.1 : தமது உணர்வுகளும், எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : கவிதை - தேனீயும் குளவியும்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- உரையாடல் முறையில் அமைந்த இப்பாடலை வாசித்துக் காட்டுவார்.
- தேனீக்கும் குளவிக்கும் இருக்கும் குணப்பண்புகளை, அவற்றின் உரையாடல் மூலமாக நயந்து கூறுவார்.
- பாடல் உணர்த்தும் கருவினை விளக்கி எழுதுவார்.
- அக கருவை முன்வைக்க, பாடலாசிரியர் கையாண்ட உத்திகள் பற்றிக் கருத்துப் பரிமாறி எழுதுவார்.
- பாடலில் இடம்பெற்ற விழுமியக் கருத்துக்களைக் குறிப்பிட்டு, தாமும் அதற்கேற்ப ஒழுகவேண்டும் என்பதனை விளங்கிக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கவிஞர் மு. நல்லதம்பி அவர்கள் பற்றிக் கலந்துரையாடிப் பாடத்தை அறிமுகஞ் செய்தல்.
- பாடலைச் சந்திபிரித்து, கருத்துப் புலப்பட வாசித்துக்காட்டி, விளக்கிக் கலந்துரையாடுதல்.
- மக்கள் பிறருக்கு கேடு செய்யாமல் வாழவேண்டிய முறைபற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறிக்கொள்ளுதல்.
- பாடற்பொருளை வசனமாக எழுத வழிகாட்டுதல்.
- பாடற்கருத்தை உரையாடல் வடிவில் எழுத வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

- தேனீயும் குளவியும் உரையாடுவது போல் அமைந்துள்ளது.
- தேனீயும் குளவியும் உருவத்தில் ஒன்று போல் காணப்படினும் குளவியை மனிதர் கொல்ல நினைக்கின்றனர்.
- குளவி கொட்டுவதனாலேயே மனிதர் கொல்ல நினைக்கின்றனர்.
- இறைவன் ஒவ்வொருவரையும் வித்தியாசமாகவே படைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுதமிழ்ப் புலவர்

மு. நல்லதம்பி யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் இயற்றிய பாடல்கள் சில, ''இளைஞர் விருந்து'' எனும் பெயரில் நூலுருவம் பெற்று வெளிவந்தது. கவித்துவ ஆற்றல்மிக்க அவர் பாடல்களில், அவரது தமிழ்ப்பற்றை நாம் அவதானிக்கலாம். சுவை மிக்க இலக்கியப் பேச்சாளராகவும், கவிதை இயற்றுவதில் திறன் வாய்ந்தவராகவும் விளங்கினார். இலங்கையின் தேசிய கீதத்தை ஸ்ரீ லங்கா தாயே என்ற தலைப்பில் 1950ஆம் ஆண்டில் மொழிபெயர்த்தார். 1975ஆம் ஆண்டு பாடப்புத்தகத்தில் தேசிய கீதம் தமிழில் பதியப்பட்டது.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- பாடல் தரும் கருப்பொருளைக் கூறுவார்.
- பாடற்பரப்பைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- பாடற் பொருளை எழுதுவார்.
- பாடல் கூறும் கருத்தை உரையாடலாக எழுதுவார்.
- விழுமியக் கருத்தைக் குறிப்பிட்டு அதன்படி ஒழுகுவார்.

## பின்னிணைப்பு

### சிந்தனைக்கு!

ஒரு தேனீயிடம் ஒரு பறவை கேட்டது. "ஓய்வில்லாத கடின உழைப்பின் மூலம் நீ தேனைத் தயாரிக்கின்றாய். ஆனால், மனிதன் அந்தத் தேனை உன்னிடமிருந்து திருடி விடுகின்றான். அதற்காக நீ வருந்துவதில்லையா"? அதற்குத் தேனீ "இல்லவே இல்லை! மனிதன் என்னிடமிருந்து தேனை மட்டுந்தான் திருட முடியும். ஆனால், தேனை உண்டாக்கும் கலையை ஒரு போதும் அவன் என்னிடமிருந்து திருட முடியாது" என்றதாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** 4.0 : தமது எண்ணங்களைக் கேட்போர் உளங்கொள்ளத் தக்க வகையில் எடுத்துரைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 4.2 : எடுத்துக்கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக, பொருட் செறிவோடு பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : சிறிய மேடைப் பேச்சு

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்**

- மேடையொன்றில் பேசுவதற்கான பொருத்தமான தலைப்பினைத் தெரிவு செய்வார்.
- எடுத்த தலைப்புக்கேற்ற தகவல்களைத் தேடித் தொகுப்பார்.
- தலைப்புக்கு ஏற்ற வகையில் பேச்சைத் தொடங்குவார்.
- ஒவ்வொரு விடயத்தையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொகுத்துப் பேசுவார்.
- நிலை, தொனி, உச்சரிப்பு போன்ற பேச்சுப் பொறிமுறைகளை அனுசரித்துப் பேசுவார்.
- சபையை ஈர்க்கும் வகையில் பேச்சினை முன் வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கவர்ச்சிகரமானதாகவும் பிறரை ஈர்க்கும் வகையிலும் தலைப்பினைத் தேர்ந்துகொள்ளுதல்.
- தலைப்பொன்றினுக்கு அமைவாகப் பேச்சுக்குரிய தகவல்களைத் திரட்ட வழிப்படுத்தல்.
- திரட்டிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பேச்சினைத் தயார்ப்படுத்துதல்.
- கருத்துத் தெளிவுடன் தான் எடுத்த தலைப்பினை நிலை, தொனி, உச்சரிப்பு போன்ற பேச்சுப் பொறிமுறைகளை அனுசரித்துப் பேச வழிப்படுத்துதல்.
- சபையினர் ஆவலோடு கேட்கும் வகையில் சபை ஈர்ப்புடன் பேச்சினைத் தொடர வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்**

நிலை - பேச்சினை முன் வைக்கும் போது சபையை நோக்கிக் கம்பீரமாக நிமிர்ந்து நின்று பேசுதல்.

தொனி - பேச்சினை முன்வைக்கும் போது, பொருத்தமான குரல் ஓசையைக் கையாளுதல்.

சபை ஈர்ப்பு - சபையைக் கவரும் வகையில் பேசுதல்.

உச்சரிப்பு - ஒலிபேதம் ஏற்படாவண்ணம் திருத்தமாக உச்சரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்.

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்**

- எடுத்த தலைப்பிற்கு ஏற்ப, எடுத்துக்காட்டுகள் காட்டிப் பேசுவார்.
- இடையிடையே மேற்கோள்களைக் கையாளுவார்.
- சபையினரை ஈர்க்கும் வகையில் பேச்சினை முன்வைப்பார்.
- குறித்த நேரத்திற்குள் பேச்சு ஒன்றினைப் பேசி முடிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 5.0** : ஆக்கப்பூர்வமான செயல்திறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : விடயத் தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : திருக்குறள் (அடக்கமுடைமை)

**பாடவேளை** : 02

## கற்றற் பேறுகள்

- திருக்குறள் பற்றியும், திருவள்ளுவர் பற்றியும் அறிந்து கூறுவார்.
- அடக்கமுடைமை எனும் அதிகாரம் பற்றி விளக்கமளிப்பார்.
- குறட்பாக்களை உரத்து வாசிப்பார்.
- குறட்பாக்களை சந்திபிரித்தும் கொண்டு கூட்டியும் வாசிப்பார்/எழுதுவார்.
- அரும்பதங்களின் பொருளைக் கூறுவார்.
- குறட்பாக்களுக்குப் பொருள் எழுதுவார்.
- இவற்றிலுள்ள அணிகளை இனங்கண்டு கூறுவார்.
- குறள்களின் பொருள் நயத்தை விளக்குவார்.
- குறட்பாக்களிலுள்ள அறக்கருத்துக்களையும் விழுமியக் கருத்துக்களையும் எடுத்து விளக்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- திருக்குறள் பிறந்த காலப்பின்னணி, இந்நூலின் தனித்துவம், திருவள்ளுவர் பற்றிய செய்தி என்பனவற்றைத் தேடித் தொகுத்து மாணவர்களுக்கு வழங்குதல்.
- அகராதிப் பயன்பாட்டுடன் அருஞ்சொற்களுக்குப் பொருள் காண வழிப்படுத்துதல்.
- குறட்பாக்களைச் சந்திப் பிரித்தும், கொண்டுகூட்டியும் எழுதிக் காட்சிப்படுத்துதல்.
- ஒலிப்பதிவுகளை மாணவர்கள் செவிமடுக்க வழிப்படுத்துதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்
- ஒலிப்பேழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிப்பீடு மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- குறட்பாக்களைச் சந்திபிரித்தும் பிரிக்காமலும் ஓதுவார்.
- குறட்பாக்களைச் சந்திப்பிரித்து எழுதுவார்.
- குறட்பாக்களுக்குப் பொருள் எழுதுவார்.
- குறட்பாக்களிலுள்ள அணிகளை இனங்கண்டு கூறுவார்.
- குறட்பாக்களில் வெளிப்படும் விழுமியக் கருத்துக்களை எழுதுவார்.
- இப்பாடல்களை இயன்றளவு இசையுடன் பாடுவார்.

## பின்னிணைப்பு

### திருவள்ளுவர்




திருவள்ளுவர் பிறப்புப் பற்றிய சரியான கணிப்புப் பெறப்படவில்லை. எனினும் அவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் பிறந்ததாகவும், மதுரையில் பிறந்ததாகவும், ஆதி - பகவன் என்ற பெற்றோருக்குப் பிறந்ததாகவும் சொல்லப்படுகின்றது. தமிழிலக்கிய வரலாற்றில் திருக்குறள் சங்கமருவியகால அற நூல்களில் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு** என்று தொடங்கி, ஈரடிக் குறளில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும் திருக்குறள் என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். இவர் உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளைப் படைத்து உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெறச் செய்தவர். இவர் உலக மக்களால் **தெய்வப்புலவர், பொய்யில் புலவர், நாயனார், தேவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர்** என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றார். அவர் எழுதிய திருக்குறள், வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் இனம், மொழி, பாலின பேதங்களின்றி, காலம் கடந்தும் பொருந்துவன போல் கூறியுள்ளதால், திருக்குறளைச் சிறப்பிக்கும்விதமாக, **உலகப் பொதுமறை, முப்பால் நூல், ஈரடி நூல், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, திருவள்ளுவம்** போன்ற பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கின்றனர்.

**திருக்குறள்**

1. அறத்துப்பால் - 38 அத்திகாரங்கள்
2. பொருட்பால் - 70 அதிகாரங்கள்
3. காமத்துப்பால் (இன்பத்துப்பால்) - 25 அத்திகாரங்கள்

133 அதிகாரங்கள் உள்ள திருக்குறள், ஒரு அதிகாரத்தில் பத்து ஈரடி குறள்கள் என மொத்தம் 1330 குறள்களைக் கொண்டு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி** **13.0** : மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** **13.3** : சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும், அவற்றின் இயல்பையும் அறிந்து பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : புணர்ச்சி

**பாடவேளை** : 05

### கற்றற் பேறுகள்

- புணர்ச்சியை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- புணர்ச்சியானது இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும் என்பதனை எடுத்துக் கூறுவார்.
- இயல்புப் புணர்ச்சியை விளக்கி உதாரணங்கள் கூறுவார்.
- விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகையாக அமையும் என்பதனைக் கூறுவார்.
- விகாரப் புணர்ச்சியின் ஒவ்வொரு வகைக்கும் உதாரணம் கூறுவார்.
- சொற்களைப் புணர்ச்சி வகைக்கமையச் சேர்த்து எழுதிக் காட்டுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- நிலைமொழி என்றால் என்ன? வருமொழி என்றால் என்ன? என்பதனை உதாரணங்களுடன் முன்வைத்தல்.
- நிலைமொழியையும் வருமொழியையும் வழங்கிப் புணர்த்த வழிகாட்டுதல்.
- புணர்த்தும் போது இயல்பையும் விகாரத்தையும் விளக்குதல்.
- இயல்புப் புணர்ச்சியைத் தெளிவாக உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குதல்.
- விகாரப் புணர்ச்சியைத் தெளிவாக உதாரணங்களைப் பயன்படுத்தி முன்வைத்தல்.
- விகாரப் புணர்ச்சியின் வகைக்கு உதாரணம் காட்ட வழிகாட்டுதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுளை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- நிலைமொழி வருமொழி - பலாப்பழம் - பலா - நிலைமொழி

  பழம் - வருமொழி

இயல்புப் புணர்ச்சி - நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது இவ்விரண்டின் தொடக்கத்திலும் இறுதியிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென்றால் அது இயல்புப் புணர்ச்சியாகும்.

(உ-ம்) வாழை + மரம் = வாழை மரம்

விகாரப் புணர்ச்சி - நிலை மொழியும் வருமொழியும் சேரும்போது மாற்றங்கள் ஏற்படுமானால் அது விகாரப் புணர்ச்சியாகும். அப்புணர்ச்சி மூவகைப்படும்.

i **தோன்றல்** - வாழை + குலை = வாழைக்குலை ('க்' தோன்றியுள்ளது)

ii **கெடுதல்** - மரம் + வேர் = மரவேர் ('ம்' கெடுதல்)

iii **திரிதல்** - கடல் + கரை = கடற்கரை ('ல்' எனும் மெய்யெழுத்து 'ற்' எனும் மெய்யெழுத்தாக திரிபடைந்துள்ளது.)

### தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- புணர்ச்சி வகைகளை விளக்கும் அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

### கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- நிலைமொழி, வருமொழிக்கு உதாரணம் காட்டுவார்.
- சொற்புணர்ச்சியை வரைவிலக்கணப்படுத்திக் காட்டுவார்.
- புணர்ச்சிகளை உதாரணம் மூலம் தெளிவுபடுத்திக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேர்ச்சி 7.0** : இரசனைக்காகவும், ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : படைப்புக்களை வாசித்து நயப்பார்.

**விடய உள்ளடக்கம்** : மலையகச்சூழலில் பிறக்கும் பாடல்கள்

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்

- கட்டுரையின் பிரதான கருத்தையும் துணைக் கருத்தையும் கிரகித்து முன்வைப்பார்.
- மலையகச் சூழல், எவ்வாறு அந்தப் பிரதேசத்தின் நாட்டார் பாடல்களின் தோற்றத்திற்குச் செல்வாக்குச் செலுத்தியது என விளக்குவார்.
- மலையக நாட்டார் பாடல்கள் தமிழக நாட்டாரியலை அடியொற்றிய அதே சமயம் மலையகத்து பிரதேச வாழ்வியலைப் பிரதிபலிப்பதாகப் பிறந்தன என்பதை விளக்குவார்.
- பாடல்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்திக் கூறுவார்.
- இப்பாடல்களை முடிந்தளவு இசை கூட்டிப் பாடுவார்.
- பாடல்களில் வெளிப்படும் விழுமியக் கருத்துகளைக் கூறுவார்.
- மலையக மக்களின் வாழ்வியலோடு நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஆண்டுகள், சம்பவங்கள் என்பன சில இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன அவற்றை அறிந்து கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- இக்கட்டுரையின் முக்கியமான அம்சங்களை டிமைன் தாளில் எழுதிக் காட்சிப்படுத்துதல்.
- இந்த நாட்டார் பாடல்களை இசை கூட்டிப் பாடி ஒலிப் பதிவு செய்து கற்பித்தல் சாதனமாகப் பயன்படுத்துதல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- தாலாட்டுப் பாடல்கள்
- ஒப்பாரிப் பாடல்கள்
- சூழற் செல்வாக்குப் பாடல்கள்
- தொழிற் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இக்கட்டுரையில் மலையக வட்டார வழக்குச் சொற்கள் பயின்று வந்துள்ளன. இந்தச் சொற்களுக்குப் பொருள் அறிதல் அவசியம்.

  மடிப்பிச்சை - மடிச்சீலையில் ஏந்திப் பெறும் பிச்சை

  கொழுந்து - தேயிலைத் தளிர்

  அரைப்பேரு - அரை நாள் சம்பளம் பெறுவதற்குப் பெயர்போடுதல்.

  பெரியாங்கங்காணி - தேயிலைத் தோட்ட வேலைகளைக் கண்காணிக்கும் தலைமைக் கங்காணி.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடநூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்

- இக்கட்டுரையின் ஆசிரியர் சாரல் நாடன் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவார்.
- சூழலின் செல்வாக்கு எவ்வாறு மலையக நாட்டார் பாடல்களின் பிறப்புக்கு வழிகோலியது என்பதை விளக்குவார்.
- இலங்கைக்கு குடிபெயர்ந்து வந்த மலையக மக்களின் வாழ்வில் அவர்களின் தாயகமான தமிழ் நாட்டுடனான பாரம்பரியத் தொடர்பு எவ்வாறு அமைந்து காணப்பட்டது என்பதை விபரிப்பார்.
- மலையகப் பிரதேச நாட்டார் பாடல்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்திக் கூறுவார்.
- இப் பாடத்தில் வரும் பாடல்களில் பயின்று காணப்படும் விழுமியக் கருத்துக்களைக் கூறுவார்.
- இப்பாடல்களை இயன்றளவு இசையுடன் பாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය 8 (දෙ) - ගුරු මාර්ගෝපදේශය
2017/T/08/TG-27/06/8,000

E.P.D. (SALES DIVISION)
D01
2020082
TG TAMIL LANG: & LITER: GR - 8
Rs. 167.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org